# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
# பத்தாவது பாராளுமன்றம்
# (முதலாவது கூட்டத்தொடர்)

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 390**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின்
நிலையியற் கட்டளை இலக்கம் 125(5) இன் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற
2025.06.01 ஆம் திகதியிலிருந்து 2025.08.31 ஆம் திகதி வரையான
காலப்பகுதிக்கான

## பொது மனுக்கள் பற்றிய குழுவின்
## இரண்டாவது அறிக்கை

**பொது மனுக்கள் பற்றிய குழுவின் தவிசாளர்**

**பாராளுமன்ற உறுப்பினர்**
**கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க அவர்களால்**

2025 டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

**2025 டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி**
**அச்சிடுவதற்கு இலங்கைப் பாராளுமன்றம் கட்டளையிட்டது**

# அறிக்கை

**பொது மனுக்கள் பற்றிய குழு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 125(1) இன் பிரகாரம் பொது மனுக்கள் பற்றிய குழுவொன்று இருத்தல் வேண்டும்.

**பொது மனுக்கள் பற்றிய குழுவின் அங்கத்தவ உறுப்பினர்கள்**

1. கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க பா.உ (தவிசாளர்)
2. கௌரவ உபாலி சமரசிங்ஹ பா.உ
3. கௌரவ ரோஹித அபேகுணவர்தன. பா.உ
4. கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ பா.உ (2025.09.10 ஆம் திகதியிலிருந்து)
5. கௌரவ திலிப் வெதஆரச்சி பா.உ
6. கௌரவ கே.காதர் மஸ்தான் பா.உ
7. கௌரவ இம்ரான் மகரூப் பா.உ
8. கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன பா.உ
9. கௌரவ வருண லியனகே பா.உ
10. கௌரவ அஜித் அகலகட பா.உ
11. கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம பா.உ
12. கௌரவ உபுல் கித்சிறி பா.உ
13. கௌரவ சமிந்த லலித் குமார பா.உ
14. கௌரவ அஜித் கிஹான் பா.உ
15. கௌரவ அசோக குணசேன பா.உ
16. கௌரவ எம். ஏ. எம். தாஹிர் பா.உ
17. கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க பா.உ
18. கௌரவ நந்தன பத்மகுமார பா.உ
19. கௌரவ நிஷாந்த பெரேரா பா.உ
20. கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ பா.உ
21. கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க பா.உ
22. கௌரவ. சானக மாதுகொட பா.உ
23. கௌரவ சுனில் ரத்னசிரி பா.உ
24. கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே பா.உ
25. கௌரவ மனோஜ் ராஜபக்ஷ் பா.உ
26. கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ பா.உ
27. கௌரவ ஜகத் விதான பா.உ
28. கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல் பா.உ
29. கௌரவ முஹம்மட் பைசல் பா.உ

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரிற்கான பொது மனுக்கள் பற்றிய குழு, 2025 ஓகத்து மாதம் 7 ஆம் திகதி பொது மனுக்கள் தொடர்பான குழுவின் முதலாவது அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்ததுடன், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 125(5) இன் பிரகாரம் குழுவின் இரண்டாம் அறிக்கை 2025.12.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்திள் நிலையியற் கட்டளை 125(5) இன் பிரகாரம் பொது மனுக்கள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கையில் 2025 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 2025 ஓகத்து மாதம் 31 ஆம் திகதி வரையான காலத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பொது மக்களின் மனுக்கள் தொடர்பில் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மற்றும் அவதானிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் இந்த அறிக்கையூடாக சமர்ப்பிக்கப்படுகிறது.

பொது மனுக்கள் பற்றிய குழு, அதன் முதலாவது அறிக்கை மூலம் பொது மக்களின் மனுக்களை விசாரணை செய்வதற்காக பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தல், குழுவின் பணிப் பொறுப்புக்கள், குழுவின் தற்போதைய செயற்பாடுகள், குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பிலான நடவடிக்கைகள், குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானங்கள், குழு அவதானித்த விசேட விடயங்கள் மற்றும் ஏனைய அவதானிப்புக்கள் என்பன தொடர்பில் பகுப்பாய்வு செய்து விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

குழுவின் முதலாவது அறிக்கை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை https://www.parliament.lk/uploads/comreports/1759903869089793.pdf#page=1 என்ற இணைப்பின் ஊடாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

நிலையியற் கட்டளை 125(6) மற்றும் 125(7) இன் அடிப்படையில் முதலாவது அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட 39 மனுக்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒன்பது அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொது மனுக்கள் பற்றிய குழுவினால் 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஓகத்து மாதம் 31 ஆம் திகதி வரை மனுக்களை விசாரணை செய்வதற்காக 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், விசாரணை செய்யப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை 65 ஆகும். அவற்றுள் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை 25 ஆகும். மேலும் பரிந்துரைகள் வழங்கப்படாத மனுக்களின் எண்ணிக்கை 26. பரிந்துரைகள் வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டுள்ள மனுக்களின் எண்ணிக்கை 14 ஆகும்.

விசாரணை செய்யப்பட்ட 65 மனுக்கள் தொடர்பான தகவல்கள், எதிர்பார்க்கப்படும் நிவாரணங்கள், குழுவினால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் குழுவின் பரிந்துரைகள் – இணைப்பு I இல் காட்டப்பட்டுள்ளது.

## பொது மனுக்கள் பற்றிய குழுவின் பணிப் பொறுப்புகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இலக்கம் 30 இன் பிரகாரம், உறுப்பினர் ஒருவர் பொது மக்களின் மனு ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அது பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். அதன் பின்னர் நிலையியற் கட்டளை இலக்கம் 125(3) இன் பிரகாரம் அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

**நிலையியற் கட்டளை 125(3)** "பகிரங்க அலுவலரொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதென பொது மனுக்கள் பற்றிய குழு கருதுமிடத்து, பொது மனுக்கள் பற்றிய குழு அத்தகைய மனுபற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்."

பொது மனுக்கள் பற்றிய குழுவால் **நிலையியற் கட்டளை இலக்கம் 125(3) இன் பிரகாரம்** விசாரணை செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான தனது இறுதி அபிப்பிராயத்துடன், குறித்த விசாரணையின் போது அவதானிக்கப்பட்ட விடங்களையும் **இவ்வறிக்கையில் உள்ளடக்கியுள்ளதுடன், நிலையியற் கட்டளை இலக்கம்125(6) மற்றும் 125(7) இன் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக இவ்வறிக்கை கௌரவ சபாநாயகருக்கு பொது மனுக்கள் பற்றிய குழுவால் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**நிலையியற் கட்டளை 125 (6)** "அறிக்கையானது சபாபீடத்தில் இடப்படும்போது, சபாநாயகர் அத்தகைய அறிக்கையின் உள்ளடக்கத்தினை உரிய அமைச்சருக்கு அவரது அவதானிப்புகளுக்காக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வவதானிப்புகள் எட்டு வாரக் காலப்பகுதியினுள் அமைச்சரினால் எழுத்துமூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்."

**நிலையியற் கட்டளை 125(7)** "உரிய அமைச்சரின் அவதானிப்புகளைப் பெற்ற பின்னர் சபாநாயகர் அத்தகைய அவதானிப்புகளின் பிரதியொன்றைத் தவிசாளருக்கும் மனுவைச் சமர்ப்பித்த பாராளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். வழங்கப்பட்ட பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாதவிடத்து தகுந்த தீர்வுகளை முன்னெடுக்குமாறு அமைச்சரிடம் கோரப்பட வேண்டும். அமைச்சரினால் ஒரு மாதகாலத்திற்குள் தீர்மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதனை நிறைவேற்றாமைக்கான காரணங்களை எழுத்துமூலம் முன்வைப்பதுடன் நிவாரணம் வழங்குவதற்காகக் கருத்திற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கையை குறிப்பிட வேண்டும்."

**மனுக்களை விசாரணை செய்யும்போது குழுவினால் நிறைவேற்றப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள்.**

i. அரச பாடசாலைகளில் எந்தவொரு தரத்திற்கும் மாணவர்களைச் சேர்ப்பது பற்றிய உள்ளடக்கம் கொண்ட மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமை.

ii. ஏதேனுமொரு மனுவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மனுவை சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதன் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சென்றிருப்பின், குறித்த நீதிமன்ற நடவடிக்கை நிறைவடையும் வரை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமை.

iii. குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிராகரிக்கப்பட்ட / தள்ளுபடி செய்யப்பட்ட மனு ஒன்றை குழுவினால் மீள் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலே தவிர அதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமை.

iv. அரச கொள்கைகளுக்கு முரணான விடயங்கள் தொடர்பிலான மனுக்களை சமர்ப்பித்த மனுதாரர்களுக்கு அழைப்பு விடுக்காமாலே விசாரணை செய்தல்.

v. மனுவிற்குப் பொறுப்பான பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் அங்கத்தவரல்லாத சந்தர்ப்பத்தில் அந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள தினத்தில் ஏற்புடைய உறுப்பினருக்கு அறிவித்தல் மற்றும் அந்த விசாரணை நடைபெறும் சந்தர்ப்பத்தில் உறுப்பினருக்கு பங்குபற்றுவதற்கு அனுமதியளித்தல்.

vi. 15 வருடங்களுக்கு முற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் முதன் முறையாக குழுவிற்கு முன்வைக்கப்படும் மனுக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதில்லையென்பது.

vii. மனு தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் மனுதாரர் ஆர்வமற்றிருப்பின் குறித்த மனுவின் நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்.

viii. ஏதேனும் ஒரு மனு தொடர்பில் குறித்த அமைச்சிடமிருந்து கோரப்படும் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் கிடைக்கப்பெறாதவிடத்து அந்த மனுவை அமைச்சின் அறிக்கையின்றியே பரிசீலித்தல்.

**குழுவின் விசேட அவதானிப்புக்கள்.**

i. பல்வேறு சந்தர்ப்பங்களில் சுற்றுநிருபங்கள் மூலம் அரச சேவைக்கு கொள்கை ரீதியான தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களை சேர்த்துக் கொண்டதன் காரணமாக ஓய்வூதியம் வழங்குதல், கணக்கிடல் போன்ற விடயங்கள், பணியில் நிரந்தரமாக்கல், முனைப்பான சேவைக் காலத்தைக் கணிப்பிடல் போன்றவற்றில் பாரிய பிரச்சினைகளுக்கு மனுதாரர்கள் போன்றே அரச ஊழியர்களும் முகங் கொடுக்கிறார்கள் என்பதுடன், 45 வயதின் பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொடுத்தல் தொடர்பிலான மனுக்களை முன்வைக்கும் போக்கு அதிகரித்து வருவதுடன் அது தொடர்பிலான சகல தரப்பினரினதும் தலையீட்டுடன் கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் குழு அவதானித்தது.

ii. ஓய்வூதிய உரிமையற்ற ஊழியர்களுக்காக ஒரு முறை மாத்திரம் செலுத்தப்படும் ரூ. 50,000/= கருணைக் கொடுப்பனவினை அதிகரிக்க வேண்டுமெனவும், அது தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டியமை

iii. அரச சேவையிலுள்ள அதிகாரிகள் தொடர்பில் சிக்கலான நிலைமைகள் உருவாகும்போது அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக நீண்டகாலமாக தீர்க்கப்படாத பிரச்சினைகளால் மனுதாரர்கள் (அரச ஊழியர்கள்) பாதிக்கப்பட்டிருப்பதுடன்.

iv. அவ்வாறு துரிதமாக சரிப்படுத்தல்கள் / தீர்வுகள் வழங்கப்படாமையினால் மீண்டும் சரி செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் காணப்படாமையினால் மனுதாரர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றமை.

பொது மனுக்கள் பற்றிய குழு என்ற அடிப்படையில் சட்ட ஏற்பாடுகள் அல்லது நியாயமன காரணங்களின்றி, மனுதார்கள் சார்பில் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கான நிவாரணங்கள் மற்றும் உரித்துகள் தொடர்பாக பரிந்துரைக்க முடியாததால் மனுதாரர்களுக்கு மெய்யாகவே அநீதி இழைக்கப்படுகின்றமை

v. துரிதமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை / ஒழுக்காற்று கட்டளைகளை வழங்காததால் மனுதாரர்கள் (அரச சேவையில் ஈடுபட்டிருந்தவர்கள்) பாதிக்கப்பட்டிருக்கின்றமை

vi. அரசியல் பழிவாங்கல் குழுக்களை அமைத்ததல் / தாபித்தல் மற்றும் அவற்றால் பரிந்துரைகள் வழங்கப்படும் போது பிரச்சினைகள் ஏற்படல்.

vii. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினூடாக விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள் மனுதாரர்களின் மனுவின் மூலம் வெளிப்படுமாக இருந்தால் அது தொடர்பில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியமை

viii. நியதிச்சட்ட நிறுவனம் ஒன்றின் மூலமான நியமனம் / பதவி உயர்வு / நேர்முகப் பரீட்சை நடத்தும்போது வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதள் மூலம் பெரும்பாலான பிரச்சினைக்குரிய / முரண்பாடுகளுக்குரிய நிலைமைகளைத் தீர்க்க வேண்டியமை

ix. நிர்வாக சுற்றுநிருபங்களை வெளியிடும் போது இரு கருத்துக்களைக் புலப்படுத்து வகையிலான சொற்கள் / தெளிவற்ற அல்லது அவ்வாறான பொருள் புலப்படா வகையில் முறையாக வெளியிடல்

**இணைப்பு - I**

1) **விதப்புரை வழங்கப்பட்டுள்ள மனுக்கள்**

1. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 01 | திருமதி எஸ்.எல். பாதிமா ரியானா COM/PP/2025/182 கௌரவ சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டது. 2025.06.03 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: ED/2/29/3/2/255 திகதி : 2016.12.19 | 1992 ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியராக மமா/கம்/நாவலப்பிட்டி கனிஷ்ட வித்தியாலயத்தில் கடமையாற்றினார் என்பதுடன் 1996 ஆண்டு பயிலுனர் ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்து 110 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார் என்றும், அதிலும் பார்க்கக் குறைவான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் கூட நியமனம் பெற்றுள்ள போதிலும் மனுதாரருக்கு நியமனம் கிடைக்கவில்லை என்றும், 2015 ஆண்டு தற்காலிக ஆசிரியர் உதவியாளர் நியமனம் கிடைத்தது என்றும், இது தொடர்பாக விசாரணை செய்து நிவாரணம் வழங்குமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) ஆசிரியர் உதவியாளர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிபந்தனையான 05 வருட காலப்பகுதிக்குள் ஆசிரியர் பயிற்சியை பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாட்டை மனுதாரர் பூர்த்தி செய்யாமை காரணமாக மேற்படி பதவியில் நிரந்தரமாக்கத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யவில்லை என்பது.<br><br>(ஆ) 1996 ஆண்டு நடாத்தப்பட்ட ஆசிரியர் பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையில் 110 புள்ளிகள் பெற்றுள்ள போதும் நேர்முகப் பரீட்சையில் மனுதாரர் புள்ளி | ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படுகின்ற கருணை அடிப்படையிலான கொடுப்பனவை உரித்தாக்கிக் கொடுப்பதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வது உகந்தது என்பது விதப்புரை செய்யப்பட்டது. அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கும் போது மனுதாரருக்கு தனிப்பட்ட வகையில் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், இதன் போது மனுதாரரின் க.பொ.த. (சா/தரம்) மற்றும் க.பொ.த. (உ/தரம்) கல்வித் தகைமைகள் போன்றவற்றை பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக் கொண்டுள்ள முறையானது, முறையாக உறுதி செய்யப்படாமை காரணமாக, 1998 ஆண்டு ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொடுக்காமைக்கான குறித்த காரணத்தை தெளிவுபடுத்திக் கொள்ள முடியவில்லை என்பது மற்றும் உரிய ஆவணங்கள் மற்றும் போதியளவு தகவல்கள் இன்றி பயிலுனர் ஆசிரியர் நியமனத்திற்கு விதப்புரை வழங்க முடியாது என்பது<br><br>(இ) பயிலுனர் ஆசிரியர் நியமனம் வழங்குமாறு 08 ஆம் மற்றும் 09 ஆம் பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பது. | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 02 | திரு டபிள்யு.கே.எஸ். ருக்ஷான் COM/PP/2025/204 கௌரவ ரீ.கே. ஜயசுந்தர, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.06.03 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: ED/04/60/04/02/SP/15/2024 திகதி : 2024.12.31 | இலங்கை அதிபர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலரான மனுதாரருக்கு கா/ ரிச்சட் பத்திரண வித்தியாலத்திலிருந்து கா/மகிந்த வித்தியாலயத்திற்கு இடமாற்றம் கிடைத்த போதிலும், மனுதாரரின் தரத்தைச் சேர்ந்த அலுவலர் ஒருவரை அப்பதவிக்கு விதப்புரை செய்து தமது இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் இடமாற்றத்தை மீண்டும் காலி மகிந்த கல்லூரிக்குப் பெற்றுத் தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | (அ) கா/மகிந்த வித்தியாலயத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட போதிலும், சேவைசார் அவசியத்தன்மையின் பேரில் அதிபர் சேவையில் தரம் III ஐச் சேர்ந்த அலுவலரான மனுதாரரின் சேவையை, அதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியாமை காரணமாக அதிபர் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அல்லது கல்வி நிருவாக சேவையின் தரம் II / III ஐச் சேர்ந்த அலுவலர் ஒருவரை நியமனம் செய்யுமாறு கா/மகிந்த வித்தியாலயத்தில் அப்போதிருந்த அதிபர் கல்வி அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்ததன் காரணமாக மனுதாரரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது என்பது மற்றும் மீண்டும் கா/மகிந்த | 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அதிகாரி ஒருவர் ஓய்வு பெறுவதனால் கா/மகிந்த கல்லூரியில் ஏற்படவுள்ள இலங்கை அதிபர் சேவை வெற்றிடத்திற்கு, தற்போது அதிபர் தரம் II இல் உள்ள அதிகாரியான மனுதாரரை நியமிக்குமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | வித்தியாலயத்திற்கு இடமாற்றம் கோரப்பட்ட போதிலும் அச்சந்தர்ப்பத்தில் அப்பாடசாலையில் அதிபர் சேவையில் வெற்றிடம் இல்லாமை காரணமாக அக்கோரிக்கை கல்வி அமைச்சினால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பது.<br><br>(ஆ) முறையான இடமாற்றம் பெற்று புதிய சேவை நிலையத்திற்கு கடமைக்கு சமூகமளிக்கும் போது கடமையைக் கையளிக்காமை சட்டத்துக்கு முரணான செயல் என்பது மற்றும் மனுதாரர் சமமான மட்டத்தில் நடாத்தப்படவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது என்பது. | |
| 03 | திரு ஜீ.எம். லயனல்<br>COM/PP/2025/155 | ஓய்வு பெற்ற அதிபரான மனுதாரர், அரசாங்க | (அ) வத்தேகம வலயக் கல்வி | 2007.04.30 முதல் 2007.09.07 வரை |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | கௌரவ தனுர திசாநாயக, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. 2025.06.17 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : ED/02/29/03/02/413 திகதி : 2022.01.19 | சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 2007.09.07 ஆம் திகதி வரையான சேவை நீடிப்பை வழங்கி ஓய்வுபெற்ற திகதியை 2007.09.07 ஆக திருத்தம் செய்யுமாறு கோரி 09 ஆவது பாராளுமன்றத்தில் பொது மனுக்கள் பற்றிய குழுவிடம் சமர்ப்பித்திருந்த மனு விசாரிக்கப்பட்டு, 2007.09.07 திகதி வரையான காலப்பகுதியை ஓய்வூதியம் கணிப்பிடுவதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளுமாறு வழங்கப்பட்ட தீர்ப்பு இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டு மனுதாரர் நியாயத்தை நிறைவேற்றித் தருமாறு கோரியுள்ளார். | அலுவலகத்தினால் மனுதாரர் கோரியுள்ள சேவை நீடிப்பு தொடர்பான ஆவணங்களை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பது தாமதமடைந்தமை காரணமாக 2007.04.30 திகதி ஓய்வு பெற வேண்டி ஏற்பட்டுள்ளது என்பது<br>(ஆ) மேற்படி சேவை நீடிப்பு உரிய நேரத்தில் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் 2007.09.07 வரை சேவையாற்றுவதற்கான வாய்ப்பு இருந்தது என்பது<br><br>(இ) சேவை நீடிப்பை இழந்ததனால் அதிபர் கொடுப்பனவு உட்பட ஏனைய கொடுப்பனவுகளை இழந்துள்ளமை காரணமாக நிதிசார் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது<br><br>(ஈ) மனுதாரரின் | நீடிக்கப்பட்ட சேவைக் காலத்திற்குள் வழங்கப்பட வேண்டிய சம்பளத்தைக் (அனைத்து கொடுப்பனவுகள்உட்பட) கணக்கிட்டு, 2007.04.30 முதல் 2007.09.07 வரை பெற்றுக்கொண்ட ஓய்வூதியத் தொகையுடனான வித்தியாசத்தின் நிதிப் பெறுமதியை மனுதாரருக்குச் செலுத்த விதப்புரை செய்யப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | சேவைக் காலத்தை, ஓய்வூதியம் கணிப்பீடுவதற்கு ஏற்புடையதாக்கிக் கொள்ளக்கூடிய உச்சளவான சேவைக் காலமான 30 வருடங்களை விஞ்சியுள்ளதனால் சேவை நீடிப்பு காரணமாக ஓய்வூதியத்தில் எந்தவொரு மாற்றமும் ஏற்படுவதில்லை என்பது<br><br>(உ) நிறுவன தாமதங்கள் காரணமாக மனுதாரர் நிதி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார் என்பது. | |
| 04 | திருமதி. எஸ்.ஏ.எஸ். பிரதீபிகா சுரேந்திர COM/PP/2025/237 கௌரவ கயந்த கருணாதிலக்க, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.07.25 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் | மனுதாரர், தான் நுண்கலைப் பட்டதாரி என்றும், 1997 முதல் மார/விஜித மகா வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியராக எந்தவித ஊதியமும் இன்றி பணியாற்றி வருவதாகவும், 2012.01.18 ஆம் திகதி அமைச்சினால் நடாத்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்களை | (அ) க.பொ.த. (உ.த.) பரீட்சையின் பெறுபேறுகள் போதியதாக இல்லாமை காரணமாக ஆசிரியர் உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்படவில்லை என்பது. | மனுதாரரின் கல்வித் தகைமைகளை முறையாகப் பரிசோதித்து பட்டதாரி அடிப்படையில் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 இன் தரம் 1 இற்கு நியமனம் வழங்குவதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்ந்துபார்த்து |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | இல.: ED/05/152/03/01 /2017-29 திகதி : 2017.05.31 | நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சையில் பங்கேற்றதாகவும், ஆனாலும் அனைத்து கல்வி மற்றும் பிற தகைமைகளை பூர்த்தி செய்திருந்த போதிலும் நியமனம் வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு, நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | (ஆ) 1997 முதல் 2014 வரை சுமார் 17 வருட காலம் நடன ஆசிரியையாக பாராட்டத்தக்க சேவையை மனுதாரர் மார/விஜித மகா வித்தியாலயத்திற்கு தொண்டர் அடிப்படையில் வழங்கியுள்ளார் என்பது<br><br>(இ) நடனப் பாடம் தொடர்பில் மேலதிக பல தகைமைகளைப் பெற்றுள்ள மனுதாரர் தற்போது நுண்கலைப் பல்கலைக் கழகத்தின் அரங்கட்டற்கலை பற்றிய (வெளிவாரி) பொதுப் பட்டப் பாடநெறியின் இறுதி ஆண்டுப் பட்டத்தைக் கற்றுள்ளார் என்பது. | மனுதாரருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் ஏற்புடையவாறு மற்றும் முன் உதாரணமாக இருக்காதவாறு இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 இன் தரம் 1 இற்கு நியமனம் வழங்கத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |
| 05 | திரு. ஜி. ஜயதிஸ்ஸ COM/PP/2025/319 கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.07.25 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் | இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக் கழகத்தில் பட்டப் பின் படிப்பு மற்றும் வெளிவாரிக் கற்கை நிலையத்தின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரதிப் பதிவாளராக கடமையாற்றியதாகவும், 2012.09.28 ஆம் திகதி முதல் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் சேவை | (அ) 2024.01.24 ஆம் திகதி பொது மனுக் குழுவில் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய மனுதாரரின் ஊழியர் சேமலாப நிதியத்தை கணிப்பிட்டுள்ள முறை தொடர்பாக தொழில் ஆணையாளர் | மேற்படி சேமலாப நிதியத்தை ஒரு மாத காலப்பகுதிக்குள் மனுதாரருக்குச் செலுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டது. மேலும், இந்த |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | இல. : HE/AD/03/ ம.பெ.க.ச(2021/515) திகதி : 2021.08.17 | இடைநிறுத்தப்பட்டதென் றும், பின்னர் 60 வயதில் ஓய்வுறுத்தப்பட்டு நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்டது என்றும், மேற்படி சகல கொடுப்பனவுகளும் சரியாக செலுத்தப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், ஊழியர் சேமலாப நிதியம், நியாயாதிக்க கொடுப்பனவுகள் உட்பட ஏனைய கொடுப்பனவுகள், சம்பளம் மற்றும் சிறப்புரிமைகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | நாயகத்திடம் அது பற்றிய அறிக்கையைக் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளது என்பது.<br><br>(ஆ)தொழில் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, மனுதாரரின் ஊழியர் சேமலாப நிதிக்கான கணக்கீடுகள் இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக அதிகாரிகளால் சட்டப்பூர்வமாக தயார் செய்யப்பட்டுள்ளன என்பது.<br><br>(இ) ஊழியர் சேமலாப நிதிக்காக வழங்கப்பட்ட 2015.12.31 திகதிய காசோலையை மனுதாரர் நிராகரித்துள்ளார் என்பது. | விதப்புரை குழுவின் இறுதி முடிவு என்றும், மனுதாரர் குறித்த தொகையை ஏற்றுக் கொள்ள இணங்கவில்லை எனின் அதற்காக நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்ல மனுதாரருக்கு வாய்ப்பு உள்ளது என்றும் அறிவிக்கப்பட்டது. |
| 06 | திரு. வை.ஆர். வஜிர பிரேமவர்தன | களனிப் பல்கலைக்கழகத்தில் | (அ) பலவீனமான சேவைக்கு வருகை | மனுதாரரின் 34 |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | COM/PP/2025/153 கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.06.17 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: HE/AD/03/பொ.ம.கு. (2024/1447) திகதி : 2024.09.11 | பாதுகாப்பு அலுவலராகப் பணியாற்றியதாகவும், மேல் தரத்தைச் சேர்ந்த பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பாதுகாப்பு அலுவலர் சிறப்புத் தரத்திற்கு பதவி உயர்வு ஆகிய இரண்டு பதவி உயர்வுகளையும் இழந்ததாகவும் குறிப்பிட்டு, மேற்படி பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை செய்து தருமாறு கோரி மனுதாரர் இந்தப் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | மற்றும் அறிவிக்காமல் சேவைக்கு சமூகமளிக்காமை காரணமாக 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் உரித்தாக வேண்டியிருந்த பதவி உயர்வுகளை இழந்துள்ளார் என்பது மற்றும் பிந்தைய சந்தர்ப்பங்களில் பதவி உயர்வுக்காக விண்ணப்பிக்குமாறு பல்கலைக்கழக நிருவாகத்தால் மனுதாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவர் பதவி உயர்வுகளுக்கு விண்ணப்பிக்கவில்லை என்பது, மேலும் 2003 ஆம் ஆண்டில் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்து பிரிவுத் தலைவரின் பரிந்துரையைப் பெற்றிருந்த போதிலும், அவர் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கவில்லை என்பது.<br><br>(ஆ) அரசியல் பலிவாங்கல் மற்றும் விசாரணைக் குழுவினால் 2002 குழுவின் அவதானிப்புக்கு அமைய மனுதாரருக்கு | வருட சேவைக்காலத்தைக் கருத்திற்கொண்டு, அரசியல் காரணங்களால் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டவர்களுக்கு நிவாரணம் வழங்க தாபிக்கப்பட்ட விசாரணைக் குழு வழங்கியுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு சில நிவாரணங்களை வழங்குவதற்கு களனி பல்கலைக்கழக நிர்வாகத்தினால் விதப்புரை செய்யப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கமைய மேற்படி பதவி உயர்வு வழங்கப்படவில்லை என்பது. | |
| நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | | | | |
| 07 | திரு. டி.கே.எம். மத்தும பண்டார COM/PP/2025/214 கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன், பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.07.22 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: MF1/02/20/EXC/02/ PPC-01 திகதி : 2017.06.06 | மதுவரிகள் ஆணையாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் கடிதங்களை சாட்டுதல் செய்யும் முறையியலுக்கு அமைய இல. ர.பி. 04 மதுவரி உரிமப்பத்திரத்தை சாட்டுதல் செய்துகொண்டு 2002.01.01 திகதி முதல் மதுபானம் விற்பனை செய்யும் வியாபாரம் பேணிவரப்பட்டது என்றும், பின்னர் சாட்டுதல் செய்தவர் உயிரிழந்த பின் மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான உதவி மதுவரிகள் ஆணையாளரினால் 2005.08.03 திகதி தமது வியாபார நிலையம் முத்திரையிடப்பட்டது என்றும், அது தொடர்பாக மனுதாரர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த CA 1491-2005 (ரிட்) வழக்கில் 2005.12.31 வரை வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுசெல்ல | (அ) 2005.06.21 திகதி உரிமப்பத்திரத்தின் முதல் உரிமையாளரினால் மனுதாரருக்கு உரிமப்பத்திரம் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் 2005.07.10 திகதியைக் கொண்டதாக முதலாவது உரிமையாளர் அவரின் உறவுமுறை மகன் ஒருவர் என்று கூறப்படுகின்ற ஆளொருவருக்கு உரிமப்பத்திரத்தை சாட்டுதல் செய்துள்ளதாக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும், 2005. 07.17 திகதி முதல் உரிமையாளர் உயிரிழந்துள்ளார் என்பது | உரிமப்பத்திரத்தை கொள்வனவு செய்த புதிய தரப்பினருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மனுதாரருக்கு உரிமப்பத்திரத்தை மீண்டும் சாட்டுதல் செய்ய முறையியல் ஒன்றைத் தயார் செய்யுமாறு 2022.12.01 திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரை தத்துவமற்றதாக்கப் பட்டதுடன், இந்த சம்பவத்தை பொலிஸ் மாஅதிபரிடம் ஆற்றுப்படுத்தி அது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஊடாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், எனினும் உயிரிழந்த சாட்டுதல் செய்தவரின் மரணம் இடம்பெற்று மூன்று மாதங்களின் பின்னர் வேறு ஒருவர் மனுதாரரின் மதுவரி உரிமப்பத்திரத்திற்கு உரிமை கோரி CA 1491-2005 ஆம் இலக்க வழக்கில் இணைந்துகொண்டுள்ள தாகவும், மேற்படி உரிமப்பத்திரத்திற்கு உரிமையாளர்கள் இருவர் உள்ளமை தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் மதுவரிகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டுள்ள போதிலும் நீதியான விசாரணை மேற்கொள்ளப்படாமை காரணமாக மதுவரிகள் ஆணையாளர் நாயகம் மேற்படி உரிமப்பத்திரம் மனுதாரருக்கு உரித்தாவதில்லை என்றும், பின்னர் முன்வந்திருந்த ஆளுக்கு உரித்தானது என்றும் கடிதம் வெளியிட்டுள்ளமை காரணமாக மீண்டுமொரு தடவை CA 1049-2007 ஆம் இலக்கத்தின் கீழ் ரிட் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அவ்வழக்கு 2009.07.07 | (ஆ) மதுவரிகள் திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த சத்தியக்கடதாசிகளின் மூலப் பிரதிகள், போலி ஆவணங்கள் சமர்ப்பித்ததாக மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குக்குத் தேவையானதெனக் குறிப்பிட்டு நுவரெலியா பொலிஸார் கையொப்பமிட்டு கொண்டு சென்றுள்ளார்கள் என்பது மற்றும் மேற்படி ஆவணங்கள் காணாமற் போயுள்ளதாக அறியத்தரப்பட்டுள் ளது என்பது.<br><br>(இ)இந்த உரிமப்பத்திரத்தை சாட்டுதல் செய்யும் செயன்முறையில் கடும் மோசடி இடம்பெற்றுள்ளமை அவதானிப்புச் செய்யப்படுகின்றது என்பது | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | திகதி விசாரிக்கப்பட்டு, மதுவரிகள் ஆணையாளர் நாயகம் மேற்படி உரிமப்பத்திரம் மனுதாரருக்கு உரித்தாவதில்லை என்றும், மற்றைய ஆளுக்கு உரித்தாகும் என்றும் வெளியிட்டுள்ள கடிதத்தை தத்துவமற்றதாக மற்றும் ரத்துச் செய்யப்படதாகவும், 2022.12.01 திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் விதப்புரைக்கு அமைய இந்த உரிமப்பத்திரத்தை மனுதாரருக்கு சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| 08 | திருமதி. ரசிகா கிருஷாந்தி COM/PP/2025/151 கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ. இனால் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. 2025.08.21 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: MF1/11/01/03/2022/ Vol-1 | மனுதாரரின் கணவர் 2017.07.21 திகதி தனியார் வங்கிக் கடன் பெற்றுள்ளார் என்றும், பின்னர் மனுதாரரின் கணவர் உயிரிழந்துள்ளார் என்றும், அச்சந்தர்ப்பத்தில் மேற்படி கடனில் ஒரு பகுதி செலுத்தப்பட்டிருந்தது என்றும், எஞ்சிய தொகையை காப்புறுதி நிறுவனத்திடம் அறவிட்டுக் கொள்வதாக வங்கி அறிவித்துள்ளது என்றும், எவ்வாறாயினும் மேலுமொரு தொகையை செலுத்த வேண்டும் என்று | இலங்கை மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் | இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யுமாறும் மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டதுட ன், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குறுத்தலின் கீழ் உரிமப்பத்திரம் பெற்றுள்ள விசேட வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பாக முறையாக ஒழங்குறுத்துமாறு இலங்கை மத்திய |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | திகதி : 2023.07.17 | வங்கி அறிவித்துள்ளது என்றும், மேற்படி தொகையை செலுத்த எந்தவொரு நிரந்தர வருமான வழியும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், நிவாரணம் பெற்றுத் தருமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | | வங்கிக்கு கட்டளையிடுமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டது. |
| கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு | | | | |
| 09 | திரு. இ. எதிரிசிங்க COM/PP/2025/97 கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. 2025.06.19 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: MIWRM/AD/05/04/ඉ. ඉප.(05-2021) திகதி: 2021.10.28 | மகாவலி அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்த காணி மீண்டும் சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டது என்றும், அதற்குப் பதிலாக மாற்றுக் காணி வழங்குமாறு மகாவலி அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல வருட காலமாக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை நிவாரணம் கிடைக்காமை காரணமாக இது பற்றி விசாரணை செய்து நிவாரணம் வழங்குமாறு கோரி மனுதாரர் மனுவை சமர்ப்பித்துள்ளார். | (அ) மயுரபுர பிரிவிலிருந்து 20 பர்சஸ் மாற்றுக் காணியை பெற்றுக் கொடுக்கும் ஆற்றல் உள்ளது என்று தீர்மானித்திருந்த போதிலும், 2019 சனவரி மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சகல தெரிவுகளையும் ரத்துச் செய்யுமாறு மகாவலி அதிகாரசபை கொள்கைசார் தீர்மானம் மேற்கொண்டுள்ளதன் காரணமாக மனுதாரருக்கு காணித் துண்டொன்றைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது | மனுதாரரின் வயோதிப நிலையைக் கருத்திற்கொண்டும், ஒரு வாரிசு இருப்பின், அந்த வாரிசுக்கு எதிர்கால உரிமை கிடைக்கும் வகையிலும் 1992 ஆம் ஆண்டின் விலை மதிப்பீட்டின் அடிப்படையில் மனுதாரருக்கு ஒரு காணியை வழங்குமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | என்பது<br><br>(ஆ) இலங்கை மகாவலி அதிகாரசபை தவறான முறையில் நடவடிக்கை மேற்கொள்வதன் காரணமாக மனுதாரர் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ளார் என்பது | |
| 10 | திருமதி. எம்.ஜி. காந்திலதா<br>COM/PP/2025/173<br>கௌரவ நிஷாந்த பெரேரா, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.08.19 திகதி விசாரிக்கப்பட்டது.<br>அமைச்சின் தொடர் இல.: MAO/AD/E11/1/34<br>திகதி : 2024.10.18 | 1994 ஆண்டு முதல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் சேவையாற்றி வந்த போது 2014 ஆண்டு எழுதுநர் தரம் III இற்கு நிரந்தர நியமனம் கிடைத்தது என்றும், 09 வருட கால நிரந்த சேவைக் காலத்தைக் கொண்டதாக 2023 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற போதிலும் நிரந்தர சேவைக் காலம் 10 வருடங்களை விடக் குறைவாக உள்ளமை காரணமாக ஓய்வூதியம் கிடைப்பதில்லை என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் தமது முழுமையான சேவைக் காலத்தை கவனத்தில் கொண்டாயினும் ஓய்வூதியம் பெறத் தேவையான | (அ) ஓய்வூதிய யாப்புக்கு அமைய ஓய்வூதிய உரித்துப் பெற 120 மாத காலம் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியில் சேவையாற்றி இருத்தல் வேண்டும் என்பது<br><br>(ஆ) மனுதாரரின் சேவை நிரந்தரமாக்கப்படவில்லை என்றும் அதற்கு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் என்றும், | வினைத்திறன் காண் தடைப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மனுதாரரை விலக்களிப்பதற்கு அங்கீகாரம் பெற்று அவரின் சேவையை நிரந்தரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும்,<br>இதன் பின்னர் மனுதாரர் மற்றும் அவருக்குச் சமமான நிலையில் ஓய்வூதிய உரித்தைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ள முகாமைத்துவ உதவியாளர், |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மனுவின் மூலம் கோரியுள்ளார். | ஆட்சேர்ப்புச் செய்யும் போது 45 வயதுக்கு மேற்பட்ட நிரந்தர நியமனம் பெறுபவர்களை குறித்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சையிலிருந்து விலக்களிப்பதற்கான ஏற்பாடுகள் காணப்படுகின்றன என்பது. | தொழிலாளி மற்றும் காவலாளி ஆகிய பதவிகளில் கடமையாற்றியுள்ள ஏனைய அலுவலர்களையும் உள்ளடக்கியதாக ஓய்வூதிய உரித்தைப் பெற்றுக் கொடுக்க அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றைத் தயார் செய்யுமாறும் விதப்புரை வழங்கப்பட்டது. |
| சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு | | | | |
| 11 | திரு. பி. லொகுஹெட்டி COM/PP/2025/127 கௌரவ தேவானந்த சுரவீர, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.08.05 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல.: MH/AD/I/C/COPP/04 /2013 திகதி: 2018.03.16 | விசேட தரத்திற்கு பதவி உயர்வு வழங்குவதற்குள்ள ஆற்றல், 1988.01.01 திகதிக்கு முன்னர் முற்திகதியிட்டு தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்துவதற்காக ஆராயும் பொருட்டும் 2006 மற்றும் 2007 ஆண்டுகளில் சம்பள ஏற்ற உரித்தைப் பெற்றுக் கொடுப்பதும் ஆகிய விடயங்கள் நிறைவேற்றப்படாமை காரணமாக பொது சுகாதார இரசாயன ஆய்வுகூட கலைஞரான மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது | (அ) மாகாண சபைகளின் நிருவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது 1990.01.01 ஆம் திகதியாகும் என்பதனால் மனுதாரர் நுண்ணோக்கி கலைஞர் சேவையின் வகுப்பு I இற்கு பதவி உயர்வு பெற்ற 1988.01.01 திகதிக்கு முற்திகதியிடும் ஆற்றல் தென் மாகாண அரசாங்க சேவைகள் | சுகாதார அமைச்சுக்கு இதுவரை கிடைத்துள்ள சேவை முதுமை பட்டியல் மற்றும் ஏனைய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மனுதாரருக்கு மாத்திரம் விசேடமான வகையிலும், முன்மாதிரியாக இல்லாதவாறும் இவருக்கு நுண்ணோக்கி கலைஞர் சேவையின் வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | என்றும், ஓய்வு பெறும் போது அங்கீகரிக்கப்பட்ட விசேட தரத்தைச் சேர்ந்த ஒரு பதவி வெற்றிடமாக உள்ளமை, "விசேட தரத்துக்கு பதவி உயர்த்தும் பரீட்சை – 2003" இல் உச்ச புள்ளிகளைப் பெற்றவராக உள்ளார் என்பது மற்றும் 2009 ஆண்டு மேற்படி பரீட்சை ரத்துச் செய்யப்பட்டமை மாகாண சபைகளுக்கு ஏற்புடையதல்ல என்பது தெளிவாக உறுதி செய்யப்பட்டிருந்தமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் மேற்படி உரிமை மற்றும் பயன்களைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆணைக்குழுவுக்கு இல்லை என்பது<br><br>(ஆ) இதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்து ஆலோசனை வினவப்பட்டுள்ளதுடன், இறுதி சேவை முதுமை பட்டியலைத் தயார் செய்யுமாறு வழங்கப்பட்ட அறிவுரைக்கு அமைய சகல மாகாண சபைகளிடமிருந்தும் சேவை சிரேஷ்டத்துவ பட்டியல் கோரப்பட்ட போதும் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது போனதன் காரணமாக 1988 ஆம் ஆண்டு தொடர்பாக சரியான சேவை சிரேஷ்டத்துவப் பட்டியலை தயார் செய்துகொள்ள முடியவில்லை என்பது<br><br>(இ) 35 | பெற்றுள்ள திகதியான 1988.01.01 ஆம் திகதிக்கு முற் திகதியிடுவதற்காக ஒரு மாத காலப்பகுதிக்குள் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | வருடங்களுக்கும் மேற்பட்ட சேவைக் காலத்தைக் கொண்டுள்ளமை மற்றும் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெறும் பரீட்சை – 2003 இல் சித்தயடைந்த போதிலும் பின்னர் மேற்படி பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ள மை<br><br>(ஈ) இதற்கு முன்னர் 7 ஆவது பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த மனுவை விசாரித்துள்ள பொது மனுக்கள் பற்றிய குழு மேற்படி உரிமையை வழங்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள 2015.05.27 திகதிய கட்டளை அமுல்படுத்தப்பட்டி ருக்கவில்லை என்பது மற்றும் 8 ஆவது பாராளுமன்றத்தில் சமர்ப்பீத்த மனுவை விசாரணை செய்து சுகாதார அமைச்சின் செயலாளருக்கு | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | அனுப்பியுள்ள 2019.06.27 திகதிய கடிதம் மூலம் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிக்குமாறு வழங்கப்பட்ட கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது | |
| 12 | திரு. டி.ஜி. சுமனசேகர<br>COM/PP/2025/28<br>கௌரவ ரத்ன கமகே, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>2025.08.05 திகதி விசாரிக்கப்பட்டது.<br>அமைச்சின் தொடர் இல. : MH/AD/01/03/PP/04/2024<br>திகதி: 2024.05.27 | 1985.07.01 ஆம் திகதி முதல் சுகாதார திணைக்களத்தில் நுண்ணோக்கி கலைஞர் பதவிக்கு நியமனம் பெற்றதாகவும் சுகாதாரக் காரணங்களினால் முறையாக சேவைக்கு சமூகமளிக்க முடியில்லை என்பதனால் 1987.04.16 ஆம் திகதி முதல் பதவி வெறிதாக்கியதாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் 2007.02.05 ஆம் திகதி முதல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதாக அறிவித்துள்ளதையும் கவனத்தில் கொண்டு ஓய்வூதியம் வழங்குமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | (அ) தாபன விதிக்கோவையின் 48 ஆம் அத்தியாயத்தின் 37:1 ஆம் உட்பிரிவுக்கு அமைய 3 மாத காலப்பகுதிக்குள் இது தொடர்பான மேன்முறையீட்டை நியமன அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும், மேலும் அதன் 37:3 உட்பிரிவுக்கு அமைய இது தொடர்பான மேன்முறையீட்டை | மனுதாரர் ஓய்வூதியத்திற்கு உரிமை பெறுவதில்லை என்பதனால் மீள் சேவைக்கு அமர்த்தப்பட்ட 2007.02.05 ஆம் திகதி முதல் 2020.06.12 திகதி ஓய்வு பெற்றது வரை சம்பளத்திலிருந்து அறவிட்டுக் கொண்ட விதவை அநாதைகள் பங்களிப்புத் தொகையை மனுதாரருக்கு வழங்குமாறு விதப்புரை செய்யப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | 6 மாத காலப்பகுதிக்குள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க முடியுமாயினும் குறித்த மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருப்பது 1988.07.25 ஆம் திகதியாகும் என்பதுடன், ஆணைக்குழு மனுதாரின் மேன்முறையீட்டை நிராகரித்துள்ளது என்பது. | |
| 13 | திரு. டபிள்யூ.டபிள்யூ. காமினி நாணயக்கார COM/PP/2025/107 கௌரவ நந்தன பத்மகுமார, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.08.05 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : MH/AD/01/06/01/23/2017 திகதி: 2018.01.29 | 1971 இல் அமய பயிற்றப்படாத தொழிலாளியாக சேவையில் இணைந்துகொண்டுள்ளார் என்றும், சேவையில் நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர் 1986 ஆண்டு வரை சேவையாற்றியதாகவும், இறுதியாக களுபோவில வைத்தியசாலையில் கடமையாற்றும் போது பொது நிருவாக சுற்றறிக்கை 121, 5.4 பந்திக்கு அமைய ஓய்வுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், ஓய்வூதியம் பெற உரிமை கோரும் சந்தர்ப்பத்தில் சேவைக் காலம் 105 மாதங்களாக | (அ) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் மனுதாரரின் 1984 மற்றும் 1985 ஆண்டுகளின் சம்பள ஆவணங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், மனுதாரர் சேவை இடைநிறுத்தப்பட்டிருந்ததாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்ததன் காரணமாக குறித்த விடயங்களையும் கவனத்தில் கொண்டு | மனுதாரரின் சேவைக் காலத்தை 14 வருடங்களாகக் கவனத்தில் கொண்டு அவருக்கு ஓய்வூதியத்தை உரித்தாக்குவதற்குத் தேவையான ஆவணங்களை முறையாக தயார் செய்து, இரண்டு மாத காலப்பகுதிக்குள் ஓய்வூதியத் தீணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளருக்கு விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | தவறுதலாக கணிப்பிடப்பட்டதன் காரணமாக வங்கிக் கணக்கிற்கு பணிக்கொடையாக ரூபா 5000/- மாத்திரம் செலவு வைக்க தீர்மானிக்கப்பட்டதுடன் அத்தொகையைப் பெற்றுக் கொள்ளாதிருக்க மனுதாதரர் தீர்மானித்தார் என்றும், சுயவிபரக் கோப்பு காணாமற் போயுள்ளதனால் கோப்பில் காணப்பட்ட ஆவணங்களின் பிரதிகளும் ஓய்வூதியம் தயார் செய்துகொள்ளும் நடவடிக்கைகளுக்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார் என்பதுடன், பொ.நி.சு. 121 இற்கமைய நியமனம் செய்யப்பட்ட குழுவிடம் மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்காதிருக்க களுபோவில வைத்தியசாலையின் அதிகாரிகள் வேண்டுமென்றே செயற்பட்டுள்ளதாக நம்புவதன் காரணமாக 14 வருட சேவைக் காலத்தை சரியாக கணிப்பீடு செய்து அதற்கு இசைவாக ஓய்வூதியத்தை தயார் செய்து தருமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | 1971 முதல் 1985 வரை மனுதாரரின் மொத்த சேவைக் காலத்தில் 2/3 ஐக் கணிப்பீடு செய்து அவருக்கு சேவைசார் பணிக்கொடை மாத்திரம் உரித்தாக்கிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது<br><br>(ஆ) கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் முன்னாள் சுகாதாரப் பணிப்பாளரின் 2011.07.15 திகதிய கடிதம் மூலம் 1971.05.02 திகதி முதல் 1985.05.24 ஆம் திகதி வரை முழுமையான சேவைக் காலத்தில் மனுதாரர் சேவையாற்றியுள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்பது | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | | |
| 14 | திரு. டி.எச். கமகே COM/PP/2025/330<br>கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள் ளது.<br>2025.07.22 திகதி விசாரிக்கப்பட்டது.<br>அமைச்சின் தொடர் இல. : Pns/P5/01/33<br>திகதி: 2019.08.21 | 2017.12.20 ஆம் திகதி உயிரிழந்த மனுதாரரின் மனைவி பதவிநிலை தாதியாக 1985.04.01 ஆம் திகதி வரை 24 வருட காலம் ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்றதாகவும், பின்னர் தபுதாரர் அநாதை ஓய்வூதியப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான உரிய விண்ணப்பப்படிவம் 2012.12.18 ஆம் திகதி வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டது<br>என்றும், மேற்படி ஆவணங்கள் கிடைத்தாக ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் அவரின் மரணத்தின் பின்னர் குறித்த ஆவணங்கள் காணாமற் போயுள்ளதாகக் குறிப்பிட்டு ஓய்வூதியம் செலுத்துவது நிராகரிக்கப்பட்டுள்ளது<br>என்றும், 90 ஆவது வயதிலுள்ள மனுதாரருக்கு நிலுவைத் தொகைகளுடன் தமது மனைவியின் தபுதாரர் அநாதை ஓய்வூதியத்தை பெற்றுத் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அ) ஓய்வூதியம் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள 2024.04.25 ஆம் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றி குழுவின் விதப்புரை இதுவரை அமுல்படுத்தப்படவி ல்லை என்பது.<br><br>(ஆ) 2012.12.18 ஆம் திகதி மனுதாரரின் மனைவி உயிருடன் இருந்து போது ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் கையளிக்கப்பட்ட ஆவணங்கள் காணாமற் போயுள்ளன என்பது<br><br>(இ) ஓய்வூதிய சுற்றறிக்கை 02/2012 ஏற்புடையதாவது, 1983.08.01 திகதிக்கு முன்னர் ஓய்வூதிய உரித்துடைய பதவிக்கு நியமனம் பெற்ற அத்திகதியில் சேவையாற்றி வருகின்ற, எனினும் தபுதாரர் மற்றும் அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு | மனுதாரரின் மனைவி சேவையில் இணைந்த திகதி முதல் தபுதாரர் அநாதை ஓய்வூதிய நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிய 6% ஆன பங்களிப்புத் தொகையை கணிப்பிட்டு, அதனை எதிர்காலத்தில் செலுத்த வேண்டியுள்ள ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வழங்கப்பட்டுள்ள முன்னைய குழுவின் விதப்புரையையும் கவனத்தில் கொண்டு இதனை முன்மாதிரியாகக் கொள்ளாது மனுதாரருக்கு நிவாரணம் வழங்க கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன் றை சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும் என்றும் விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | விருப்பம் தெரிவிக்க வழங்கப்பட்ட காலஎல்லைக்குள் தமது விருப்பத்தை தெரிவிக்க முடியாது போன அலுவலர்களுக்கு அதற்கு விருப்பம் தெரிவிக்க மாத்திரமாகும் என்பதுடன், இதற்கு முன்னர் விருப்பம் /விருப்பமின்மையை தெரிவித்திருப்பின் அதனை மாற்றம் செய்வதற்கல்ல என்பது<br><br>(ஈ) வைத்தியசாலை நிருவாகத்தின் பலவீனங்கள் காரணமாக மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது<br><br>(உ) இது தொடர்பாக 2024.04.25 ஆம் திகதி நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டுக் கொள்ளத் தேவையான | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளை மேற்கொண்டு, கொடுப்பனவுகளை செலுத்துமாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ள போதும், இற்றைவரை இது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது | |
| நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு | | | | |
| 15 | எச்.எம்.சி.ஜி.பி. ஹேரத் COM/PP/2025/136 கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.08.21 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : MUDH/GA/PP/P3/ PPC-Vol III திகதி: 2025.04.30 | குருநாகல் யட்டிவெஹெர வீடமைப்புத் திட்டம் அமைந்துள்ள காணி 1996 ஆம் ஆண்டு உரிய விலைமதிப்புப் பெறுமதியை காணி உரிமையாளர்களிடம் அறவிட்டுக் கொண்டு வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பூரண தலையீட்டுடன் காணி உரிமையாளர்கள் 102 பேருக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் இதுவரை காணி உறுதிகள் வழங்கப்படவில்லை என்றும், 10 வருடங்கள் கடந்துள்ள பின்னர் மீண்டும் விலைமதிப்புச் செய்து மேலதிக தொகைகளை செலுத்த | (அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் திறைசேரியிடமிருந்து கிடைத்த ஏற்பாடுகளின் பேரில் ரூபா 8,500,000 ஆன (ரூபா 85 இலட்சம்) தொகை குருநாகல் யடிவெஹெரவத்த எனும் காணியில் விலைமதிப்புப் பெறுமதியாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு 2007 ஆண்டு செலுத்தப்பட்டுள்ளது என்றும் அபிவிருத்திச் செலவினமாக ரூபா | மிகைக் கட்டணப் பெறுமதியை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்குமாறு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும், மேற்படி மிகைக் கட்டணப் பெறுமதியை உரியவாறு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்துமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளமை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அறிவிக்கப்படுகின்ற விலைமதிப்புத் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | வேண்டும் என்றும், அதுவரை காணி உறுதிகளை வழங்க முடியாது என்றும் அறியத்தரப்பட்டுள்ளது என்றும், உறுதி இல்லாமை காரணமாக பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதித்தல் போன்ற பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இப்பிரச்சினையை சிக்கலாக்கியுள்ள நிலையில், பிரதேச செயலாளரையேனும் முன்னிலைப்படுத்தி இக்காணிப் பிரச்சினையை தீர்த்துவைத்து ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள தொகைக்கு காணி உரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 40,000/- வீதம் காணி உரிமையாளர்களிடம் அறவிடப்பட்டுள்ள தொகையை, மேற்படி விலைமதிப்புப் பெறுமதியிலிருந்து குறைத்துக் கொண்டு எஞ்சிய தொகையை செலுத்துமாறு காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது<br><br>(ஆ) விலை மதிப்புத் தொகையை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு செலுத்துவது தாமதமடைவதன் காரணமாக 2001-2007 வரையான காலப்பகுதிக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது என்பதும், மிகைக் கட்டணத்திற்கு மனுதாரரிடமிருந்து அறவிட்டுக் கொள்வதில்லை | தொகையை செலுத்தும் காணி உரிமையாளர்களுக்கு காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயன்முறையின் ஆரம்ப கட்டப் பணிகளை கூடிய விரைவில் ஆரம்பிக்க செயற்படுமாறும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு விதப்புரை வழங்கப்பட்டுள்ளது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | என்பதும் | |
| 16 | திரு. பி.வி. ரத்னபால COM/PP/2025/228 கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.06.05 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : MUDH/GA/PP/P3/ PPC-Vol III திகதி: 2024.08.28 | மாத்தறை ஹித்தெடிய மெதகெதரவத்தயில் அமைந்துள்ள 18 ஆம் இலக்க காணியின் உரித்தை மனுதாரருக்கு பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) 01 ஏக்கர் 02 ரூட் 26.5 பர்சஸ் அளவான மெதகெதரவத்த வீடமைப்புக் கருத்திட்டத்தில் 23 காணித்துண்டுகள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் உடன்படிக்கை செய்துகொண்டு 23 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இக்காணிகளை சாட்டுதல் செய்துகொண்ட சந்தர்ப்பத்தில் காணியின் விலைமதிப்புப் பெறுமதியில் ஒரு பகுதி பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து செலுத்தப்பட்டதுடன் எஞ்சிய தொகை காணி உரிமையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 5000/- வீதம் அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது<br><br>(ஆ) மேற்படி நில வரைபடத்தில் மனுதாரர் வசித்து வருகின்ற 10 ஆம் இலக்க காணித்துண்டு எனும் | மனுதாரருக்கு உத்தேச மாற்றுக் காணியைப் பெற்றுத் தருமாறும், இதன் போது அவர் மெதகெதரவத்த வீடமைப்புக் கருத்திட்டத்தில் காணித்துண்டு இலக்கம் 10 எனும் காணியில் இறுதியாக வசித்து வந்த ஆண்டின் விலைமதிப்புப் பெறுமதிக்கு விலைமதிப்புச் செய்து, மேற்படி காணியின் அளவுக்குச் சமமான நிலப்பகுதியை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் விதப்புரை வழங்கப்பட்டதுடன், மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தி காணியின் ஆட்சியுரிமையை உரித்தாக்கிக் கொள்ளுமாறு மனுதாரருக்கும் அறிவிக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | காணியை வேறொருவருக்கு விற்பனை உடன்படிக்கை மூலம் ஆட்சியுரிமை வழங்கப்பட்டு ரூபா 5000/- செலுத்தப்பட்டு சாட்டுதல் செய்துகொண்டுள்ள காணியாகும் எனினும் மேற்படி நபரே குறித்த காணியை வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் இன்றி சட்டத்தரணி ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ள பற்றுச்சீட்டின் மூலம் மனுதாரருக்கு சாட்டுதல் செய்துள்ளார் என்பதுடன், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மனுதாரருக்கு சட்டவிரோத ஒழுங்குறுத்தலின் கீழ் அதன் ஆட்சியுரிமையை பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும், அவர் | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | அதற்கு முன்வரவில்லை என்றும், பின்னர் மேற்படி சாட்டுதல் செய்யப்பட்ட நபர் முன்வந்து வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு குறித்த கொடுப்பனவுகளை செலுத்தி மேற்படி காணியின் உரித்தை சாட்டுதல் செய்துகொண்டுள் ளார் என்றும், அதற்கமைய காணியின் ஆட்சியுரிமை மனுதாரருக்கு உள்ள போதிலும், உரித்து உரிமையாகியிருக்க வில்லை என்றும், பின்னர் காணியின் உரித்தை சாட்டுதல் செய்துகொண்டிருந்த நபர் உயிரிழந்தமை காரணமாக அவரின் மனைவி மற்றும் பிள்ளைகள் தாக்கல் செய்திருந்த வழக்கின் தீர்ப்புக்கு அமைய காணியின் உரித்தை அவர்கள் பெற்றுள்ளார்கள் என்பது<br><br>(இ) காணித்துண்டு இலக்கம் 18 எனும் காணி மனுதாரரின் தாயாருக்கு | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | விற்பனை உடன்படிக்கை மூலம் ஆட்சியுரிமை வழங்கப்பட்டு ரூபா 5000/- உம் செலுத்தப்பட்டு சாட்டுதல் செய்துகொள்ளப்பட்ட காணியாகும் என்பதுடன், இதுவும் மேலே குறிப்பிட்டதைப் போன்று வீடமைப்பு அதிகாரசபையின் அங்கீகாரம் இன்றி சட்டத்தரணி ஒருவர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்ட பற்றுச்சீட்டு மூலம் வேறு ஒருவருக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், இக்காணிகளை பயனாளிகளுக்கு வழங்கும் போது வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 9 ஆவது நிபந்தனைக்கு அமைய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் இன்றி காணியை வேறு | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | ஆளொருவருக்கு சாட்டதல் செய்வதன் மூலம் மேற்படி காணியின் உரித்தை இழக்கின்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், காணியை சாட்டுதல் செய்துள்ள பற்றுச்சீட்டின் அடிப்படையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் கடனும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதும், இதில் ஒரு வீடு நிர்மாணிக்கப்பட்டு வசித்து வருவதாகவும், தற்போது மேற்படி காணிக்கு சட்டவிரோத ஒழுங்குறுத்தல் செயன்முறையின் கீழ் ஆட்சியுரிமையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது<br><br>(ஈ) வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் காணித்துண்டு இலக்கம் 10 இன் ஆட்சியுரிமை முதல் உரிமையாளருக்கு வழங்கப்பட்டமை, | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | காணித்துண்டு இலக்கம் 18 இற்கு சட்டவிரோத ஒழுங்குறுத்தலின் கீழ் ஆட்சியுரிமை வழங்கப்பட்டமை மற்றும் பற்றுச்சீட்டுக்களின் அடிப்படையில் அவருக்கு கடன் தொகை வழங்கப்பட்டமை ஆகிய சந்தர்ப்பங்களில் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட நிலைப்பாடுகள் சிக்கலானதாகும் என்பதும், தமது காணியின் ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் போது மனுதாரரும் ஒரு சில குறைபாடுகளை மேற்கொண்டுள்ள போதிலும் சகல விடயங்களையும் ஆராயும் போது மனுதாரருக்கு யாதாயினும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பது | |
| வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு | | | | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 17 | திருமதி. ஜி. சமந்தி டி சில்வா COM/PP/2025/340 கௌரவ தேவானந்த சுரவீர, பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.08.21 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : FE/ADM/06/01/01/04/2023 திகதி: 2025.06.23 | மனுதாரர் பணியாற்றிய சவுதி அரேபியாவிலுள்ள நிறுவனம் நான்கு மாத கால நிலுவைச் சம்பளத்தை செலுத்தாமை மற்றும் இந்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் மேற்கொண்ட அநீதியான தலையீடு தொடர்பாக 2024.01.29 ஆம் திகதி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு முறைப்பாடு செய்ததாகவும், 2024.02.13 ஆம் திகதி மேற்படி முறைப்பாடு விசாரிக்கப்படவிருந்த போதிலும் அவ்வாறு செய்யாது அதனை வேறொரு தினத்திற்கு ஒத்திவைத்ததாகவும், பின்னர் முறைப்பாட்டின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படுவதாக அறியத்தரப்பட்டது என்றும், மேற்படி அநீதி தொடர்பாக கவனம் செலுத்தி தமது நிலுவைச் சம்பளத்தைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) மனுதாரருக்கு உரித்தான நிலுவைச் சம்பளத்தின் முதலாவது தவணைப் பணத்தை 2025.09.11 ஆம் திகதியும், இரண்டாவது தவணைப் பணத்தை 2025.10.11 ஆம் திகதியும் செலுத்த வேண்டும் என்று தொழில் முகவர் நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது<br><br>(ஆ) முதலாவது தவணைப்பணம் உரிய திகதியில் செலுத்தப்படாத பட்சத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் காணப்படுகின்ற தொழில் முகவர் நிறுவனத்திற்கு உரித்தான பண வைப்பிலிருந்து அத்தொகையை அறவிட்டுக் கொள்ளும் தத்துவம் உள்ளது என்பது | வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இணங்கியுள்ளவாறு மனுதாரரின் நிலுவைச் சம்பளத்தை இரண்டு மாதங்களுக்குள் செலுத்தி முடிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு விதப்புரை வழங்கப்பட்டது. |
| சுற்றாடல் அமைச்சு | | | | |
| 18 | செல்வி பி.எம். முதுமெனிகா COM/PP/2025/16 | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் குருநாகல் மாவட்ட வட்டார அலுவலகத்திற்கு | (அ) சேவையில் நிரந்தரமாக்கும் போது, பொ.நி.சு. | மனுதாரருக்கு மட்டும் ஏற்புடைய வகையில் ஓய்வூதியத்தை |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத், பா.உ., இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.08.07 திகதி விசாரிக்கப்பட்டது. அமைச்சின் தொடர் இல. : MWFRC/ADM/18 /6 திகதி: 2022.12.22 | இணைப்புச் செய்யப்பட்டு இறுதியாக சேவையாற்றி வந்ததுடன், 2018.07.11 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளதாகவும், ஓய்வு பெற்று 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும், ஓய்வூதியமோ அல்லது அரசினால் வழங்கப்படுகின்ற எந்தவொரு கொடுப்பனவோ இதுவரை கிடைக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தமது ஓய்வூதியத்தைப் பெறத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | 13/2005 இற்கமைய சேவையில் நிரந்நதரமாக்க பூர்த்தி செய்திருக்க வேண்டிய நிபந்தனைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள iii மற்றும் v இல் உள்ள நிபந்தனைகளை மனுதாரர் பூர்த்தி செய்திருக்கவில்லை என்பது;<br><br>(ஆ) மனுதாரரின் சம்பளத்திலிருந்து ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டுள்ளது என்பதும்,<br>தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புத் தொகை அனுப்பப்பட்டுள்ளது என்பதும்<br><br>(இ) வன விஸ்தரித்தல் அலுவலர் பதவிக்கு நியமனம் பெற்று தற்போது ஓய்வு | வழங்குவது குறித்து அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | பெற்றுள்ள சகல அலுவலர்களுக்கும் ஓய்வூதியம் உரித்தாக்கப்பட்டுள்ளது என்பது | |
| **வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 19 | திரு. எச். ஏ. அநுர பிரியசாந்த COM/PP/2025/148 சமர்ப்பித்தவர்;கௌரவ ருவந்திலக்க ஜயக்கொடி பா.உ. 2025.08.07 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; MT/ADM/03/PP/1) திகதி : 2025.05.30 | 2008.11.01ஆம் திகதி தொடக்கம் இது வரையில் சுமார் 16 வருடங்கள் தொடர்ச்சியாக (16) வ/பட்ட கம்பஹா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், கள அலுவலர் பதவியில் பணியாற்றுவதாகவும், இப்பதவியில் இது வரையில் நிரந்தரமாக்கவில்லை என்றும், கூட்டுறவுச் சங்கம் நேர்முகப் பரீட்சை தொடர்பான கோப்பினை கூட்டுறவு ஆணைக்குழுவிற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்காமை இதற்கான காரணமாகும் என்று அறியக் கிடைத்துள்ளதாகவும், குறித்த நிறுவனத்தில் பதவியை நிரந்தரமாக்குவதுடன் அதற்கான சம்பளத்தையும் பெற்றுத் தருமாறு கோரி | (அ) 2009.12.13 ஆந் திகதி கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்ற கள அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் தகவல்களை கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தவில்லை.<br><br>(ஆ)ஆணைக்குழுவின் அனுமதியின்றி பணியில் ஈடுபடுத்தியுள்ள ஊழியர்கள் தொடர்பாக மேல்மாகாண | 2009.12.13 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மனுதாரரை சேவையில் நிரந்தரமாக்குவதற்கும், பிற்போடப்பட்ட சம்பளத்தை மீண்டும் வழங்குவதற்கும், அடிப்படைச் சம்பளத்தில் ஒரு பகுதி குறைக்கப்பட்டமையால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புச் செய்கையில் ஏற்பட்ட நட்டத்தை மீண்டும் அவருக்கு பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் 2024.08.21 ஆந் திகதி கம்பஹா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் மேற் கொள்ளப்பட்ட புலனாய்வின் போது வெளிக் கொண்டுவரப்பட்ட விடயங்கள் மற்றும் 2024.09.04ஆந் திகதி ஆணைக்குழுவின் முன்பாக இடம்பெற்ற மேற்முறையீட்டு விசாரணையில் நிரந்தரமாக்காத ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத ஊழியர்கள் தொடர்பான விரிவான அறிக் கையொன்றை 2024.09.25 ஆம் திகதி வழங்குவதற்கு தவிசாளர் இணங்கிய போதிலும் அதனைச் சமர்பிக்கவில்லை.<br><br>(இ) வ/பட்ட கம்பஹா பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தின் தவறான | விதந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் காரணமாக மேற்படி ஊழியர் (16) வருடங்களுக்கு மேலாக சேவையில் நிரந்தரமாக்கப்படாது பணியில் ஈடுபட்டுள்ளார். | |
| 20 | திரு. துலித் அசோக்க COM/PP/2025/187 சமர்ப்பித்தவர்;கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க பா.உ. 2025.08.07 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MT/ADM/03/PP/1) திகதி : 2025.04.03 | அளவு தரங்கள் மற்றும் கருவிகள் பரிசோதகர் விசேட தரப் பதவிக்கான சகல தகைமைகளையும் பூத்திசெய்துள்ள மனுதாரர் உட்பட ஆறு அலுவலர்கள் குறித்த நேர்முகப்பரீட்சைக்கு 2018.03.07 ஆந் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் தோற்றியதாகவும், பெறுபேறு தொடர்பான ஆவணங்களை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தி ஆறு வருடங்களின் பின்னர், மேற்படி நேர்முகப் பரீட்சையினை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு இரத்துச் செய்துள்ளமையால் தங்களுக்குரிய பதவிகள் கிடைக்காமல் | (அ) நேர்முகப்பரீட்சைக் கான குழுவை நியமனம் செய்தல் மற்றும் நேர்முகப் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அறிந்து இருந்ததாகவும், நேர்முகப்பரீட்சை இடம்பெறும் சந்தர்ப்பத்தில் 2013.10.29 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கை முறைமை நடைமுறையில் | அளவு தரங்கள் மற்றும் கருவிகள் பரிசோதகர் (விசேட தரத்திற்கு) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக 2018.03.07 ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகப்பரீட்சையை நடைமுறைப்படுத்துவதற்கும், மனுதாரர் உட்பட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய 06 அலுவலர்களுக்கும் அளவு தரங்கள் மற்றும் கருவிகள் பரிசோதகர் (விசேட தரத்திற்கான) பதவியை வழங்குவதற்கும், 2025.03.24 ஆந் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | போனதாகவும் குறித்த அநீதியான செயற்பாடு தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு நீதியைப் பெற்றுத்தருமாறு கோரி இம்மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | காணப்பட்டது எனவும்.<br><br>(ஆ) பதவிப் பெயரைத் திருத்துதல் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையினை அங்கீகரிக்கும் செயன்முறையின் போது நிறுவனம் செய்த தாமதத்தினால் அளவு தரங்கள் மற்றும் கருவிகள் பரிசோதகர் விசேட தரப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்து, 2018.03.07 ஆம் திகதி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி மேற்படி வெற்றிடங்களுக்குத் தெரிவான 06 அலுவலர்களுக்கும் பதவியர்வுகளை வழங்காமை நியாயமற்றதாகும். | திகதிய அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவையின் உதவி அளவுக்கூறுகள் தரங்கள் மற்றும் சேவைகள் அத்தியட்சகர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைமைக்கு அமைவாக, 2025.05.27 ஆந் திகதிய வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சுச் செயலாளருக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால்ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களுக்கு அமைவாக இடைக்கால ஏற்பாடு I, II, III இற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அளவு தரங்கள் மற்றும் கருவிகள் பரிசோதகர் (விசேட தரத்திற்கான) தகைமைகளைப் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | | பூர்த்தி செய்துள்ள திகதி முதல் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் அளவுக்கூறுகள் தரங்கள் மற்றும் சேவைகள் அத்தியட்சகர் பதவிக்கு மேற்படி அலுவலர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டது. |
| 21 | திரு. எஸ்.ஆர்.பீ. குணவர்தன COM/PP/2025/238 சமர்ப்பித்தவர்;கௌரவ கயந்த கருணாதிலக்க பா.உ. 2025.08.07 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; MT/ADM/06/04 திகதி : 2022.01.06 | கஹதுவ அகதுடுவத்தை என்று அழைக்கப்படும் மஹகெதரவத்தை என்ற காணியில் அமைந்துள்ள மனுதாரரின் அப்பாவிற்குச் சொந்தமான கட்டிடத்துடன் கூடிய காணியை 1969 ஆம் ஆண்டு பிரதேச மக்களினதும் கூட்டுறவுச் சங்கத்தினதும் கோரிக்கைக்கு அமைவாக எல்பிட்டிய கூட்டுறவுச் சங்கத்திற்கு குத்தகைக்கு வழங்கியதாகவும், குறித்த சொத்தை மனுதாரரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு விடுவிக்குமாறு பணிப்பாளர் சபைக்கு கட்டளையொன்றைப் பிறப்பிக்குமாறும் 1976 ஆம் ஆண்டு முதல் இதுரையில் கிடைக்க | (அ) குறித்த காணியை அரசாங்கம் கையகப்படுத்துகையில் சரியான செயன்முறையில் மேற்கொள்ளவில்லை என்பதுடன், காலி - மாவட்டச் செயலாளர் குறித்த காணியை அரசாங்கத்திற்கு கையகப்படுத்துகையில் இதற்கான நோக்கத்தைப் பொதுநோக்கமெனக் குறிப்பிட்டுள்ள போதிலும், கையகப்படுத்திய பின்னர் குறித்த காணியை அவ்வாறான பொது | மனுதாரர் தரப்புக்கு அரசாங்கம் நியாயமான நட்டஈட்டுத் தொகையைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், நட்டஈட்டுத் தொகையை நிர்ணயிப்பதற்கு 1983 ஆம் ஆண்டில் குறித்த காணி தொடர்பாக அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ள பெறுமதியை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் வேண்டும் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | வேண்டியுள்ள நிலுவைப் பணம் மற்றும் நியாயமான நட்டஈட்டுத் தொகையையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரி குறித்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நோக்கத்திற்காக பயன்படுத்தாமை இது தொடர்பில் முரண்பாட்டை ஏற்படுத்துவதாகவும்<br><br>(ஆ) இக்காணியின் முதல் உரிமையாளரான மனுதாரரின் தந்தையின் காணியினை அரசாங்கம் கையகப்படுத்தியதன் பின்னர் அரசாங்கம் உரிமையாளருக்கு எந்தவிதமான நட்டஈட்டுத் தொகையினையும் செலுத்தவில்லை என்பதுடன் உரிமையாளர் மற்றும் அவரது மனைவி இறந்ததன் பின்னர் அவரது பிள்ளைகளுக்கும் எந்தவிதமான நட்டஈட்டுத் தொகையினையும் செலுத்தவில்லை. | என்பதுடன் நட்டஈட்டுத் தொகை தொடர்பாக ஏற்புடையதாக்கிக் கொண்ட வட்டித் தொகையைக் கணிப்பீடு செய்கையில் (1976.04.23 ஆம் திகதி முதல் 1979.11.07 ஆம் திகதி வரையில் 3% ஆகவும் 1979.11.08 ஆம் திகதி முதல் இன்று வரையிலான காலப்பகுதிக்கு 7% ஆகவும் கணிப்பீடு செய்தல் வேண்டும்) இக்காணியை அரசாங்கத்திற்கு கையகப்படுத்திய திகதி தொடக்கம் இது வரையில் கணிப்பீடு செய்து, நட்டஈட்டுத் தொகையுடன் சேர்த்து மொத்த தொகையினையும் மனுதாரர் தரப்பிற்கு வழங்க வேண்டுமென்று எல்பிட்டிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவருக்கு விதப்புரை |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | | வழங்கப்பட்டது. மனுதாரரின் தாயும் தற்போது இறந்துள்ளதால், தந்தையின் இறப்பின் பின்னர் குறித்த சொத்துக்களின் உரித்து பிள்ளைகளுக்கு கிடைப்பதால் மேற்குறிப்பிட்டுள்ள நட்டஈட்டுத் தொகையினை மனுதாரர் உட்பட சகோதரர்களுக்கிடையில் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்வதாக அனைத்து தரப்பினர்களினதும் இணக்கப்பாட்டை வெளிப்படுத்தும் சத்தியக் கடதாசியை குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கும் மனுதாரருக்கு விதப்புரை வழங்கப்பட்டது. |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 22 | திரு. ஜீ.டீ. நந்தன COM/PP/2025/29 சமர்ப்பித்தவர்; கௌரவ ரத்ன கமகே பா.உ. 2025.07.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்ட | இராணுவ முனைப்பு சேவையில் ஈடுபட்டிருக்கையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் மற்றும் கடமையில் இருக்கும்போது சார்ஜன் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட | (அ) மனுதாரர் இலங்கை இராணுவத்தில் இணையும்போது செவிப்புலனற்ற அல்லது மனநோய்குள்ளான தான விடயங்கள் | மனுதாரர் பாதிக்கப்பட்டுள்ளமை தெளிவாகின்றமையால் அவருக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சரவைப் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | து.<br>அமைச்சின் தொடர்பு இல: MOD/DEF/14/22/01/PPC/08<br>திகதி : 2016.10.04 | தாக்குதல் காரணமாக செவிப்புலனற்ற நிலைக்குள்ளானதாகவும், மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் 2005.08.16 ஆம் திகதி சேவையிலிருந்து நீங்கியதாகவும், கடமையில் ஈடுபட்டிருக்கையில் ஏற்பட்ட அங்கவீனம் காரணமாக வேறு தொழில்களில் ஈடுபட முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ள மனுதாரர் சம்பளத்தை வழங்குமாறும், சேவையில் இருந்து ஓய்வு பெறச் செய்வதற்கான நடவடிக்கைகளை செய்து தருமாறும் இது தொடர்பாக வழங்கக் கூடிய யாதேனும் நிவாரணங்கள் காணப்படின் அவற்றையும் பெற்றுத்தருமாறும் கோரியுள்ளார். | உறுதிப்படுத்தப்பட வில்லை.<br><br>(ஆ) தாக்குதலுக்கு உள்ளாகியமை தொடர்பில் மருத்துவ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக வும், அவ்வாறான தாக்குதலை மேற்கொண்ட அலுவலர் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், குறித்த தாக்குதலின் பின்னர் செவிப்புலன் பாதிக்கப்பட்டுள்ள தாக அவரது கட்டளையிடும் அலுவலரால் அறிவிக்கப்பட்டுள்ள ශ්‍රීලපාහ/පා/47/02/කාගෝ/40 ( ) ஆம் இலக்க மற்றும் 2003.11.30 ஆம் திகதிய கடித த்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாகவும்.<br>(இ) நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக மனுதாரருக்கு | பத்திரமொன்றை சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விதந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | உயர்ந்தபட்ச நிவாரணங்களை வழங்குமாறு பாராளுமன்றத்தில் 2017.09.07ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது விசாரணையின்போது குழுவால் இராணுவத் தளபதிக்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது. | |
| 23 | திருமதி ஜீ.ஜே. சமல்கா த சில்வா, திரு. எம்.டீ.த.எஸ். ஜயதிலக்க, காலஞ்சென்ற மனுதாரரின் சட்ட ரீதியிலான பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சமூகமளித்தார்.<br><br>COM/PP/2025/28 சமர்ப்பித்தவர்;கௌரவ தேவானந்த சுரவீர பா.உ. 2025.07.09 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; MOD/PAC/05/PPC/2022/03<br>திகதி : 2022.04.01 | இலங்கை இராணுவத்தில் கேர்ணல் பதவியில் கடமையாற்றிய மனுதாரரின் கணவரான (காலஞ்சென்ற திரு.எம்.பீ.த.எஸ். ஜயதிலக்க) மிலேனியம் சிட்டி புலனாய்வுப் பிரிவின் பாகாப்பு இல்லம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை நடவடிக்கைகளின் பின்னர் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக 2012.03.31 ஆம் திகதி முதல் கட்டாய அடிப்படையில் ஓய்வில் அனுப்பப்பட்டதாகவும், அரசியல் மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல் காரணமாக இவ்வாறு ஓய்வில் அனுப்பப்பட்டதாகவும், 2023.12.31 ஆம் திகதி தனது கணவர் காலஞ்சென்றதாகவும் தெரிவிக்கும் மனுதாரர் தனது கணவரை இலங்கை | (அ) குறித்த மனுவை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பொதுமனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தியதன் பின்னர் 2023.11.20 ஆம் திகதிய கடிதம் மூலமாக அப்போதைய சனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.<br>(ஆ) ஒரே மாதிரியான குற்றச்சாட்டுக்கள் ஒரே அரச நிறுவனத்தில் கடமையாற்றும் இரண்டு அலுவலர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், பதவியில் கீழ்நிலையில் உள்ள | மனுதாரருக்கான பதவியுயர்வுகள் மற்றும் அதற்கான ஓய்வூதியத்தை வழங்குவது பொருத்தமானது என்று விதந்துரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | இராணுவத்தின் பிரகேடியர் பதவிக்கு பதவியுயர்த்துவதுடன் அதற்கான ஓய்வூத்தையும் பெற்றுத்தருமாறு மனுவில் கோரியுள்ளார். . | உத்தியோகத்தரை குற்றவாளியாக்குவதற்கும் பதவியில் உயர்நிலையில் இருந்த உத்தியோகத்தரை அப்போதைய சனாதிபதியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>(ஆ) சேவைக் காலப்பகுதி இன்னும் 7 ஆண்டுகள் மிகுதியாக இருக்குமபோது 2012.03.31 ஆம் திகதியில் மனுதாரரை சேவையிலிருந்துஓய்வுபெறச் செய்தமை அநீதியான தீர்மானமாகும். | |
| **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 24 | திரு. ஆர்.எச்.ஏ.எம்.ஜே.ஜீ . கருணாரத்ன COM/PP/2025/230 சமர்ப்பித்தவர்;கௌரவ தனுர திசாநாயக்க பா.உ. | 2009 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில் நாளாந்தச் சம்பளம் பெறும் ஊழியராக தொள்பொருள் திணைக்களத்தில் தொடர்ச்சியாக 06 | (அ) மனுதாரர் உட்பட 16 ஊழியர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன் | மனுதாரர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு தகுதியுடையவர் என்பதை தீர்மானித்த குழு அமைச்சரவை |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | 2025.08.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; CA/1/1/15/2/2 (i) திகதி : 2022.01.28 | ஆண்டுகள் பணியாற்றியதாகவும், தற்போது வாய்மூலமான அறிவிப்பினூடாக பணி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுநிருவா சுற்றறிக்கை 25/2014 இற்கமைவாக சேவையை நிரந்தரமாக்குவதற்கும், நிலுவைச் சம்பளம் மற்றும் சேவையிலுள்ள வரப்பிரசாதங்களுடன் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கான கட்டளையொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | றை சமர்ப்பிப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகள்மேற் கொள்ளப்படவில் லை. (ஆ) 2009 ஆம் அண்டில் அமைய, பதலீட்டு மற்றும் தற்காலிக அடிப்படையில் இணைத்துக்கொண் ட ஊழியர்களை நிரந்தரமாக்கும்போ து 180 நாட்களுக்கு 3 நாட்கள் குறைவாக கடமைக்கு சமூகமளித்துள்ளதா ல் சேவையில் நிரந்தரமாக்கப்படா மை. | விஞ்ஞாபனமொன் றைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறும், அது மனுதாரருக்கு தனித்துவமானதாக இருக்கவேண்டும் என்பதுடன், இத்தீர்மானத்தை முன்னுதாரணமாகக் கொள்ளலாகாதுஎன் றும் விதந்துரைக்கப்பட்டு ள்ளது. |
| **நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு** | | | | |
| 25 | திரு. நுவன் சல்ஹாது COM/PP/2025/181 சமர்ப்பித்தவர்;கௌரவ சட்டத்தரணி நிலந்தி கொட்டகச்சி பா.உ. 2025.06.03 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; | 2014 ஆம் ஆண்டில் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் சார்ஜன் பதவிக்கு நியமிக்கப்பட்டு கடமையாற்றுகையில் போலியான குற்றச்சாட்டின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் ஒழுக்காற்றுக் கட்டளை வழங்கப்பட்டதாகவும் | (அ) 2025 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் சிறைச்சாலை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்க்க இருப்பதுடன், ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கமைவாக, ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகளி | சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தின் கவனத்தையும் இடையீட்டையும் இது தொடர்பில் மேற்கொண்டு 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெறவுள்ளசி றைச்சாலை அலுவலர் |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | MOJ/E14/මා.පෙ.කා.ස/ 2022<br>திகதி: 2024.06.25 | அதற்கிடையில் 8 தடவைகள் இடமாற்றம் செய்ததாகவும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்த மேன்முறையீடு நிராகரிக்கப்பட்ட போதிலும், நிர்வாக மேன்முறையீடுகள் நியாயசபை சுற்றவாளியாகத் தீர்ப்பளித்ததாகவும், 2017.02.18 ஆம் திகதி II ஆம் தர சிறைச்சாலை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும், பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்கவில்லை என்பதுடன், ஒழுக்காற்றுக் கட்டளையின் காரணமாக 2022 ஆம் ஆண்டில் குறித்த பரீட்சைக்குத் தோற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதாகவும் தெரிவிக்கும் மனுதாரர், 2017.02.18 ஆம் திகதியிலிருந்து II ஆம் தர சிறைச்சாலை அலுவலர் பதவிக்கு பதவியுயர்வு வழங்குமாறும் நிலுவைப்பணம் உட்படட குழு பொருத்தமானதெனக்கரு தும் ஏனைய நிவாரணங்களை பெற்றுத்தருமாறும் கோரி மனுதாரர் குறித்த மனுவைச் | ன் எண்ணிக்கையில் 25% மூப்புரிமைக்காக ஒதுக்கப்படுகின்றார் கள் எனவும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்துள்ளதுடன் மனுதாரருக்கு இதனைக் கோருவதற்கான சந்தர்ப்பமும் காணப்படுறது.<br><br>(ஆ) மனுதாரருக்கு திட்டவட்டாக அநீதி இழைக்கப்பட்டுள்ள துடன், அரச ஊழியர் என்ற வகையில் அசாதாரண முறையில் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுட ன் அரசியலமைப்பினா ல் உறுதிப்படுத்தப்பட் டுள்ள மனித உரிமையும் மீறப்பட்டுள்ளது. | பதவிக்கான ஆட்சேர்ப்பின்போது மனுதார ரை ஆட்சேர்க்க வேண்டுமெனவும் விதப்புரை வழங்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்துள்ளார். | | |
| **2) நிவாரணங்கள் விதந்துரைக்கப்படாத மனுக்கள்** | | | | |
| ***நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு*** | | | | |
| 26 | திரு. சஞ்ஜய ஹேவா பம்பரந்தகே<br>COM/PP/2025/83<br>சமர்ப்பித்தவர்;கௌரவ லசித் பாஷண கமகே பா.உ.<br>2025.06.03 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இல; MOJ/E14/මා.පෙ.කා.ස/2022<br>திகதி: 2023.01.26 | 2009.10.12 ஆம் திகதியில் சிறைக் காவலர் சேவையில் இணைந்ததாகவும், 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு இரண்டாம் தர சிறைக் காவலர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்தபோட்டிப்ப பரீட்சைக்கு 2019 ஆம் ஆண்டில் தோற்றிச் சித்தியடைந்ததாகவும் 2019.11.20 ஆம் திகதி இடம்பெற்ற நேர்முகப்பரீட்சைக்கு 10 வருடத்திற்கும் அதிகமான சேவை அனுபவத்துடன் சமூகவியல் மற்றும் வெகுசன ஊடகம் தொடர்பான இளமாணி மற்றும் முதுமாணி ஆகிய இரண்டு பட்டங்களைக் கொண்ட விண்ணப்பதாரியாகத் தோற்றியதாகவும், 2021 ஆம் ஆண்டில் நியமனம் வழங்குகையில் தனக்கு நியமனம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கும் மனுதாரர், குறித்த நியமனத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மேற்படி மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) நேர்முகப்பரீட்சையில் விண்ணப்பதாரர் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு<br>• விளையாட்டுத் திறன்கள் 5/5<br>• தொழில்நுட்பத் திறன் 0/5<br>• ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவம் 2/5<br>• இணைப்பாடவிதான செயற்பாடுகள் 3/5<br>• நேர்முகப்பரீட் சைக்கு முகம் கொடுத்தல் 5/5<br><br>இதற்கமைவாக மனுதாரர் 25 மொத்தப் புள்ளிகளில் 15 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள் ளதுடன் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள் ள விதம் | நிவாரணங்களை வழங்குவதற்கு விதந்து ரைக்கப்படவில் லை. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | | சரியானதாக காணப்படுகின்றது.<br><br>(ஆ) எதிர்காலத்தில் உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் பதவிக்கு வெளிவாரியாக ஆட்சேர்க்கப்படவுள்ளதுடன் இதற்கான அடிப்படைத் தகைமையாக பட்டமொன்று பெற்றிருப்பது அவசியமானதாக காணப்படுவதால் இதற்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் மனுதாரருக்கு காணப்படுகின்றது.<br><br>(இ) நேர்முகப்பரீட்சையில் மனுதாரருக்கு உயர்ந்தபட்டச புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அலுவலர்கள் சமரப்பித்துள்ள அறிக்கைகள் மூலம் இந்த விடயம் உறுதியாவதுடன் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்படவில்லை. | |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| 27 | திரு. கே.ஏ. லலித் குமார COM/PP/2025/103 சமர்ப்பித்தவர்;கௌரவ நந்தன பத்மகுமார பா.உ. 2025.06.03 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; ட7/10316 திகதி : 2023.01.31 | 1996.10.15 ஆம் திகதி சிறைச்சாலைகள் திணைக்களத்தில் அமைய அடிப்படையில் சிறைச்சாலைக் காவலராக இணைந்து ஆரம்ப பயிற்சியைப் பூர்த்திசெய்ததன் பின்னர், நிரந்தர காவலராக நியமனம் பெற்று 2015 ஆம் ஆண்டு களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்றம் பெற்று அங்கு கடமையாற்றியுள்ளதுடன், 2019.02.23 ஆம் திகதி தனிப்பட்ட தேவை காரணமாக வெளிநாடு சென்றுள்ளதோடு மனுதாரர் உட்பட இன்னும் சிலர் அங்கு கைதுசெய்யப்பட்டு மீண்டும் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு சிறையில் அடைக்கக்கப்பட்டதாகவு ம், சுமார் ஐந்து மாதங்களின் பின்னர் சிறையிலிருந்து விடுத லை பெற்று கடமைக்கு சமூகமளிப்பதற்காக நிறுவனத்துக்கு சென்ற போது சேவையை விட்டுச் சென்றுள்ளதான அறிவித்தல் விடுக்கப்பட்டிள்ளமை அறியக்கிடைத்ததாகத் தெரிவிக்கும் மனுதாரர், மீளச் சேவையில் | (அ) நியமன அலுவலரும் ஒழுக்காற்று அலுவலருமாகிய சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தால், 2019.01.30 ஆம் திகதி முதல் மருத்துவச் சான்றிதழைச் சமர்ப்பிக்காமல் அல்லது முறையாக அறிவிக்காமல் கடமைக்குக் சமூகமளிக்காத காரணத்தால் உடனடியாக கட மைக்கு சமூகமளிக்குமாறு 2019.02.08 ஆம் திகதி மனுதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ள து.<br>(ஆ) மனுதாரரால் மீளச் சேவையில் அமர்த்துமாறு கோரி 2019.08.25ஆந் திகதி குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள் ள மேன்முறையீடானது , மேற்படி காரணங்களின் அடிப்ப டையிலும் முறையாக விடுமுறைகளை பெற்றுக் கொள்ளாமை | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்து ரைக்கப்பட்டது. |

| தொடர் இல. | மனு பற்றிய தகவல்கள் | எதிர்பார்க்கும் நிவாரணம் | குழுவினால் அவதானிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் | குழுவின் விதப்புரை |
|---|---|---|---|---|
| | | அமர்த்துவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கான நடவடிக்கைகளைச் செய்து தருமாறு கோரி மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | மற்றும் அறிவிக்காமல் வெளிநாடு சென்றமை ஆகிய காரணங்கள் காரணமாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தால் நிராகரிக்கப்பட்டிள் ளதுடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்மு றையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (இ) மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுடுள் ளதாக அவதானிக்க முடியவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| **நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீட மைப்பு அமைச்சு** | | | | |
| 28 | திரு. டபிளியூ.ஜீ.பீ. அபா COM/PP/2025/49 சமர்ப்பித்தவர்;கௌரவ நிஹால் கலப்பத்தி பா.உ. 2025.06.05 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; | அரசாங்க கட்டிடத் திணைக்களத்தின் கீழ் தொழில்நுட்பச் சேவை அலுவலராக றுஹுணு பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிட வேலைத் தளப் பணிப் பொறுப்பாளராக கட மையாற்றியதாகவும், கராப்பிட்டிய புதிய வைத்தியசாலையின் | (அ) கட்டிடப் பணிப்பாளர் நாயகத்தால் மனுதாரருக்கு கராப்பிட்டிய புதிய வைத்தியசலையின் வேலைத் தளத்தில் பணியாற்றுவதற்கு 1983.03.02 ஆம் திகதிய கடிதம் மூலமாக இடமாற்றம் | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டு ள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2/1/14/115(1)<br>திகதி: 2016.06.07 | வேலைத் தளத்தில் கடமையாற்றுவதற்கு இடமாற்றல் செய்யப்பட்டதாவும், தனது நிதிப் பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கும் வரையில் றுஹுணு பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தின் வேலைத் தளத்தில் கடமையாற்றியதாகவும், பின்னர் பொலிசாரின் உத்தரவிற்கமைய பணி நிறுத்தப்பட்டதுடன், சேவையை விட்டு நீங்கியதாக கட்டளை பிறப்பிக்கப்பட்டு நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும்,பின்னர் குறித்த வழக்கிலிருந்து விடுதலைசெய்யப்பட்டதாகவும், இது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்த போதிலும், எந்தவிதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் மனுதாரர், தொழில் உரிமைகள் மற்றும் ஓய்வூதியத்தைப் பெற்றுத்தருமாறும் கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த கடிதம் தொடர்பில் கவனம் செலுத்திய றுஹுணு பல்கலைக் கழகத்தின் வேலைத்தள அமைப்பு பொறியியலாளர்1983.03.07 ஆம் திகதிய விடுவிப்பு கடிதத்தை மனுதாரருக்கு வழங்கியுள்ளார்.<br><br>(ஆ) மனுதாரர் புதிய பணி நிலையத்திற்கு கடமைக்குச் சமூகமளிக்காது முன்னைய சேவை நிலையத்திற்கு கடமைக்குச் சென்றபோது அனுமதியின்றி வேலைத் தளத்திற்கு உள்நுழைந்தமை தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>(இ) 1983.11.22 ஆம் திகதிய கடிதம் மூலம் 1983.07.01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சேவையிலிருந்து நீங்கியதாக கடிதம் வழங்கப்பட்டுள்ளது.<br>(ஈ) சேவையை விட்டுச் சென்றதான கட்டளைக்கு எதிராக அரசாங்க சேவைகள் சேவைகள் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆணைக்குழுவிற்கு சமரப்பிக்கப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள் ளது.<br>(உ) ஓய்வூதிய சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைவாக சேவையை விட்டுச் சென்றதான கட்டளை பிறப்பிக்கப்பட்ட நபருக்கு ஓய்வூதியம் உரித்துடையதாகாது .<br>(ஊ) விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ளபோதி லும் குறித்த விருப்பம் உறுதியானதாக இல்லாமல் இருப்பதுடன், 1983.07.01 ஆம் திகதி முதல் சேவையை விட்டுச் சென்றுள்ளதாக கவனத்திற் கொள்ளப்பட்டுழள்ள தால் போதுமானளவு காலப்பகுதிக்கான பங்களிப்புத் தொகையும் அறவீடு செய்யப்படவில்லை. | |
| 29 | திருமதி மாலனீ மஹகமாரச்சி<br>COM/PP/2025/301<br>சமர்ப்பித்தவர்;கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்க பா.உ. | இலக்கம் 204/16, புளுமெண்டல் பிரிவு, கொழும்பு 13, எனும் முகவரியில் காணப்பட்ட அப்போதைய மதிப்பீட்டின் | (அ) காணிப் பகுதிக்கு காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைத்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | 2025.06.05 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; MMWD/EST8/ Public Petition திகதி: 2017.03.30 | அடிப்படையில் சுமார் முப்பத்து ஐந்து இலட்சம் பெறுமதியான மனுதாரருக்குச் சொந்தமாக காணப்பட்ட குறித்த ஒரேயொரு வீட்டை கொழும்பு மாநகர சபை அரசாங்கத்திற்கு கையகப்படுத்தியதன் பின்னர் அதனை உடைத்து அகற்றியதாகவும், அதில் காணப்பட்ட மின்சார உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள் ஆகிய எந்தவொரு பொருளும் மனுதாரருக்கு கிடைக்கவில்லை என்பதுடன், குறித்த வீடு அமைந்திருந்த காணிக்கு மாத்திரம் ரூ. 61,784.74 நஷ்ட ஈட்டுத் தொகை கிடைக்கப் பெற்ற போதிலும், உடைக்கப்பட்ட வீட்டிற்கான நஷ்டஈடு அல்லது மாற்று வீடு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கும் மனுதாரர் தனக்கான வீட்டை அல்லது நியாயமான நட்டஈட்டுத் தொகையினைப் பெற்றுத் தருமாறும் கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | நட்டஈட்டுத் தீர்மானத்திற்கு அமைவாக ரூ. 61,794.72 நஷ்ட ஈட்டுத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையாக ரூ.17,602.67 செலுத்தப்பட்டுள்ளது.<br><br>(ஆ)குறித்த காணியினைக் கையகப்படுத்தும் செயன்முறையின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்கையாக காணப்படுவதுகைய கப்படுத்தும்சந்தர்ப்ப த்தில் வீட்டில் வசிக்கின்றவர்களுக் கு வீடுகளை இழந்ததற்காக வீடொன்றை பெற்றுக்கொடுப்பதா கும். மனுதாரருக்கு வீடு கிடைக்காமைக்கான காரணம் குறித்த காலப்பகுதியில் அவர் அங்கு வசிக்காமை ஆகும்.<br>(இ) மதிப்பீட்டாளர் சமர்ப்பித்துள்ள மதிப்பீட்டிற்கு அமைவாக மனுதாரர் உரிமை கோரிய இல. 37 ஆம் காணிக்காக அவருக்கு வழங்கியுள்ள ரூ. 61,794.72 நட்டஈட்டுத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை ரூ. 17,602.60 வழங்கப்படிருப்பது | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | குறித்த காணிக்காக மாத்திரமன்றி காணி மற்றும் வீடு ஆகிய இரண்டுக்குமென அவதானிக்கப்படுவதனால், மனிதாரருக்கு வீடொன்றை வழங்க முடியாதுள்ளது. | |
| 30 | திரு. பீ.யூ.டீ. பெரேரா COM/PP/2025/144 சமர்ப்பித்தவர்;கௌரவ அசித்த நிரோசண எகொட விதான பா.உ. 2025.06.05 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; MUD&H/ADM/02/ 05 திகதி: 2021.03.018 | 1983.05.02 ஆம் திகதி கொலன்னாவை அராங்க தொழிற்சாலையில் சேவையில் இணைந்ததாகவும், அங்கு பல்வேறு ஊழியர்கள் மேற்கொண்ட அநீதியான செயற்பாடுகள் காரணமாக உரிய காலப்பகுதிக்கு 3 வருடங்களுக்கு முன்னராக சேவையிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், அதன் காரணமாக தான் வசித்த அரச விடுதியை மீளவும் ஒப்படைக்க வேண்டி ஏற்பட்டதால் வாடகை வீட்டிற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கும் மனுதாரர் முன்னராக ஓய்வுபெற்றதால் 3 வருடங்களுக்கு கிடைக்காமல் போன சம்பளம், பதவியுயர்வுகளுக்கான நிலுவைச் சம்பளம் மற்றும் சம்பள ஏற்றம் ஆகியவற்றைப் பெற்றுத்தருமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) மனுதாரர் தனது விருப்பத்தின் அடிப்படையில் 57 ஆவது வயதில் ஓய்வுபெற்றுள்ளார்.<br><br>(ஆ) சேவையிலிருந்து ஓய்வுபெறும் அலுவலர் 03 மாதத்திற்குள் அரசாங்க விடுதியை ஒப்படைக்க வேண்டியுள்ளதால் மனுதாரர் தான் வசித்துவந்த விடுதியை ஒப்படைப்பது அவசியமாகும்.<br><br>(இ) மனுதாரர் கோருவதற்கேற்ப, கடமை செய்யாத காலப்பகுதிக்கான சம்பளம் மற்றும் சம்பள ஏற்றங்களை வழங்க முடியாதுள்ளது. | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | திரு. ஆர்.எம். ஹேமச்சந்திர பண்டார COM/PP/2025/74 சமர்ப்பித்தவர்;கௌரவ கே.வீ. சமந்த வித்தியாரத்ன பா.உ. 2025.06.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல; 2/15/27/195 திகதி: 2024.01.18 | 1975ஆம் ஆண்டு முதல் 36 வருடங்கள் காணி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாற்றியதுடன் ஊவா மாகாணத்தின் உதவிக் காணி ஆணையாளராக (திணைக்களத்தின்) பதவியுயர்வு பெற்றதுடன், 2011.07.01 ஆம் திகதி 60 வயது பூர்த்தியானதன் அடிப்படையில் ஓய்வுபெற்ற போதிலும், ஊவா மாகாண சபையின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த பதவியிலே சுமார் ஐந்து ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியதாகவும், பொதுநிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இற்கமைவாக, SL 01 சம்பள அளவுத் திட்டத்திற்கு ஏற்புடையதாக இருந்த போதிலும் தனது சம்பளம் மற்றும் ஓய்வூதியம் கணிப்பிடப்பட்டுள்ளது MN 07 சம்பளம் அளவுத்திட்டத்திற்கு அமைவாகவாகும் எனத் தெரிவித்துள்ள மனுதாரர் பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டமான SL 01 இற்கமைவாக சம்பளம் மற்றும் ஓய்வூதியம் உட்பட ஏனைய வரப்பிரசாதங்களையும் வழங்குமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) மனுதாரர் 2011.07.01 ஆம் திகதி முதல் ஓய்வுபெற்றுள்ளதுடன், முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் ஊவா மாகாணசபையின் குறித்த பதவிக்காக 2013.01.01 ஆம் திகதி முதல் SL-1-2006 சம்பள அளவுத்திட்டத்தை அங்கீகரிக்கப்பட்டுள்ளமையால் மனுதாரரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை SL-1-2006 இற்கமைவாக கணிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள் கிடையாது.<br><br>(ஆ) மனுதாரர் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 2013.01.01 ஆம் திகதியின் பின்னரான காலப்பகுதிக்கு SL-1 – 2006 சம்பள அளவுத்திட்டத்திற்கு அமைவாக சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>(இ) மனுதாரருக்கு உதவி மாகாணக் காணி ஆணையாளர் பதவியானது 2010 | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட போதிலும் குறித்த பதவியானது 1994 ஆம் ஆண்டு வரையில் முற்திகதியிட்டு வழங்கப்பட்டுள்ளது. (ஈ) மனுதாரருக்கு 2009 ஆண்டு வரையில் குறித்த நிலுவைச் சம்பளம் செலுத்தப்பட்டுள்ள துடன் நிறுவன ரீதியாகப் பார்க்கும்போது பெரும்பாலும் மனுதாரருக்கு நியாயமான நன்மைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. | |
| 32 | திரு. கே.ஜீ. ராஜசிங்க COM/PP/2025/138 சமர்ப்பித்தவர்;கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க பா.உ. 2025.06.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டதுஅ மைச்சின் தொடர்பு இல; IWRM/AD/DO/02/ெ. பெ./09/2016 திகதி: 2017.02.27 | 1969.02.10 ஆம் திகதி முதல் 1980.09.25 ஆம் திகதி வரையில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மண் பயன்பாட்டுப் பிரிவின் ஆராய்ச்சி உதவியாளராக பணியாற்றியதாகவும், சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுக்கொண்டு வெளிநாட்டுக்குச் சென்று மீண்டும் நாட்டுக்கு திரும்பியதன் பின்னர் 1990.02.26 ஆம் திகதி முதல் 1990.08.01 ஆம் திகதி வரையில் பணியாற்றியதாகவும், பின்னர் சுகயீனம் | (அ) 1980.09.22 ஆம் திகதி முதல் 1983.09.22 ஆம் திகதி வரையில் சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுள்ளதுடன் சம்பளமற்ற விடுமுறைக் காலம் நிறைடைந்ததன்பின் னர் மீண்டும் பணிக்கு திரும்பா மையால் 1983.09.23 ஆம் திகதி முதல் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளதுடன், இது | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துக்கப்பட்டுள் ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காரணமாக பணிக்குச் சமூகமளிக்காத காரணத்தினால் 1990.11.22 ஆம் திகதிய கடிதம் மூலம் சேவை விட்டுச் சென்றுள்ளதாக கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், 10 வருடங்களுக்கு அதிகமாக பணியாற்றியவர்களுக்கு ஓய்வுபெறுவதற்குச் சந்தர்ப்பமளிக்கும் 1990.10.18 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பித்ததாகத் தெரிவிக்கும் மனுதாரர் மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | தொடர்பாக மனுதாரர் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்த பின்னர் கடமையில் இல்லாத காலப்பகுதியை சம்பளமற்ற விடுமுறையாகக் கருதி 1990.01.22 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் பணியில் அமர்த்துமாறு பகிரங்க சேவைகள் ஆணைக்குழு வழங்கிய விதப்புரைக்கமைவாக மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.<br>(ஆ) 1990.08.12 ஆம் திகதி தொடக்கம் மீண்டும் பணிக்கு திரும்பாமையால் சேவையை விட்டு நீங்கியதாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த சந்தர்ப்பத்தில் மனுதாரரால் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடானது நிராகரிக்கப்பட்டுள்ளது.<br><br>(இ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் நாயகம் மற்றும் நிறுவன பணிப்பாளர் நாயகத்தின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற குழுவின் விதப்புரைகளுக்கமைவாக ஓய்வூதியச் சம்பள சேவைப் பிரமாணத்தின் 44 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள கருணை அடிப்படையிலான கொடுப்பனவு ஓய்வூதியச் சம்பள சேவைப் பிரமாணத்தின் 20 (1) பிரிவுடன் கூடியதாக பொருள்கோடல் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென விதந்துரைக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட விதப்புரையினை அமைச்சரவை அங்கீகாரத்திற்கு ஆற்றுப்படுத்தியதன் பின்னர், சேவையை விட்டு நீங்குதல், இராஜினாமாச் செய்தல் அல்லது பணிநீக்கம் செய்தல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் பணியை நிறைவுசெய்த நபருக்கு கருணை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்ப டையிலான கொடுப்பனவை உரித்தாக்க முடியாதென்றும், குறித்த தீர்மானத்தை 2009.01.06 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துதல் வேண்டும் என்றும், 2022.10.12 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக வழங்கப்பட்டுள்ளது.<br><br>(ஈ) இதற்கமைவாக சேவையை விட்டு நீங்கிய அறிவித்தலின் அடிப்படையில் பணி நிறைவுசெய்யப்பட்டுள்ள மனுதாரருக்கு கருணை அடிப்படையிலான பணிக்கொடை உரித்துடையதாகாது. | |
| 33 | திரு. டீ. சமந்த பெரமுணுகம COM/PP/2025/147 சமர்ப்பித்தவர்; கௌரவ ருவன்திலக்க ஜயகொடி பா.உ. 2025.06.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டதுஅமைச்சின் தொடர்பு இல; MOI/AD/05/04/ ම.පෙ.(02 -2023) திகதி: 2023.11.07 | 1988.06.15 ஆம் திகதி இலங்கை மகாவெலி அதிகாரசபையில் ஆவணப் பொறுப்பாளர் பதவி தரம் II இற்கு நியமனம் கிடைக்கப்பெற்று 1995.05.23 ஆம் திகதி ஆவணப் பொறுப்பாளர் பதவி தரம் I இற்கு பதவியுயர்த்தப்பட்டதாகவும், 2008 ஆம் ஆண்டில் அநீதியான முறையில் வதிவிட முகாமைத்துவ தம்புத்தேகம அலுவலகத்திற்கு | (அ) 2008 ஆம் ஆண்டில் கடமைக்குச் சமூகமளிக்காமை மற்றும் கடமையினை உதாசீனம் செய்தமை ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு சேவையை விட்டுச் சென்றுள்ளதாகக் கருதி 2008.11.06ஆந் | மனுதாரர் கோரும் நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடமாற்றம் வழங்கியதாகவும், அங்கு பணியாற்றுகையில் நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்டு அதற்கான மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டிருக்கையில் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ளதாக அறிவித்து நிர்வாகத்தால் கடிதமொன்று வழங்கப்பட்டதாகவும், இது தொடர்பில் வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் விடயங்களை முன்வைத்த போதிலும் நியாயம் கிடைக்காத காரணத்தினால் நீதிமன்ற நடவடிக்கை மேற்கொண்டதாகவும், வழக்கு இல. 35/2012 இன் கீழ் மேல் நீதிமன்றம் 2014.06.11ஆம் திகதி, 2008.11.16 ஆம் திகதி முதல் 2012.05.15 ஆம் திகதி வரையான 42 மாதங்களுக்கும் ரூ. 362,040/- கொடுப்பனவை வழங்குவதற்கும் மனுதாரரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கும் கட்டளை வழங்கிய போதிலும், மீண்டும் சேவையில் அமர்த்தும்போது வழங்குமாறு நீதிமன்றம் விதித்த 362,040/- கொடுப்பனவு வேண்டாம் என சத்தியக் கடதாசியின் மூலம் தெரிவிக்குமாறு மகாவெலி அதிகாரசபையால் அழுத்தம் | திகதிய கடிதம் வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்கு எதிராக மனுதாரர் அநுராதபுரம் தொழில் நியாய சபையில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், அதன் பின்னர் நிலுவைச் சம்பளத்தை வழங்குமாறும் கோரி மேல் நீமன்றத்தில் மேன்முறையீடுசெய்துள்ளதுடன் அத்தீர்ப்பின் படி மனுதாரரை மீளச்சேவையில் அமர்த்துமாறும் ரூ. 362,040.00 தொகையாகிய நிலுவைச் சம்பளத்தை வழங்குமாறும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புக்கு எதிராக 2014.07.23 ஆம் திகதி இலங்கை மகாவெலி அதிகாரசபையின் சட்டப்பிரிவு உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.<br><br>(ஆ) அப்போது விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரைச் சந்தித்து | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுத்ததாகவும், தொழில் இல்லாது இருந்தமையால் அதற்கு கையொப்பமிட்டு தொழிலைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும், சம்பள ஏற்றம் மற்றும் பதவியுயர்வுகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேல் நீதிமன்றத்தால் செலுத்துமாறு விதிக்கப்பட்ட ரூ. 362,040/- தொகையினையும் இல்லாமல் செய்துள்ள 5 வருடங்களுக்கான சம்பள எற்றங்கள் மற்றும் 34 வருட சேவைக் காலப்பகுதியில் கிடைக்கவேண்டிய பதவியுயர்வுகளையும் வழங்குமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | கலந்துரையாடிய பின்னர் மனுதாரர் சத்தியக் கடதாசியினை சமர்பித்து நிறுவனம் செலுத்தவேண்டியுள்ள ரூ. 362,040.00 நிலுவைப்பணத்தை தனது சுய விருப்பத்தின் அடிப்படையில் கோருவது இல்லை என்றும், தன்னை மீளச் சேவையில் அமர்த்துமாறும் கோரியுள்ளதுடன் சத்தியக் கடதாசியினையும் சமர்ப்பித்துள்ளார். இதற்கமைவாக மனுதாரர் மீளச்சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்.<br>(இ) மனுதாரருடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கு அமைவாக மகாவெலி அதிகாரசபையால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடானது மீளப்பெறப்பட்டுள்ளது.<br>(ஈ) மேற்படி விடயத்திக்குப் பொறுப்பான அமைச்சர் மாற்றமடைந்த போதிலும், பின்னர் விடயத்திற்குப்பொறுப்பாக இருந்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அமைச்சர்களிடம் மனுதாரர் எந்தவிதமான நிவாரணங்களையும் கோரவில்லை.<br>(உ) மனுதாரர் ஓய்வு பெறுகையில் தரம் II போக்குவரத்து அலுவலராக பதவியுயர்வும் பெற்றுள்ளார். | |
| 34 | திரு. டபிளியூ.ஏ. ஜயசேன COM/PP/2025/180 சமர்ப்பித்தவர்;கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர பா.உ.<br>2025.06.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டதுஅமைச்சின் தொடர்பு இல; MOI/AD/05/04/. ම.පෙ.(02-2024)<br>திகதி: 2024.07.04 | மனுதாரரின் மனைவியின் பெயரில் சந்திரிகா வாவி பிரிவின் இறுதிக் கிராம வரைபட இல. 778/08 இல் காணப்படுகின்ற இல.1002 துண்டிற்கு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு வீடொன்றை நிர்மாணித்து 2014 ஆம் ஆண்டு முதல் வசித்து வந்ததாகவும், பின்னர் மனைவி மற்றும் பிள்ளை இறந்தமையால் மன உளைச்சலில் இருந்து விடுபடுவதற்காக மற்றுமொரு நபருக்கு வாய்மூலமாக குறித்த சொத்துக்களை ஒப்படைத்துவிட்டு தொழில் நிமித்தம் கொழும்புக்குச் சென்றதாகவும், கொரோனா தொற்றுக் காரணமாக வீட்டுக்குச் செல்ல முடியாமல் போனதாகவும், பின்னர் வீட்டுக்குச் சென்றபோது மனுதாரரின் குறித்த வீட்டினைப் பொறுப்பேற்ற நபர் அவரது மகனின் பெயரில் | (அ) இலங்கை மகாவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியினை முறையற்ற விதத்தில் நபர்களுக்கிடையில் விடுவிப்பது சட்டரீதியற்றதாகும் என்பதால் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் காணப்படுகின்ற நடவடிக்கை முறைமையினை முழுமையாகப் பூர்த்திசெய்த பின்னர் குறித்த காணியினை அரசாங்கத்திற்கு கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.<br>(ஆ) குறித்த காணியினை மனுதாரர் வாக்குறுதிப் | நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாற்றியுள்ளதாகவும், தற்போது அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டுஅரசாங்கத்தின் பொறுப்பில் காணப்படுவதாகவும், இது தொடர்பாக உரிய நிறுவனங்கள் மற்றும் பொலிசாரிடம் முறைப்பாடுகள் செய்த போதிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென்ற போதிலும், உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான சாட்சிகள் காணப்படுவதால் வீட்டுடன் கூடிய காணியை பெற்றுத்தருமாறும் கோரி மனுவைச் சமர்பித்துள்ளார். | பத்திரத்தின் மூலமாக கைமாற்றியுள்ளதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளடுள்ளமையும், அவ்வாறான வாக்குறுதிப் பத்திரத்தில் தான் கையொப்பம் இடவில்லை என்றும் அதில் காணப்படுகின்ற கையொப்பமானது தன்னுடையது இல்லை என்ற மனுதாரரின் வாக்குமூலமும். (இ) குறித்த வாக்குறுதிப்பத்திலுள்ள கையொப்பமானது மனுதாரரின் கையொப்பமா இல்லாவிட்டால் போலியாக இடப்பட்ட கையொப்பமா என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எம்பிலிபிட்டிய விசேடக் குற்ற புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தின் மூலமாக 2022.05.06 ஆம் திகதி இரசாயன பகுப்பாய்வு அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் குறித்த அறிக்கைக்கு அமைவாக வாக்குறுதிப்பத்திரத் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தில் காணப்படுகின்ற கையொப்பம் மனுதாரரின் கையொப்பமாகும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| 35 | திரு. எஸ்.ஏ. சோலித சுபசிங்க COM/PP/2025/70 சமர்ப்பித்தவர்;கௌரவ தர்மப்பிரிய விஜேசிங்க பா.உ. 2025.08.19 ஆந் திகதி விசாரணை மேற் கொள்ளப்பட்டதுஅமைச்சின் தொடர்பு இல; Agri/AD/E11/1/53திகதி: 2025.04.28 | போலியான கல்விச் சான்றிதழ் சமர்ப்பித்ததாக குற்றம் சாட்டப்பட்டு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரால் 2009 ஆம் ஆண்டில் மனுதாரர் சிறையில் அடைக்கப்பட்டதாகவும், நீமன்றத்தால் கோரப்பட்ட குறித்த போலிச் சான்றிதழின் மூலப்பிரதி இல்லையென ஆணையாளர் நீதிமன்றத்திற்கு தெரிவித்ததாகவும், 08 வருடங்களின் பின்னர் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வழக்கினை மீளப் பெற்றதாகவும், குறித்த வழக்கின் விசாரணை நடவடிக்கைகள் பொறுப்பற்ற வகையில் மேற்கொண்டுள்ளதாக கௌரவ நீதவான் தீர்மானித்ததாகவும், இது தொடர்பில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவும் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளதாக தெரிவிக்கும் மனுதாரர், தனக்குரிய ஓய்வூதியத்தை | (அ) சமுர்த்தி மேற்பார்வையாளராக முதல் நியமனம் கிடைத்துள்ளதுடன், 1996.03.01 ஆம் திகதி முதல் கமநல சேவைகள் திணைக்களத்தில்கமநல சேவை மேற்பார்வையாளராக சேவையில் இணைந்துள்ளதுடன் 1998.09.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்குஅமைவாக 1999.05.03 ஆம் திகதி முதல் குறித்த திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு பணியாற்றிய 3500 கமநல சேவை மேற்பார்வையாளர்களுக்கும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவியில் நியமனம் வழங்கியதாகவும், இதற்கமைவாக மனுதாரரும் விவசாய ஆராய்ச்சி | நிவாரணங்களை வழங்க முடியாதுள்ளதாக விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுத் தருவதற்கான நடடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி குறித்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.<br><br>(ஆ) குறித்த பதவிக்கான தகைமைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் போது மேற்படி மனுதாரர் சமர்ப்பித்துள்ள 1980 ஆம் ஆண்டின் க.பொ.த.(சா./தரம்) பரீட்சையின் 3143872 ஆம் இலக்க பெறுபேற்று ஆவணத்தை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள பெறுபேற்று ஆவணத்துடன் ஒப்பீடுசெய்து பார்க்கையில் முரண்பாடு காணப்பட்டமையால் பணி முடிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>(இ) மனுதாரர் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமரப்பித்துள்ள முறைப்பாட்டிற்கு அமைவான விசாரணை நடவடிக்கைகளுக்கான தாபன விதிகோவையின் II | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆம் தொகுதியின் 3 ஆவது பகுதிக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட அறிக்கையுடன் அவரது பிரத்தியேகக் கோப்பினையும் பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தியதாகவும், இதற்கமைவாக மேற்படி பதவிக்கு ஆட்சேர்க்கும் நேர்முகப்பரீட்சையில் மனுதாரர் போலிச் சான்றிதழை சமர்பித்துள்ளதுடன், பரீட்சை ஆணையாளர் நாயகம் குறித்த சான்றிதழ் போலியானது என்பதை உறுதிசெய்யாமை மற்றும் குறித்த பதவிக்கான தகைமைகளை அவர் பூர்த்திசெய்யாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் அவரது மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது.<br>(ஈ) மேன்முயீட்டு நீதிமன்றத்தில் மனுதாரர் உள்ளிட்ட தரப்பினரால் சமர்பிக்கப்பட்டமே | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ன்முறையீட்டை தள்ளுபடி செய்வதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.<br>(உ) மனுதாரர் உட்பட 85 முறைப்பாட்டாளர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை அலுவலரினால் "முறைப்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பரீட்சை சான்றிதழ் மீது கொண்டுள்ள பொறுப்பு பிணைப்பு எத்தகையது " என்பது தொடர்பில் விசாரணைசெய்து அதற்கமைவாக குற்றத்துடன் சம்பந்தப்படாதவர்களை விசாரணைசெய்து அவர்களை மீளச்சேவையில்அமர்த்துவதற்கு விதந்துரைக்கப்பட்டது.<br>(ஊ) மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மனுதாரர் சனாதிபதி செயலகத்திற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஆற்றுப்படுத்திய கடிதத்திற்கு நிவாரணம் வழங்க முடியாதுள்ளதாக பதில் அறிவிக்கப்பட்டுள்ளது.<br>(எ) மனுதாரரால் நிர்வாக மேன்முறையீட்டு அதிகாரசபைக்கு மேன்முறையீடு சமர்பிக்கப்பட்டபோதிலும் அதனைத் தள்ளுபடி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>(ஏ) போலிச் சான்றிதழ்களை சமர்ப்பித்தமையால் பணிநீக்கம் செய்யப்பட்ட விவசாய ஆராய்ச்சி மற்றும் உதவி உற்பத்தி அலுவலர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனமானது அரச சேவைக்கு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்பதாலும் அரச சேவைக்கு முறையற்ற விதத்தில் நுழைவதனை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஊக்குவிப்பதாகவு அமையலாம் என்பதாலும் இதற்கு இணங்க முடியாதுள்ளதாக குறிப்பிட்டு குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தை நிராகரிப்பதாகவும், இவ்வாறான குற்றங்களை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்டரீதியாகவும் ஒழுக்காற்று ரீதியாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>(ஒ) கல்விச் சான்றிதழ்களை வழங்குகையில் பாடசாலைகளால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்களில் குறைபாடுகள் காணப்படின் அது தொடர்பில் அதனைத் தயாரித்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்பதுடன், சமுர்த்தி மேற்பார்வையாளர்களின் அடிப்படைத் தகைமையாக 5 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் என சனாதிபதியின் செயலாளரின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2006.09,16 ஆம் திகதிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தால் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தனக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு 9 வருடங்களாக வழக்கு நடவடிக்கைகள் கொண்டு நடாத்தப்பட்டதுடன் இறுதியில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் குறித்த வழக்கை மீளப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் மனுதாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>(ஓ) மனுதாரரின் கல்விச் சான்றிதழில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக அவரது பணி முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், பதவிக்குரிய அடிப்படை கல்வித் தகைமைகளை மனுதாரர் பூரத்தி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செய்யவில்லை எனவும், குறித்த சான்றிதழை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சமர்ப்பித்ததன் மூலம் அவர் தவறு செய்யவில்லை என்பதும் இங்கு உறுதிப்படுத்தப்பட வில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | திருமதி. டபிள்யூ.ஜி. அனுலாவதி<br>COM/PP/2025/193<br>சமர்ப்பித்தவர்: கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன, பா.உ.<br>2025.08.19ஆந் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: Agri/AD/E11/1/56/56<br>திகதி: 2025.04.16 | பண்டாரவளை பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாக மேல்மட்டத்தினால் 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1994ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு மனுதாரரிடமிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புத் தொகை அறவிடப்படாத காரணத்தால் அந்தக் காலப்பகுதி ஓய்வூதியத் தயாரிப்பிற்காக கணிப்பிடப்படவில்லை எனக் குறிப்பிடுகின்ற மனுதாரர் உரிய காலப்பகுதிக்கான பங்களிப்புத் தொகையை அறவிடுவதன் மூலமோ அல்லது அமய மற்றும் ஒப்பந்த சேவைக் காலங்களை இணைப்பதன் மூலமோ ஓய்வூதியத்தைத் தயாரித்துத் தருமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) மனுதாரர் விவசாயத் திணைக்களத்தின் பண்டாரவளை பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் ஓர் அமய ஊழியராக 1980 - 1984 வரையில் பணியாற்றி, 24 ஆண்டுகால நீண்ட இடைவெளிக்குப் பிறகு, மீண்டும் அவர் 2008.09.12 ஆந் திகதி ஒப்பந்த ஊழியராக சேவைக்கு திரும்பியுள்ள அதேவேளை பொது நிர்வாகச் சுற்றறிக்கை 25/2014 (i) இன் ஏற்பாடுகளின் கீழ் 2014.12.30 ஆம் திகதி நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய பதவிக்கு | மனுதாரருக்கு ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து பணிக்கொடையை பெற்றுக்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்ட அதேவேளை கோரப்பட்ட நிவாரணமாகிய ஓய்வூதிய உரித்தை வழங்க பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நியமிக்கப்பட்டதென வும், நிரந்தர நியமனத்தைப் பெறுகின்றபோது அவருக்கு வயது 54 என்பது, மனுதாரர் 60 வயதை எட்டியதன் மீது 2020.07.04ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார் என்பது<br>ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கங்கள் 25/2014 மற்றும் 25/2014(i) இற்கு அமைவாக, ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்ற போது 45 வயதைத் தாண்டுகின்ற தொழிலாளர்களுக்கு ம் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதெ ன்பது<br>(இ) அத்தகைய ஊழியர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளை உரித்தாக்குவதற்காக 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளதென்பது<br>(ஈ) அது தொடர்பாக | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 2018.06.20 ஆம் திகதிய අමප/18/0495/728/016 ஆம் இலக்க மற்றும் 2021.08.03 ஆம் திகதிய අමප/ 21/1269/315/025 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானங்கள் பெறப்பட்டுள்ளதென்பது (உ) மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின்படி ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கான மனுதாரரின் மொத்த சேவைக் காலம் 08 ஆண்டுகளும் 05 மாதங்களும் 09 நாட்களும் என்பது (ஊ) மேற்படி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய, மனுதாரரின் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதுடன் தொடர்புடைய சேவைக் காலத்திற்கு கிடைக்கக் கூடியது சேவை பணிக்கொடை மாத்திரமே என்பது (எ) அதற்குரியதான விண்ணப்பம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பது (ஏ) மனுதாரர் மொத்தமாக 14 ஆண்டுகள், 09 மாதங்கள் மற்றும் 22 நாட்கள் அரச பணியில் ஈடுபட்டதால், அந்தக் காலத்திற்குரிய ஓய்வூதியத்தை எதிர்பார்ப்பதாகவும் பணிக்கொடையை மாத்திரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கவில்லையென்பது | |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 37 | திரு. ஈ.ஜே.ஏ.பி. தயானந்த COM/PP/2025/202 சமர்ப்பித்தவர்: கௌரவ ரீ.கே. ஜயசுந்தர, பா.உ. 2025.07.09ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/DEF/GS-5/PPC/GENERAL (157) திகதி: 2021.02.25 | இலங்கை இராணுவத்தின் நிரந்தர சேவையில் 15 ஆண்டுகள், 02 மாதங்கள் மற்றும் 26 நாட்களைப் பூர்த்தி செய்துள்ளதுடன் அதற்கு மேலதிகமாக, 4 ஆண்டுகள், 08 மாதங்கள் மற்றும் 16 நாட்கள் தன்னார்வ சேவையை முடித்திருப்பினும் ஓய்வூதியத்தைக் கணக்கிடும்போது இராணுவ ஊதியம் மற்றும் பதிவு அலுவலகத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக தன்னார்வ சேவைக் காலம் சரியாகக் | (அ) மனுதாரர் இராணுவத்திலிருந்து விலக்கப்பட்ட திகதியாகிய 1991.07.30ஆம் திகதிக்கு அவரது தன்னார்வ இராணுவ சேவைக் காலம் 04 ஆண்டுகள் 06 மாதங்கள் மற்றும் 28 நாட்கள் மற்றும் நிரந்தர இராணுவ சேவைக் காலம் 12 ஆண்டுகள் 06 மாதங்கள் மற்றும் 21 நாட்கள் என்பதும், | நிவாரணம் வழங்க பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கிடப்படவில்லையெனவும், 1989.06.15 ஆம் திகதிய 562/11 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் கட்டளைகளுக்குஅமைவாக 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவ சேவையை விட்டு வெளியேறும் ஒரு சிப்பாயின் சேவைக் காலத்துடன் 03 ஆண்டுகள் சேர்க்கப்பட வேண்டுமெனவும் அவ்வாறு சேர்க்கும்போது தனது சேவைக் காலம் 22 ஆண்டுகள், 09 மாதங்கள் மற்றும் 26 நாட்கள் என முழுமைபெற்ற காரணத்தால் ஓய்வூதியம் பெறுவதற்கு உரித்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ள நிலையில், அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரி மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | அதன்படி, அவரது மொத்த இராணுவ சேவைக் காலம் 17 ஆண்டுகள் 01 மாதம் 19 நாட்கள் என்றும்.<br>(ஆ) 2007.08.31.ஆம் திகதிய 1512/19ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக, 20 ஆண்டுகளுக்குக் குறையாத சேவைக் காலத்தை பூர்த்தி செய்து இருந்தால், அவர் ஓய்வூதியம் பெற உரித்துடையவர் என்று திருத்தப்பட்டிருந்தாலும் 1989.06.1ஆம் திகதிய 562/11ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் 34ஆவது பிரிவிற்கமைய, 1983.12.31 இற்குப் பிறகல்லாத ஒரு திகதியில் சேவைத் தேவைப்பாடு தொடர்ந்தும் அவசியமில்லை என்பதன் அடிப்படையில் சேவையிலிருந்து நீக்கப்பட்ட சிப்பாய் ஒருவருக்கு | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஓய்வூதியத்திற்கு மற்றும் பணிக்கொடை பணிக்கு 03 ஆண்டுகள் சேர்க்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளதால், மனுதாரருக்கு 20 ஆண்டுகள் பணிக்காலம் வழங்க உரித்தில்லை என்பது | |
| 38 | திரு. எஸ்.எச்.என்.ஆர். சமரதுங்க COM/PP/2025/208 சமர்ப்பித்தவர்:கௌரவ வசந்த பியதிஸ்ஸ, பா.உ 2025.07.09ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/PAC/05/PPC/2024/12 திகதி:2024.08.08 | சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணி புரிந்ததாகவும், வாகன விபத்துக்குள்ளாகி முறையான மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து விடுமுறை பெற்றிருந்தார் எனவும், பின்னர் 2012.09.21 ஆம் திகதி மீண்டும் சேவையில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், மீண்டும் தொழிலை பெற்றுக்கொள்ள அவசியமான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரி மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | (அ) நீண்ட காலமாக பணிக்குத் திரும்பாத காரணத்தால் மனுதாரரின் சேவையை இடைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் (ஆ) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கான புதிய ஆட்சேர்ப்புகள் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி திணைக்களத்தை மூடுவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் (இ) பணி முடிவுறுத்தப்பட்ட நேரத்தில், மனுதாரர் அமய | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் தினசரி ஊதியம் பெற்று பணி புரிந்துள்ளதாகவும் மேலும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் அவரது சேவைக் காலம் அண்ணளவாக இரண்டு ஆண்டுகள் எனவும் (ஈ) மனுதாரரை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு போதுமான விடயங்களை முன்வைக்கவில்லை எனவும் | |
| 39 | திரு. டபிள்யூ.எம்.ஐ.ஆர். சந்திரா COM/PP/2025/141 சமர்ப்பித்தவர்: கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ. 2025.07.09 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MOD/PAC/05/PPC/2025/02 திகதி: 2025.04.07 | இலங்கை கடற்படையின் இலங்கை கடற்படையின் பொறியியல் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட உடல் நலக்குறைவு காரணமாக அவர் கடற்படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், பின்னர் அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டதுடன் அவரது நோய்நிலைமை காரணமாக முப்படை மருத்துவ சபைக்கு அனுப்பப்பட்டு 2020.08.18 ஆம் திகதி சேவை ஓய்வூதியத்துடன் ஓய்வுறுத்தப்பட்டபோதிலும் வேறு எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு பலவீனமடைந்துள்ளதுடன் தமது இயலாமையைக் | (அ) 04 மருத்துவ சபைகள் நடத்தப்பட்டு, இவரது இயலாமையின் சதவீதம் 90% எனக் குறிப்பிடப்பட்டுள்ள தாகவும், அதன்படி, 2020.08.18 ஆம் திகதியுடன் 12 ஆண்டுகால சேவையை முடிவுறுத்தியதியதன் பின்னர் மனுதாரருக்கு ஓய்வூதியம் உரித்தாக்கப்பட்டுள்ளது எனவும் (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருத்திற் கொண்டு, 55 வயது வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலக்கம் 22/93 இற்கமைய நிவாரண உரித்தாக்கல் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு, "இந்த கடற்படைச் சிப்பாயின் நோய் நிலைமையானது பணியில் இருந்தபோது அல்லது சேவைக்கு சமூகமளிக்கும் போது நிகழ்ந்ததாக உறுதிப்படுத்தப்படாத காரணத்தால், பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/93 இன் விடயப்பரப்பிற்கமைவாக நிவாரண உரித்து வழங்க முடியாது" எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும்<br><br>இ) பாதுகாப்பு அமைச்சும் இலங்கை கடற்படையும் ஏற்கனவே கணிசமானளவு நிவாரணத்தை வழங்கியுள்ளதால், மேலதிக நிவாரணத்தை வழங்குவது சாத்தியமற்றது எனவும். | |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 40 | திரு. எம்.கே. புத்ததாச ஜயசேகர COM/PP/2025/41 சமர்ப்பித்தவர்: கௌரவ கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ 2025.07.22 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MFI/01/22/PB/Ap.&Peti. திகதி: 2019.07.29 | "மிகையாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியம்" என்ற தலைப்பிலான கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற ஊழியரான மனுதாரரின் ஓய்வூதியத்தைக் குறைக்க மக்கள் வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓய்வூதிய அளவு உறுதிப்படுத்தப்படவில்லை என்றும், ஓய்வூதியம் கணக்கிடப்பட்ட முறைமை குறித்து உடன்பட முடியாதென்றும், ஓய்வூதியத் தொகைக் குறைப்பை நிறுத்துமாறும், உரித்துகளை பெற்றுத் தருமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) மனுதாரர் மக்கள் வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றியபோது, 1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரையில் நிதி அமைச்சின் பாதுகாப்பு அலகில் பணியாற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளதுடன் அங்கு 4 மணி நேரத்திற்கும் மேலாக பணியிலிருந்து விலகியிருந்தார் என்ற குற்றச்சாட்டிற்கமைவாக மனுதாரர் மீது மேலும் நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சு மக்கள் வங்கிக்கு அறிவித்துள்ளதாகவும்<br><br>(ஆ) அதன்படி பூர்வாங்க விசாரணை மற்றும் முறையான விசாரணை நடத்தப்பட்டதாகவும், துப்பாக்கியைப் பாதுகாப்பற்ற வகையில் வைத்துவிட்டு, ஊறுபொக்க கிளையை விட்டு வெளியேறியமை, துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் பங்கேற்காமை, அவர் வைத்திருந்த | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | துப்பாக்கியை கவனக்குறைவாகப் பயன்படுத்துதல்/இயக்குதல் போன்ற முன்னைய குற்றங்களையும் கருத்திற் கொண்டு 2001.10.22 ஆம் திகதியிலிருந்து அவர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்பதும்.<br><br>(இ) மனுதாரரால் பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய மனுவிற்கு வழங்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக மக்கள் வங்கியின் தலைவருடன் கலந்துரையாடி, முழுமையான மற்றும் இறுதிக் கொடுப்பனவாக முப்பது இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்து மத்தியஸ்தம் செய்யப்பட்டதாகவும்<br><br>(ஈ) மனுதாரர் 55 வயதை பூர்த்தி செய்யும் 2010.09.25ஆம் திகதி வரையிலான அவரது மொத்த | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சம்பளம், அதாவது விருப்ப ஓய்வுத் திகதி வரை, கணக்கிடப்பட்டு, மேலே குறிப்பிடப்பட்ட முப்பது இலட்சம் ரூபா தொகை அதற்கேற்ப கணக்கிடப்பட்ட தாகவும்<br><br>(உ) மேற்கூறப்பட்ட முப்பது இலட்சம் ரூபா தொகைக்கு மேலதிகமாக, முழு ஓய்வூதியம் மற்றும் மருத்துவ வசதிகள் உட்பட, மக்கள் வங்கி ஓய்வு பெற்றவர்களுக்கு உரித்துள்ள அனைத்து வசதிகளும், இதுவரை கிடைக்கச் செய்யப்பட்டுள்ளதா கவும்<br><br>(ஊ) ஓய்வூதியத் தகவல்களைக் கட்டமைப்பதில் ஏற்பட்ட தாமதத்தால் அதிகமாக செலுத்தப்பட்ட ரூ.802,066.76 தொகையை மனுதாரரிடமிருந்து மாதாந்தம் ரூ.10,000 வீதம் 2017 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் அறவிட | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் தாமதப்பிழை காரணமாக ஏதேனும் மேலதிக தொகை கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பின், கணக்கில் பற்று வைத்து அந்தத் தொகையை மீட்டெடுக்க மனுதாரர் வருடாந்த உறுதிமொழி/ அதிகாரமளிக்கும் ஆவணம் ஊடாக வங்கிக்கு அதிகாரம் அளித்துள்ளதாகவும் | |
| 41 | திரு. எஸ்.எஸ். மஹிந்த அபேசேகர COM/PP/2025/46 சமர்ப்பித்தவர்: கௌரவ கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ. 2025.07.22 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: MIP/1/6/3 திகதி: 2023.06.09 | 2017.11.01ஆம் திகதி சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் (வலய முகாமையாளர்) பதவிக்கு இலங்கை முதலீட்டுச் சபையில் இணைந்து மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் பிராந்திய பிரதானியான பணியாற்றிக் கொண்டிருப்பதாகவும், பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமானவரைத் தேர்ந்தெடுப்பதற்காக 2021.03.30 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு உள்ளக விண்ணப்பதாரராகத் தான் தோற்றியதாகவும், அதில் மிகப்பெரிய அநீதி நடந்ததாகக் | (அ) இலங்கை முதலீட்டுச் சபையின் பியகம ஏற்றுமதி செயலாக்க வலயத்தின் பணிப்பாளர் பதவிக்கு 2021.03.08ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும் மனுதாரர் உட்பட 05 உள்ளக விண்ணப்பதாரர்கள் அதற்காக விண்ணப்பித்ததாகவும்.<br><br>(ஆ) நிதி அமைச்சின் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட்டுள்ள மனுதாரர், இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தி நியாயமான மற்றும் சரியான இறுதி முடிவைக் கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைக்கு அமைய சிரேட்ட பிரதிப் பணிப்பாளர் பதவியை வகித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட துறையில் சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 03 ஆண்டுகள் சேவையை நிறைவு செய்துள்ள உள்ளக விண்ணப்பதாரர்கள் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாக இருந்தமை என்பதும்<br><br>(இ) பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக கல்வித் தகைமைகள் கருத்திற் கொள்ளப்படுவதில்லை எனவும், இருப்பினும், கல்வித் தகைமைகளுக்காக நேர்முகத் தேர்வின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படுவதாகவும்<br><br>(ஈ) அதன்படி, | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தகைமையுடைய 05 உள்ளக விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டதுடன் அவர்களில் 04 விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையில் பங்கேற்றதாகவும்<br><br>( உ) மேற்கூறிய நேர்முகப் பரீட்சையில் மனுதாரர் பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை | | |
| | | | கல்வித் தகைமைகள் | 12 | |
| | | | சேவை அனுபவம் | 0 | |
| | | | நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்திய திறமைகள் | 14 | |
| | | | மொத்தப் புள்ளிகள் | 26 | |
| | | | பெற்றார் எனவும்:<br><br>(ஊ) தொடர்புடைய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர் பின்வருமாறு புள்ளிகளைப் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றிருந்தார்<br><br>கல்வித் தகைமைகள் — 03<br>சேவை அனுபவம் — 10<br>நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்திய திறமைகள் — 28<br>மொத்தப் புள்ளிகள் — 41<br><br>எனவும்:<br><br>உ) அதன்படி குறிப்பிட்ட பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மொத்தப் புள்ளிகளாக 41 புள்ளிகளைப் பெற்று நேர்முகப் பரீட்சையில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளதாக மற்றும் மனுதாரர் மொத்தமாக 26 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தில் உள்ளதாகவும்<br><br>(எ) நேர்முகப் பரீட்சைச் சபையில் முதலீட்டுச் சபையின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பணிப்பாளர் நாயகம், ஆலோசகர், நிறைவேற்றுப் பணிப்பாளர் (பிராந்தியம்) நிறைவேற்றுப் பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) மற்றும் சனாதிபதியின் சிரேட்ட செயலாளரொருவரும் இருந்ததாகவும்<br><br>(ஏ) பியகம ஏற்றுமதி செயலாக்க வலயமானது சுமார் 30,000 ஊழியர்களைக் கொண்டுள்ள நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் எனவும், மனுதாரர் தற்போது பணிபுரியும் 1400 ஊழியர்களைக் கொண்ட மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயலாக்க சபையுடன் ஒப்பிடுகையில், அத்தகைய பாரிய வலயத்தை நிர்வகிக்கத் தேவையான தலைமைத்துவப் பண்புகள் போன்ற | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | விடயங்களை மேற்படி நேர்முகப் பரீட்சைச் சபை கருத்திற் கொண்டதாகவும் | |
| 42 | திரு. ஏ.பி. ராஜசூரிய<br>COM/PP/2025/73<br>சமர்ப்பித்தவர்: கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன, பா.உ.<br>2025.08.21ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: MF1/11/03/02/BOC/ COPP<br>திகதி: 2025.03.28 | 2010.05.03ஆம் திகதி பதவிநிலை பயிற்சி உதவியாளராக இலங்கை வங்கியில் இணைந்து கொண்டதாகவும், 2018 தனிப்பட்ட தேவைக்காக வைப்புப் பணத்தைக் காண்பிக்கும் பொருட்டு வங்கியின் உயர் அதிகாரியின் வழிகாட்டுதலின் கீழ் மனுதாரரின் பெயரில் நிலையான வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து அதற்கெதிராக பற்று வசதிகளைப் பெற்றுக் கொண்டதாகவும்அது வங்கி அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் அதன் மூலம் வங்கிக்கு எந்த இழப்போ பாதிப்போ ஏற்படவில்லை எனவும், இதன் காரணமாக 2019.08.09 அன்று பணி இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் 2022.09.13ஆம் திகதி பணியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், மீண்டும் சேவையில் இணைத்து நிலுவைச் சம்பளம் மற்றும் இழக்கப்பட்ட | (அ) மனுதாரரால் காணியொன்றை விற்பனை செய்து பணம் கிடைக்கவுள்ளது எனத் தெரிவித்து வங்கி அதிகாரி ஒருவர் ஊடாக ரூ. 8,115,000/- என்ற தொகைக்கு நிலையான வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து அதற்குத் தேவையான பணத்திற்காக தமது நடைமுறை கணக்குடன் தொடர்புடைய காசோலையொன்றில் ரூ. 8,115,000 பெறுமதி குறிப்பிட்டு கடன் பத்திரமும் (credit slip) உடன் குறிப்பிட்ட கருமபீடத்தில் சமர்ப்பித்து, அதற்காக கடன் வவுச்சர் ஒன்றையும்(credit voucher) பெற்றுக் கொண்டுள்ளதாகவும்<br>(ஆ) அதற்கமைய நிலையான வைப்பினை பிணையாக வைத்து பெறக்கூடிய கடன் தொகையை (Cash back facility) வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரப்பிரசாதங்களையும் மீண்டும் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனு முன்வைக்கப்பட்டுள்ளது. | மற்றும் இந்த நடவடிக்கைகளுக்காக ஏனைய அலுவலர்களின் இரகசிய கடவுச் சொற்களை பயன்படுத்தியுள்ளதாகவும்<br>(இ) இது தம்மால் திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு நடவடிக்கை என்பதால் ஏனைய அதிகாரிகள் இதற்குப் பொறுப்புக்கூறத் தேவையில்லை என்பதாக மனுதாரரால் ஒழுக்காற்று விசாரணையின் போது சாட்சியமளித்துள்ளதாகவும்<br>(ஈ) மோசடியான முறையில் நிலையான வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்தமை, மோசடியான முறையில் தற்காலிக பற்று வரையறை (TOD limit) அடையாளமிட்டமை, வங்கியின் சொத்துக்களை துஸ்பிரயோகம் செய்தமை மற்றும் நேர்மையீனம் (dishonesty) போன்ற விடயங்களின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடிப்படையில் மேற்கொண்டு மனுதாரர் வங்கிப் பணியில் வைத்திருப்பது வங்கி நெறிமுறைகளுக்கு உகந்ததல்ல என்பதாகவும். | |
| **பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு** | | | | |
| 43 | திரு. பி.யு.பி. குமார டி சில்வா COM/PP/2025/338<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா, பா.உ.,<br>2025.07.22 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: ES/DIR/J/9(II)<br>திகதி: 2023.01.11 | 2000.10.13 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொறியியல் சேவை (மின்) II/II வகுப்புக்குரிய நிரந்தர நியமனம் வழங்கி நிலுவைச் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் பதவியுடன் தொடர்புடைய ஏனைய சிறப்புரிமைகள் என்பவற்றைக் கோரி இம்மனு சமர்ப்பிக்கப்பட்டுள் ளது. | (அ) மனுதாரர் மின்சாரப் பொறியாளர் பதவியில் பதில் கடமையாற்றியுள்ளதாகவு ம், அதற்காக பதில் கடமையாற்றுவதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படும் கூற்று மற்றும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிக் கோவையின் தொகுதி I, அத்தியாயம் IX இன் 141 ஆம் பந்திக்கமைய, அரச உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனும் ஒரு பதவியில் கடமைகளை ஆற்றுவதற்காக நியமிக்கப்படுகின்றமை அப் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு அது ஒரு தகைமையாக அமையாது என்பதால், மனுதாரர் இலங்கை பொறியியலாளர் சேவையின் II/II தரப் பதவியில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தமை, | நிவாரணம் பரிந்துரைக்கப்படவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவருக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்குரிய ஒரு தகைமையாக அமையாதென்பது.<br><br>(ஆ) 2017.07.07 திகதியிடப்பட்ட 2027 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் மூலம், இலங்கை பொறியியலாளர் சேவைக்கு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன், மனுதாரர் அதற்காக மின்சார பிரிவு 03 இன் கீழ் விண்ணப்பித்திருந்த போதிலும், அதற்கான தகைமைகளை அவர் பூர்த்தி செய்திருக்கவில்லை என்பது.<br>(இ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை (முன்னைய ம.ம.கா. சேவை) பதவி உயர்த்துவதன் மூலம், இலங்கை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொறியியலாளர் சேவையின் தரம் II/II இற்கு நியமிப்பதற்குரிய, 1997.08.05 திகதியிடப்பட்ட 31 ஆம் இலக்க பொறியியலாளர் சேவைச் சுற்றறிக்கையின்படி இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகைமைகளை மனுதாரர் பூர்த்தி செய்திருக்கவில்லை என்பது.<br><br>(ஈ) 1836/6 ஆம் இலக்க மற்றும் 2013.11.11 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியின் மூலம் பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு பிரசுரிக்கப்படுவதற்கு முன்னர், புகையிரதத் திணைக்களத்தின் தொழில்நுட்பச் சேவையில் (மின்சாரம்) பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே சேவைத் தேவையினைக் கருத்திற்கொண்டு பொறியியலாளர் சேவையில் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருந்ததென்பது. | |
| **பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 44 | திரு. கே.பி. ரஞ்சித்<br>COM/PP/2025/40<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ நிஹால் | 1986.11.22 ஆம் திகதியன்று பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆக இலங்கை பொலிஸ் | (அ)<br>2007.07.15 தொடக்கம் 2007.09.25 வரையான காலப்பகுதியில் பணிக்குச் சமூகமளிக்காமைக்கான காரணங்களாக மனுதாரர் | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கலப்பத்தி, பா.உ., 2025.08.05 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: 02/03/23/59/2021 திகதி: 2022.03.23 | திணைக்களத்தில் இணைந்து, பண்டாரகுளம் பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையாற்றி வந்த நிலையில், 2007.07.08 முதல் 06 நாட்கள் விடுமுறை பெற்றுக்கொண்டதாகவும், அதன் போது திடீரென நோய்வாய்ப்பட்டதால் 2007.07.14 முதல் 2007.09.25 வரை சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும், 2007.07.15 அன்று வெல்லவாய பொலிஸ் நிலையத்தினூடாகவும் தபால் மூலமாகவும் தனது பணியிடத்திற்கு மருத்துவ அறிக்கைகளை அனுப்பி அது குறித்து தெரியப்படுத்தியதாகவும், எனினும் 2007.09.25 அன்று ஊறுபொக்க பொலிஸ் நிலையத்தினால் எந்தவொரு குற்றமும் இன்றி தான் கைது செய்யப்பட்டு 2008.02.25 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவு | பொது மனுக்கள் பற்றிய குழுவிற்குச் சமர்ப்பித்த மனுவில் குறிப்பிட்டுள்ள விடயங்களை, அதே காலப்பகுதியில் அவரால் பணிக்குச் சமூகமளிக்க முடியாமைக்கான காரணங்களாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்த மேன்முறையீட்டில் உள்ள விடயங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவற்றுக்கிடையு முரண்பாடான நிலைமையை காண முடிகின்றதென்பது.<br><br>(ஆ) 2007.09.29 ஆம் திகதி மனுதாரருக்கு பதவி விலகிச் சென்றதாகக் கருதும் கட்டளை விடுக்கப்பட்டுள்ளதென்பது.<br>(இ) பெலியத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் மனுதாரர் தொடர்பாக வழங்கப்பட்ட பின்னணி அறிக்கையின்படி, 2007.09.25 ஆம் திகதியன்று 'கல்கட்டஸ்' வகை துப்பாக்கியுடன் அவர் கைது செய்யப்பட்டு, மொறவக்க நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டார் என்பதும், மீண்டும் கொள்ளைச் சம்பவம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ம், 2009.09.29 திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம், 2007.07.24 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தான் சேவையை விட்டு விலகியதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மாத்தறை மேல் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக நிலுவையில் இருந்த வழக்கு இலக்கம் 133/2014 இலிருந்து தான் நிரபராதியாக விடுவிக்கப்பட்டதாகவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் பொலிஸ் மா அதிபருக்கும் இது தொடர்பில் மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தனக்கு மீண்டும் தொழிலை வழங்குமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | ஒன்று தொடர்பாக மொறவக்க நீதவான் நீதிமன்றத்திலும் மாத்தறை மேல் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்பட்டு, முறைப்பாட்டின் சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால் அவர் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்பதுடன் வேறு ஒரு பதவி விலகிச் சென்றதாகக் கருதும் கட்டளை மற்றும் ஒரு வேலை இடைநீக்கக் காலம் என்பனவும் மனுதாரரின் சேவைப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பது. | |
| 45 | திருமதி. எஸ்.எல். ஹெட்டிஆரச்சி<br>COM/PP/2025/55<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ., 2025.08.05 ஆம் திகதி விசாரணை | 1986.09.08 ஆம் திகதியன்று ஆங்கில தட்டச்சாளராக இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் இணைந்து 1998.11.19 வரை பணியாற்றியதாகவும், 1996 ஆம் ஆண்டில் பெண் பொலிஸ் சார்ஜன்ட் | (அ) பொலிஸ் உப சேவையில் இணைந்த மனுதாரர், நிரந்தர சேவையில் உள்ளீர்க்கப்படவில்லை எனவும், அவரது சேவைக்காலத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியினை அவர் | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: 01/02/03/09/2024<br>திகதி: 2024.07.11 | பதவிக்கு உயர்வு பெற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பொலிஸ் அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் கடமையாற்றியதாக வும், 1997 ஆம் ஆண்டில் அவ்வப்போது ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக, 1998.11.19 அன்று சேவையிலிருந்து விலகுவதற்கு அனுமதி பெற்றுக்கொண்டதா கவும், 2010/13 திருத்தப்பட்ட ஓய்வூதியச் சட்டத்தின்படி 10 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களு க்குப் பெற்றுக்கொள்ளக்கூ டிய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற் காக 2023.06.13 அன்று பொலிஸ் மா அதிபருக்கு மேன்முறையீடு செய்ததாகவும் அதற்குப் பதிலாக, தாபன விதிக் கோவையின் IV ஆம் அத்தியாயத்தின் 4:3 பிரிவின்படி மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு ஏற்பாடுகள் இல்லை எனத் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ள | பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், 2010/13 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் கீழேனும் அவருக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு எவ்வித ஏற்பாடுகளும் இல்லை என்பது.<br><br>(ஆ)<br>மனுதாரரின் அறியாமை மற்றும் நிறுவனத்தின் வழிகாட்டல் கிடைக்காமை காரணமாக அவர் தன்னிச்சையாக இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளமை புலப்படுவதுடன், அதன் காரணமாக அவர் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பை இழந்துள்ளாரென்பது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாகக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தமக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | | |
| **வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 46 | திருமதி எம்.டி.சந்திரலதா தயாவதி<br>COM/PP/2025/199<br>சமர்ப்பித்தவர்: கௌரவ ஜகத் மனுவர்ண, பா.உ., 2025.08.07 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: MIC/PAF/01/13<br>திகதி: 2019.07.30 | கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தில் 23 வருடங்கள் பணியாற்றியுள்ளதாகவும், தன்னார்வ ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்தை தவறவிட்டதன் காரணமாகத் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் பிஈடி 10 இலக்க மற்றும் 2003.05.28 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கை மற்றும் எண் பிஈடி 10(1) மற்றும் 2003.07.21 திகதியிட்ட சுற்றறிக்கைகளின்படி, 55 வயதில் ஓய்வுபெறும் போது தமக்குக் கடும் அநீதி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள மனுதாரர், அதற்கமைய தமக்குரிய நிலுவைத் தொகையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி | அ) மனுதாரருக்கு இழப்பீடு வழங்கும் போது, சுயவிருப்ப இழப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 'சதொச' ஊழியர்களை ஓய்வுபெறச் செய்வதற்காக திறைசேரிச் செயலாளரினால் வெளியிடப்பட்ட, 2003.05.28 திகதியிடப்பட்ட அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் திணைக்களத்தின் பிஈடி 10 மற்றும் 2003.05.28 திகதிய பிஈடி 10(1) மற்றும் 2003.07.21 திகதியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் சுய விருப்பத்தின் பேரிலான ஓய்வுபெறல் திட்டம் தொடர்பாக சதொச நிறுவனத்தின் தலைவரினால் வெளியிடப்பட்ட 2004.02.12 திகதியிடப்பட்ட AB/2004/02 இலக்க உள்வாரிச் | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இம்மனுவைத் தாக்கல் சமர்ப்பித்துள்ளார். | சுற்றறிக்கையின்படி, மனுதாரருக்கு எஞ்சியிருந்த சேவைக் காலம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஆ) 2017.11.07 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, மீளாய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைய, எஞ்சியிருக்கும் சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு ரூபா 87,780/- தொகையானது மனுதாரருக்கு இழப்பீடாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(இ) திறைசேரிச் செயலாளரின் 2003.05.28 திகதியிடப்பட்ட பிஈடி 10 இலக்கச் சுற்றறிக்கையின்படி செயற்பட்டு, மனுதாரரின் சுமார் 23 வருடங்களான கடந்த கால சேவைக் காலத்திற்காக அவருக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையைக் கணக்கிட்டு, ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையை அதிலிருந்து கழித்து, எஞ்சிய தொகையை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவருக்கு செலுத்துவதற்கு 2022.03.10 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள தென்பது.<br><br>(ஈ)<br><br>இருப்பினும், மனுதாரரின் எஞ்சியிருந்த சேவைக் காலத்தைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே இழப்பீட்டுத் தொகையொன்று வழங்கப்பட்டுள்ளதால், 2022.03.10 ஆம் திகதியிடப்பட்ட குழுவின் பரிந்துரைக்கமைய அவரது கடந்த கால சேவைக் காலத்திற்காக மீண்டும் ஒருமுறை இழப்பீடு வழங்குவதற்கு சாத்தியமில்லை என்பது. | |
| 47 | திரு. பி. சஞ்சீவ பிரசாத் பெர்னாண்டோ<br>COM/PP/2025/87<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ சதுர கலப்பத்தி, பா.உ., 2025.08.07 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: MWCA&SE/ADM/05 /02-2023 | 2001 மார்ச் 01 ஆம் திகதி முதல் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றி வந்த நிலையில், 2011.06.01 அன்று தனிப்பட்ட காரணமொன்றினால் முறையாக அறிவித்துவிட்டு அன்றைய ஒரு நாள் மட்டும் பணிக்குச் சமூகமளிக்கவில்லை என்பதன் அடிப்படையில், சேவையை விட்டு விலகியவராகக் கருதி நடவடிக்கை | (அ)<br><br>2025.03.19 அன்று நடைபெற்ற பொது மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரைக்கமைய, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டிருந்ததுடன், அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி மனுதாரர் தனது | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி: 2023.07.18 | எடுக்கப்பட்டுள்ளதாகவும், தான் குறித்த விடுமுறை தினத்திற்கு முன்னைய நாளும் அதற்கு அடுத்த நாளும் பணிக்குச் சமூகமளித்திருந்ததாகவும், இது தொடர்பாக அதிகாரிகளுக்கும் தொழில் நியாய சபைக்கும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பலனளிக்கவில்லை என்றும்,2017.03.03 ஆம் திகதியன்று தொழில் நியாயச் சபை நீதிபதியினால் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் கீழ் சமூர்த்தி அதிகார சபைக்கு எதிராக நிலுவையில் இருந்த அனைத்து வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், பின்னர், அரச சேவையில் நிர்வாக ரீதியாகப் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு நிவாரணம் வழங்கும் குழுவிடம் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடு, மீண்டும் சமூர்த்தி திணைக்களத்திற்கே அனுப்பி வைக்கப்பட்டதாகவும், சமூர்த்தி அதிகார சபையாக இருந்த காலத்தில் | சேவைக்காலத்தில் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டமை, அறிவிக்காமல் பணிக்குச் சமூகமளிக்காதிருந்தமை மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில் பொறுப்புக்கூறத் தவறியமை தொடர்பாக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் ஆவணங்கள் குழுவினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்படட்டதென்பது.<br><br>(ஆ) அதற்கமைய, மனுதாரரின் முன்னைய சேவைக் காலப்பகுதியில் அவரது திருப்தியற்ற சேவை நிலைமை, சம்பளமற்ற விடுமுறை பெற்றுக்கொண்டமை, அனுமதியின்றி பணியிலிருந்து வெளியேறியமை மற்றும் அறிவிக்காமல் பணிக்குச் சமூகமளிக்காதிருந்தமை தொடர்பாக அவருக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதென்பது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இடம்பெற்ற ஒரு விடயத்தை அது திணைக்களமாக மாற்றப்பட்ட பின்னர் பரிசீலிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, சேவையை விட்டு விலகியதாகக் கருதப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், அனைத்து சலுகைகள், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுடன் தன்னை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | | |
| **புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 48 | திரு. பி.எஸ். விஜேகோன் குலதுங்க<br>COM/PP/2025/121<br>சமர்ப்பித்தவர்: கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய, பா.உ., 2025.08.19 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பிலக்கம்: | தொல்பொருள் திணைக்களத்தில் கொத்தனாராகப் பணியாற்றி வந்த நிலையில், சாதாரண தரச் சான்றிதழ் தொடர்பாக எழுந்த பிரச்சினை காரணமாக, 2021.08.03 அன்று மனுதாரர் உட்பட ஒரு குழுவினரின் சேவை இடைநிறுத்தப்பட்டதாகவும், பின்னர், சாதாரண தரத் தகுதியைக் கருத்திற் | (அ) மனுதாரரினால் அவரது பிரத்தியேக கோப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பாடசாலை மூலம் பெறப்பட்ட க.பொ.த (சா/தர) பரீட்சை சான்றிதழ், இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுபேற்று சான்றிதழுடன் பொருந்தாததன் காரணமாக, அவரைப் பணியில் நிரந்தரமாக்க | நிவாரணம் பரிந்துரைக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | NH/AD/ARC/76<br>திகதி: 2023.08.08 | கொள்ளாது, தேசிய பயிலுநர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு, மேற்கூறிய குழுவில் ஒரு பகுதியினர் மட்டும் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டதாகவும் தானும் அந்தத் தகுதியைப் பூர்த்தி செய்திருந்த போதிலும், 45 வயதைப் பூர்த்தி செய்துள்ள காரணத்தினால் தனது மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதாகவும் தான் 09 வருடங்கள் மற்றும் 06 மாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மனுதாரர், தன்னை மீண்டும் பணியில் அமர்த்துமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | முடியாமல் போயுள்ளதென்பது.<br><br>(ஆ) இலங்கை பரீட்சைத் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட க.பொ.த (சா/தர) பரீட்சை சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவர் இதுவரை அதற்கமைய செயற்படவில்லை என்பது.<br><br>(இ)<br><br>மனுதாரர் கல்வி கற்ற கே/கலிகமுவ மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரினால் மனுதாரரின் சரியான க.பொ.த (சா/தர) பரீட்சை சான்றிதழ் தொல்பொருள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய மனுதாரர் அடிப்படைக் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதும், இரண்டு சந்தர்ப்பங்களில் போலியான சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளார் என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஈ) தொல்பொருள் பணிப்பாளர் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நாயகத்தினால் நியமனக் கடிதத்தின் 20 ஆம் பந்திக்கு அமைவாகவும் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளின் அத்தியாயம் VI இன் 59 ஆம் பிரிவுக்கு அமைவாகவும் மனுதாரரின் நியமனம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தென்பது.<br><br>(உ)<br><br>மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட NVQ - மட்டம் 03 (Level 03) சான்றிதழைப் பெறும் போது அவரது வயது 52 வருடங்களும் 03 மாதங்களுமாகவும் காணப்பட்டதோடு, அக்காலப்பகுதியில் அவர் அரச சேவையில் இணைந்துகொள்வதற்கான வயது எல்லையைத் தாண்டியிருந்தமையால், அவருக்குப் புதிய நியமனம் எதனையும் வழங்க முடியாது போயுள்ளதென்பது.<br><br>(ஊ) அந்தப் பரீட்சைச் சான்றிதழ்கள் வெளிநபர் ஒருவரால் வழங்கப்பட்டவை எனவும், அவை போலியானவை என்பதைத் தான் அறிந்திருக்கவில்லை எனவும், மீண்டும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சான்றிதழ்களைச் சமர்ப்பிக்குமாறு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்ட போதிலும், தன்னிடம் சமர்ப்பிப்பதற்கு அந்தச் சான்றிதழ்கள் மாத்திரமே இருந்தமையால் மீண்டும் அவற்றை வழங்க முடியாமல் போனதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளாரென்பது .<br><br>(எ) மனுதாரரின் கல்விச் சான்றிதழ் குறைபாடுடையதாக இருந்தமையால் அவரது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும், பதவிக்குரிய அடிப்படை கல்வித் தகைமைகளை அவர் பூர்த்தி செய்யவில்லை எனவும், உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் போது அரச சேவையில் இணைந்துகொள்வதற்கான அதிகபட்ச வயது எல்லையை அவர் கடந்திருந்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதென் பது. | |
| 49 | திரு. டீ.எம். விஜேசிங்ஹ<br>COM/PP/2025/296<br>சமர்ப்பித்தவர்:<br>கௌரவ சந்தன | 2008 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களத்தில் தற்காலிகப் பணியாளராகப் பெற்றுக்கொண்ட நியமனம், தனது 46 | (அ)<br><br>மனுதாரர் 2009.06.24 அன்று தொல்பொருள் திணைக்களத்தின் தொழிலாளர் தரம் III | நிவாரணம் பரிந்துரைக்கப்படவி ல்லை.. |

| | | | | |
|---|---|---|---|---|
| | தென்னகோன், பா.உ., 2025.08.19 ஆம் திகதி விசாரணை செய்யப்பட்டது. அமைச்சின் தொடர்பிலக்கம்: NH/AD/ARC/76 திகதி: 2024.06.14 | ஆவது வயதில் நிரந்தரமாக்கப்பட்ட தாகவும் 2023 ஆம் ஆண்டு வரை பணியாற்றி ஓய்வுபெற்ற போதிலும், தமக்கு ஓய்வூதியம் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ள மனுதாரர், தனக்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுத்தருமாறு கோரி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். | (Laborer Grade III) பதவியில் நிரந்தர நியமனம் பெற்றுள்ளதுடன், அந்த நிரந்தர நியமனத்தைப் பெறும் போது அவரது வயது 46 வருடங்களும் 05 மாதங்களும் 08 நாட்களுமாக காணப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஆ) விதவை, அனாதை ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்வதற்குரிய விண்ணப்பம் 2021.12.07 அன்று தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், நிரந்தர நியமனத்தைப் பெறும் போது மனுதாரரின் வயது 45 வருடங்களைத் தாண்டியிருந்துள்ளதென் பது.<br><br>(இ)<br><br>மனுதாரருக்கு மேலதிகமாக திணைக்களத்தில் இவ்வாறு 45 வயதுக்கு மேல் நியமனம் பெற்ற கணிசமான எண்ணிக்கையிலான ஊழியர்கள் காணப்படுவதால், பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தைப் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக, தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தினால் அப்போதைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்குக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஈ)<br><br>அதற்கமைய, 2024 மார்ச் 11 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின்படி, இந்த மனுதாரருக்கு ஓய்வூதிய உரித்தை வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளதால், அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்பது.<br><br>(உ)<br><br>இந்த நியமனம் ஒரு அமைய நியமனம் என்பதாலும், அமய நியமனத்தைப் பெறும் போது அவர் 45 வயதைத் தாண்டியிருந்தமையாலும், அந்த நியமனம் அரச விதிமுறைகளின்படி முறையானது அல்ல எனவும், அதற்கமைய | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவர் ஓய்வூதியம் அல்லது பணிக்கொடை எதற்கும் உரித்தினைப் பெறமாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதெ ன்பது. | |
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 50 | திருமதி.ஜே.கே.எம். தர்சினி COM/PP/2025/279 சமர்ப்பித்தவர்; கௌரவ (கலாநிதி) செல்வி கௌஷல்யா ஆரியரத்ன, பா.உ. 2025.07.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்ட து. அமைச்சின் தொடர்பு இலக்கம்; ED/05/152/05/2022/ 01-20 திகதி: 2022.10.12 | 1989 ஆம் ஆண்டிலிருந்து இது வரை 36 வருடங்கள் அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றுவதாகவு ம், தற்போது அங்கு வழங்கல் பிரிவில் கடமையாற்றுவதாக வும், அங்கு இடம்பெறும் அனைத்து கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைரீதியான பயிற்சியொன்றை பெற்றிருப்பதாகவும், பட்டப்பின்படிப்பு வரையிலான கல்வித் தகைமையை பூர்த்தி செய்திருந்தாலும் அதற்குப் பொருத்தமான பதவியொன்றை வழங்கவில்லை எனவும் கனிஷ்ட முகாமைத்துவ பதவியையேனும் 35 ஆண்டுகளுக்கு பின்னரே வழங்கியதாகவும், அதனால் நிறைவேற்றுத் | (அ) மனுதாரர் சுமார் 37 வருட நீண்ட சேவைக் காலத்தை அரச அச்சகக் கூட்டடுத்தாபனத்தில் பூர்த்தி செய்துள்ளாரென்பது<br><br>(ஆ) மனுதாரர் இடைக்கிடையே தோற்றியிருந்த நேர்முகப் பரீட்சைகளில் அவரது அனுபவம், கல்வி மற்றும் ஏனைய தகைமைகளுக்கு சரியான வகையில் புள்ளிகளைப் பெற்றிருந்தாலும், அவர் நேர்முகப் பரீட்சையில் காண்பித்த திறமைகளின் அடிப்படையில் அவருக்கு குறைந்த புள்ளிகளே கிடைத்திருப்பதனால், பதவியுயர்வுகளுக்குரிய வெட்டுப்புள்ளிகளை விஞ்சமுடியாது போயிருப்பதோடு ஏற்புடைய பதவியுயர்வை அவரால் பெறமுடியாது போயுள்ளதென்பது<br><br>(இ) இந்த விடயம் தொடர்பாக அரச அச்சகக் கூட்டுத்தாபனத்திற்கு | கோரப்படும் நிவாரண உரித்து விதந்துரைக்கப்படவி ல்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தரத்திற்குரிய பதவியொன்று கிடைப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கவில்லை என்றும், தற்போது ஓய்வு பெறும் நிலையை நெருங்கியுள்ளதாகவும் தெரிவித்து நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் இழைக்கப்பட்ட இந்த அநீதிக்காக ஐந்து மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு, 2015 ஆம் ஆண்டில் இருதரப்பும் இணக்கப்பாட்டுக்கு வந்ததை அடுத்து அதன் மீதான விசாரணை முடிவுறுத்தப்பட்டதென்பது<br><br>(ஈ) நீண்ட காலமாக சேவையாற்றும் நிறுவனத்தின் நிர்வாகத்தினால், அநீதி இழைக்கப்பட்டதாக மனுதாரர் கருதுவாரானால், அதற்காக அவருக்கு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்ல முடியுமாக இருந்தாலும் அவர் அவ்வாறு செயற்படவில்லையென்பது. | |
| 51 | திருமதி.என்.எஸ்.ரத்னவீர<br>COM/PP/2025/126<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ தேவானந்த சுரவீர, பா.உ.<br>2025.06.17 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் | 1979 ஆம் ஆண்டிலிருந்து 23 வருடங்கள் ஆசிரிய சேவையில் ஈடுபட்டு, 2002 ஆம் ஆண்டிலிருந்து 5 வருடங்கள் அதிபர் சேவையிலும், 2007 ஆம் ஆண்டிலிருந்து | (அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2 ஆவது தடைத்தாண்டலிலிருந்து விடுவிப்பதற்கு குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளான பட்டப்பின் படிப்பு தகைமைக்கு | (அ) மனுதாரரின் முதலாவது கோரிக்கையான இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் 2 ஆவது தடைத்தாண்டலிலிருந்து விடுவிப்பதற்கு விதந்துரைக்கப்படவி |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடர்பு இலக்கம்; ED/4/58/1/8/173/ 66 திகதி: 2024.12.05 | 10 வருடங்கள் கல்வி நிர்வாக சேவையில் ஈடுட்டிருந்து, பிலி/கல்கிஸ்சை பௌத்த பெண்கள் பாடசாலையில் அதிபர் பதவி வகித்த நிலையில் 2017.06.15 ஆந் திகதி ஓய்வு பெற்றதாகவும், கல்வி நிர்வாக சேவையில் III ஆம் வகுப்பின் 2 ஆவது தடைத்தாண்டலுக்கு விலக்களிப்பதற்காக இருக்க வேண்டிய தகைமையொன்றான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவிற்கு நிகரான பயிற்சி பட்டப்படிப்பு தகைமை ஒன்றை கொண்டிருப்பதோடு, அதிலிருந்து விலக்களிக்கவில்லை என்றும், அதிபர் சேவையிலிருந்து ஆசிரியர் சேவைக்கு விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டதாகவும், கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் 2 ஆவது தடைத்தாண்டலில் இருந்து விடுவித்து | உள்ளடக்கப்படும் கல்வி டிப்ளோமாவிற்கு ஆசிரியர் பயிற்சியினை சமப்படுத்த முடியாதென்பது<br><br>(ஆ) ஆசிரியர் பயிற்சியுடன் பட்டப்படிப்புத் தகைமை காணப்படுகின்றமையை கவனத்திற் கொண்டு 2 ஆவது தடைத்தாண்டலிலிருந்து விடுவிக்குமாறு கோரி இரண்டாவது தடவையாகவும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்குகோரிக்கை விடுக்கப்பட்டதென்பது<br><br>(இ) இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக வேறு பொருட்கோடலை வழங்கி, மனுதாரரை 2 ஆவது தடைத்தாண்டலிலிருந்து விடுவிக்குமாறு பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு விதப்புரைகளை வழங்க முடியாதென்பது | ல்லை.<br>(ஆ) மனுதாரரின் இரண்டாவது கோரிக்கையான 2002.01.01 ஆந் திகதியிலிருந்து அதிபர் சேவையின் III ஆம் வகுப்பு நியமனத்தில் இருந்து ஆசிரியர் சேவைக்கு விடுவிக்குமாறு மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கையை விசாரிப்பதற்காக பிறிதொரு திகதியில் அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2017.03.12 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டிய பதவியுயர்வினை வழங்குமாறும், 2002.01.01 ஆந் திகதியிலிருந்து அதிபர் சேவையின் III ஆம் வகுப்பிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனத்திலிருந்து ஆசிரியர் சேவைக்கு விடுவிக்குமாறும் கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| **விதப்புரைகள் வழங்கப்படாது ஒத்திவைக்கப்பட்ட மனுக்கள்** | | | | |
| **கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு** | | | | |
| 52 | திரு.டப்.டீ.செனவிரத்ன<br>COM/PP/2025/197<br>சமர்ப்பித்தவர்; கௌரவ ஆர்.எம்.காமினி ரத்னாயக்க, பா.உ.<br>2025.06.03 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>HE/AD/03/ම.පෙ.කා.ස.(2019/01)<br>திகதி: 2019.02.28 | இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கற்கைகள் பிரிவில் 8 வருடங்களும் களனிப் பல்கலைக்கழகத்தில் 4 வருடங்களுமாக சுமார் 12 வருடங்கள் வெகுசன தொடர்பாடல் துறை விரிவுரையாளராக பணியாற்றிய மனுதாரரின் சேவையை இடைநிறுத்தியமை தொடர்பாக நிர்வாக நடவடிக்கைகள் | (அ) தகுதிகாண் விரிவுரையாளர்ஒருவரை அந்த பதவியில் நிரந்தரமாக்குவதற்கு அதிகபட்சம் 8 வருடங்களில் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்ய வேண்டும் என 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும், அது ஒரு திகதியிலேனும் தாமதமாகும் பட்சத்தில் சேவையை நிரந்தரமாக்க முடியாதென்பது,<br><br>(ஆ)சேவை | திறந்த பல்கலைக்கழக பேரவையிடமிருந்து மேற்படி விடயங்கள் தொடர்பாக அறிக்கையொன்றை கோர வேண்டும் என குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. அந்த அறிக்கையை ஆராய்ந்து விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) வழங்கிய விதப்புரைகளை திறந்த பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்த வில்லை எனவும், அதன் பிரகாரம் ஒம்புட்ஸ்மனினால் அடுத்ததாக அதிகாரம் கொண்ட அதிகார பீடமான அரச த் தலைவரான சனாதிபதி அவர்களுக்கு தகுந்த நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தாலும் அதற்கு பதில் கிடைக்கவில்லை என்றும் எந்தவொரு குற்றச்சாட்டுக்களுக்கும் இலக்காகாது உண்மையாக பணியாற்றிய தனக்கு பதவியுயர்விற்கு ஏதுவான எளிமையான தொழிநுட்ப விடயமொன்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அநீதி தொடர்பாக ஆய்வு செய்து, 2010.07.01 ஆம் திகதியிலிருந்து சேவையை உறுதி | முடிவுறுத்தப்பட்டு 3 மாதங்களுக்குள் பல்கலைக்கழகச் சேவைகள் மேன்முறையீட்டுச் சபைக்கும், 6 மாதங்களுக்குள் தொழில் நியாயமன்றிற்கும் மேன்முறையீடு செய்யும் வாய்ப்பு இருந்தாலும் மனுதாரர் சேவை முடிவுறுத்தப்பட்டு 2 வருடங்களுக்கு பின்னர் மேன்முறையீடு 2012.08.12 ஆந் திகதி குறைகேள் அதிகாரிக்கே (ஒம்புட்ஸ்மன்) முறைப்பாடு செய்துள்ளாரென்பது<br><br>(இ)ஒம்புட்ஸ்மன் வழங்கிய விதப்புரையின் பிரகாரம் மனுதாரரின் சேவை முடிவுறுத்தப்பட்டது சட்டரீதியானது என ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, தற்காலிக நியமனமொன்றை வழங்குவதற்கு விதந்துரைக்கப்பட்டிருந்ததாகவும் இருப்பினும் அப்போது அந்த பதவியில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தாலும் குறித்த ஆளணி எண்ணிக்கை (cadre) நிரப்பப்பட்டிருந்தமையினாலும் திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவை மேற்படி விதப்புரையை நடைமுறைப்படுத்த முடியாதென 2013.02.05ஆந் திகதிய கடிதத்தின் மூலம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்து நிலுவை சம்பளம் மற்றும் பதவியுயர்வுடன் பணியில் அமர்த்துமாறும், ஓய்வூதியத்தையேனும் வழங்குமாறும் அல்லது வேறு பல்கலைக்கழகத்திற்கு புதிய நியமனமாக சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியை வழங்குமாறு அல்லது அவ்வாறு இல்லை எனில், தனது அனுபவத்தை கருத்திற் கொண்டு உயர் கல்வி துறையில் தொழிலொன்றை பெற்றுத் தருமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறைகேள் அதிகாரிக்கு அறிவித்துள்ளதென்பது<br><br>(ஈ) நியமன திகதியிலிருந்து 8 வருடங்களுக்குள் பட்டப்பின்படிப்புத் தகைமையை பூர்த்தி செய்ய வேண்டியதை ஏற்றுக்கொண்டாலும் ஏனைய கல்விசார் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் தனக்கு வழங்கப்படவில்லை என்பது மனுதாரரின் கருத்தாக உள்ளதென்பது<br><br>(உ) பயிலுனர் விரிவுரையாளர் ஒருவர் நியமன திகதியிலிருந்து 8 வருடங்களுக்குள் தனது பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் எக்காரணங்கொண்டும் அவர் சேவையில் நிரந்தரமாக்கப்பட மாட்டாரெனவும், அவ்வாறு சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளதான கூற்று முற்றாக நிராகரிக்கப்படுகின்றதென்பது<br><br>(ஊ) மனுதாரரின் சேவை முடிவுறுத்தப்பட்டமையினால் ஏற்பட்ட பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான பத்திரிகை அறிவித்தலின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பிரகாரம் 2011 ஆம் ஆண்டு திறந்த பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் அதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு கிடைக்கவில்லை என்ற மனுதாரரின் கூற்றையும் அதற்கமைவான விரிவுரையாளர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்ததா மற்றும் மனுதாரர் அதற்காக விண்ணப்பித்திருந்தாரா என்பது பற்றியும் சுற்றுநிரூபத்தை கருத்திற் கொள்ளாது பல்கலைக்கழக நிர்வாகம் விரிவுரையாளர்களை இரு விதங்களில் நடத்தப்படுகின்றமை தொடர்பாகவும் அவதானிக்கப்படுவதாக மனுதாரரினால் முன்வைக்கப்படும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டுமென்பது. | |
| 53 | திரு.பீ.ஏ.கருணாசேன<br>COM/PP/2025/44<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ.<br>2025.06.17 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>ED/4/58/1/8/173/67<br>திகதி:2024.12.13 | அமைச்சரவை தீர்மானமொன்றின் மூலம் 1998.01.01 ஆந் திகதிய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்பட்டு,<br>அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்து அங்கு கடமைகளை மேற்கொண்டாலும் | (அ) 2001.10.12 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிவாரணம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் பெயர் பட்டியலில் தனது தகைமையான ஆசிரியர் பயிற்சி சான்றிதழிற்கு நிகரான தகைமை உடைய ஏனைய நான்கு உத்தியோகத்தர்களுக்கு இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் III ஆம் | மனுதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களின் தகைமைகளை ஆய்வு செய்வதற்காக அவர்களின் தகவல்களை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மனுதாரரின் நியமனம் 1993.01.01 ஆந் திகதிக்கு முற்கிகதியிட்டு வழங்கப்பட்டுள்ள மையினால், பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ள தாகக் குறிப்பிடும் மனுதாரர், கல்வி நிர்வாக சேவை நியமனத்தை 1998.01.01 ஆந் திகதியிட்டு தயாரித்து தருமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | வகுப்பிற்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2006.03.15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 1993.01.01 ஆந் திகதியிலிருந்து இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பிற்கு மிகை ஊழியர் அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் II ஆம் வகுப்பிற்கு பதவியுயர்வு கிடைக்கவில்லை என்ற மனுதார ரின் கூற்று | செயலாளரை பிரதிநிதித்துவம் செய்து வருகைத் தந்த உத்தியோகத்தர்களு க்கு வழங்குமாறு குழு மனுதாரருக்கு அறிவித்தது.<br><br>மேலும், மனுதாரருக்கு 2001.10.12 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள நிவாரணத்தின் பிரகாரம், 1998.01.01 ஆந் திகதியிலிருந்து உரித்தாக வேண்டிய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III வகுப்பிற்குரிய நியமனம் மனுதாரருக்கு கிடைக்காமைக்கு ஏதுவான விடயங்கள் மற்றும் அதே நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மனதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களி ன் தகைமைகளை பரிசோதித்து, |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அது தொடர்பான அறிக்கையை குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் தினத்தில் மீள விசாரணை மேற்கொள்ளப் பட்டு விதப்புரைகள் வழங்கப்படும். |
| 54 | திரு.கே.வீ. அனுரகீர்த்தி COM/PP/2025/81 சமர்ப்பித்தவர்; கௌரவ லசித் பாஷண கமகே, பா.உ. 2025.06.17 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; MSVRI/ADM/03/05-iv திகதி:2024.06.19 | 2016.12.05 ஆந் திகதியன்று ஓய்வு பெறும் வரையிலும் தொடர்ச்சியாக 2 ½ வருடங்கள் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டதாகவும், பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருந்ததனால், அந்த பதவிக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்புச் செய்யுமாறு | (அ) மனுதாரரினால் நிர்வாக நியாய சபையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை மற்றும் 2025.09.17ஆந் திகதியன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை. | நிர்வாக நியாய சபையினால் மனுதாரரின் முறைப்பாடு மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்மானமொன்றை வழங்கும் வரை இந்த மனு மீதான விசாரணையை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேன்முறையீடு செய்திருந்தாலும் சேவைப் பிரமாணக் குறிப்பினை சரியாக திருத்தம் செய்யாமை உட்பட நிறுவனத்தின் வினைத்திறனின்மை காரணமாக அநீதியான முறையில் அந்த வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டதாகவு ம் குறிப்பிட்டுள்ள மனுதாரர் இதற்காக ஏற்புடைய திருத்தப்பட்ட பிரமாணத்தினை நடைமுறைப்படுத்து வதற்காக பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட 2015.05.05 ஆந் திகதியிலிருந்து அந்த திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பினை நடைமுறைப்படுத்து வதற்கும் அந்த திகதியிலிருந்து பதில் கடமையாற்றிய விசேட தரத்திற்குரிய பதவிக்கு தரமுயர்த்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இம்மனுவை சமர்ப்பித்துள்ளார். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | திரு.டபிளியு. ஜயந்த வீரசிறி<br>COM/PP/2025/91<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ கோசல நுவன் ஜயவீர, பா.உ.<br>2025.06.17 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>HE/AD/SA/ම.පෙ.කා.ස.<br>திகதி: 2016.03.31 | 2010.02.18 ஆந் திகதியிலிருந்து III தர தொழிலாளர் பதவியொன்றைப் பெற்று களனிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்ததாகவும், தகுதிகாண் காலத்தில் சம்பளமற்ற லீவு பெற்றுக் கொண்டதாக போலியான ஆவணங்களைத் தயாரித்து சேவையிலிருந்து நீக்கியதாகவும், அதனால் பாதிக்கப்பட்டதாகவும், சேவையை நிரந்தமாக்கி நிலுவைச் சம்பளம் மற்றும் பதவியுயர்வு உட்பட அனைத்து வரப்பிரசாதங்களையும் நட்டஈட்டையும் பெற்றுத் தருமாறு கோரி மனுதாரரினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | (அ) 2024.05.14 ஆந் திகதி குழுவில் கருணை அடிப்படையில் பரிசீலித்து பல்கலைக்கழகப் பேரவைக்கு இந்த விடயத்தை மீள ஆற்றுப்படுத்தி அவருக்கு ஏதேனும் நிவாரணமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விதப்புரை வழங்கப்பட்டிருந்தாலும் மனுதாரரை மீளச் சேவையில் அமர்த்த முடியாதென குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ) தகுதிகாண் காலத்தில் மனுதாரரின் வருகையில் திருப்தியின்மை, சம்பளமற்ற லீவு பெற்றுள்ளமையினால் தகுதிகாண் காலம் ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளதோடு, எச்சரிக்கப்பட்டிருந்தும் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளமையை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகப் பேரவையினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மனுதாரரின் சேவை | மனுதாரரினால் 04 வருட தமது சேவைக்காலத்தில் ஒவ்வோர் வருடத்திற்கும் ஏற்புடையதாக பெற்றுக் கொள்ளப்பட்ட லீவு, சம்பளமற்ற லீவு பற்றிய முழுமையான அறிக்கையையும் மனுதாரர் பற்றிய அவரது மேற்பார்வை உத்தியோத்தரினால் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரதிகளையும் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு அறிவித்ததோடு, ஏற்புடைய ஆவணங்களை பரிசீலித்த பின்னர் இந்த மனு தொடர்பாக விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முடிவுறுத்தப்பட்டுள்ளதென்பது.<br><br>(இ) கடமைக்கு சமூகமளித்த தினத்தையும் சமூகமளிக்காத தினமாக குறிப்பிட்டு, மீதப்படுத்திய லீவு இருந்தும் தவறான ஆவணங்களை சமர்ப்பித்து தகுதிகாண் காலத்தை ஒரு வருடத்தினால் நீடித்ததாகவும் அதனால் அநீதி இழைக்கப்பட்டதென்பதே மனுதாரரின் கருத்தாக உள்ளதென்பது. | |
| 56 | திரு.டீ..எம்.ஜயசிங்ஹ<br>COM/PP/2025/220<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ சுஜீவ திசாநாயக்க, பா.உ.<br>2025.07.25 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>ED/4/58/1/8/173/ 61<br>திகதி: 2023.06.16<br>(COM/PP/2023/1108 எனும் இலக்கத்தின் கீழ் திருமதி எச்.பீ.எஸ். குணவர்தன அவர்கள் ஒன்பதாம் பாராளுமன்றத்தின் | இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் III ஆம் தரத்தின் (மட்டுப்படுத்தப்பட்ட 2010) போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்துள்ள போதிலும் கல்வி அமைச்சினால் மேற்படி பதவியுடன் சம்பந்தப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை சரியாக கணக்கிடப்படாமையினால் மனுதாரரை தவிர ஏனைய தரப்பினருக்கு மாத்திரம் சம்பந்தப்பட்ட பதவி கிடைத்ததாகவும் இது தொடர்பாக | (அ) சாதாரண மற்றும் விசேட தரம் (உடற் கல்வி) ஆகிய இரு துறைகளுக்குமாக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட குறைந்த பட்ச புள்ளியாக குறிப்பிடப்பட்டிருப்பது 207 மற்றும் 186 இடையேயான புள்ளி ஆவதோடு, முதலாவது மனுதாரராகிய திருமதி. எச்.பீ.எஸ். குணவர்தன பெற்றிருக்கும் மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை 183 என்பதால் அவர் நேர்முகப்பரீட்சைக்கு தகுதி பெறவில்லை என்பது | 1928/28 ஆம் இலக்க புதிய சேவை பிரமாணக் குறிப்பு பற்றிய பொருட்கோடலை பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களதும் பங்கேற்புடன் எதிர்வரும் திகதியில் இந்த மனுவை குழுவில் மீண்டும் விசாரித்த பின்னர் இறுதி விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழுவிற்கு முதலாவது தடவையாக மனுவை சமர்ப்பித்திருந்ததோடு, அவர் தற்போது சுகயீனமுற்று இருப்பதனால், இந்த மனுவின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தற்போதைய மனுதாரராக டீ.எம்.ஜயசிங்ஹ அவர்கள் முன்னிலையாகி உள்ளார்.) | உயர் நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்ததாகவும் அதன் தீர்ப்பின் பிரகாரம் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதாகவும் அவ்வாறிருக்கையில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக மனுதாரர் உள்ளிட்ட ஒரு தரப்பினரின் பெயர்கள், வழக்குத் தாக்கல் செய்த தரப்பினரின் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்படாமையினால் வேறு 24 நபர்களை மாத்திரம் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்ததாகவும், மனுதாரர் பெற்றுக்கொண்ட 183 புள்ளிகளுக்கு சமமான மற்றும் அதை விட குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஆட்களும் கல்வி நிர்வாக சேவையின் III தரத்துடன் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாகவும், 2015.08.21 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் | (ஆ) மனுதாரப் பெண்மணி/மனுதாரர்கள் குறிப்பிடுகின்ற வகையிலான தொழில்நுட்ப கோளாறு தொடர்பாக உயர்நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை என்பது<br><br>(இ) மனுதாரர் குறிப்பிடுகின்ற 2015.08.21 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1928/28 இலக்கமுடைய சேவை பிரமாண குறிப்பு கௌரவ உயர் நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் ஏற்புடைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதா என்பது பற்றி பொருட்கோடலொன்றை பெறுவதற்காக அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு இந்த விடயத்தை முன்வைப்பது மிகப் பொருத்தமானதென்பது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தான் உள்ளிட்ட சுமார் 20 நபர்களை கல்வி நிர்வாக சேவையின் III ஆந்தர பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| **நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 57 | திரு.யூ. ஆர்.காம்பீரஆரச்சி<br>COM/PP/2025/47<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ.<br>2025.06.05 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>MU/DH/GA/PP/P3/PPC-Vol III<br>திகதி: 2025.03.27 | இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தில் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான அமைய பயிற்சி பெறாத ஊழியராக பணியில் ஈடுபட்டு அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 29/2019 இன் பிரகாரம் 2019.09.01 ஆந் திகதியிலிருந்து சேவையை உறுதி செய்ததாகவும் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தினால் 2020 ஆம் ஆண்டில் மற்றவர்களின் தேவைகளாலும் பழிவாங்கல்களாலும் இழக்கச் செய்யப்பட்டதாகவும், இது தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தொடர்ந்து மீண்டும் பணியில் அமர்த்தியதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் மீண்டும் பணியில் அமர்த்துவதற்காக சரியான திகதி கொண்ட முறையான கடிதமொன்றை வழங்கி அந்த நாட்களின் எண்ணிக்கைகளுக் | (அ) 2016.03.07 ஆந் திகதி சேவைக்கு இணைந்து கொண்ட மனுதாரரின் சேவை ஒரு வருட கால தகுதிகாண் காலத்துக்குட்பட்டு 2019.09.01 ஆந் திகதி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் வெளிச் சேவைப் பத்திரமொன்றின் மூலம் 2020.07.16 ஆந் திகதி முதல் தங்கொட்டுவை சேவை நிலையத்திற்கு இடம் மாற்றப்பட்டதாகவும், இடமாற்றத்தின் பின்னர் அவர் சேவைக்கு சமுகமளிக்காத காரணத்தினால், அவரது சேவை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மீள பணியில் அமர்த்திய பின்னர் 2024 ஆம் ஆண்டு மற்றும் 2025 ஆம் ஆண்டில் இது வரைக்கும் சம்பந்தப்பட்ட காலப்பகுதியினுள் அவர் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளாரென்பதும்<br><br>(ஆ) மனுதாரர் பயிற்சி பெற்றதொழிலாளர் பதவிக்கே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளாரெனவும், அந்த பதவிக்கு அலுவலக பணிகள் தொடர்புறுமா இல்லையா என்பது பற்றி தெளிவொன்று இல்லை | மனுதாரரின் பதவியோடு தொடர்புடைய கடமைப் பட்டியலையும் பொருட்கோடல் செய்து அவர் கோரியுள்ள சேவைநிரந்தரமாக்கல் தொடர்பாகவும் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி விரிவான அறிக்கையொன்று கிடைத்த பின்னர் எதிர்வரும் திகதியில் மீள விசாரணையின் பின்னர் விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கான நிலுவைச் சம்பளத்தையும் 2019.09.01 ஆந் திகதியிலிருந்து சேவை உறுதி செய்யப்பட்டதாகக் குறிப்பிடும் கடிதத்தையும் அந்த திகதியிலிருந்து இற்றை வரையான சம்பள அதிகரிப்பையும், பதவியை விட்டுச் செல்ல மேற்கொள்ளப்படும் தூண்டுதலை நிறுத்துமாறும், 2024.07.11 ஆந் திகதி வழங்கப்பட்ட அநீதியான கடமைப் பட்டியலுக்குப் பதிலாக முன்னர் ஆற்றிய பணிகளை அங்கீகரிக்குமாறும், 2020 யூலை மாதத்திலிருந்து 2023 ஆகஸ்ட் மாதம் வரையில் செலுத்தவேண்டிய நிலுவைச் சம்பளத்தை செலுத்துமாறும் கோரி மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | என்றும் நிறுவனமானது நீதிமன்ற இணக்கத்தினை ஏற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆகவே இது தொடர்பாக மேலும் ஆராய்ந்து விளக்கமளிப்பதற்கு கால அவகாசத்தை வழங்குமாறு அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை<br><br>(இ) நிறுவனத்தினால் பின்பற்றப்பட்டிருக்கும் செயன்முறைத் தொடரினூடாக மனுதாரர் அநீதிக்கு இலக்காகியுள்ளதாகவும் நிறுவனம் செயற்பட வேண்டியது நீதிமன்றத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கிணங்கவே நிறுவனம் செயற்பட வேண்டுமென்பது. | |
| **கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு** | | | | |
| 58 | திருமதி.ஜீ. | நீர்ப்பாசனத் | (அ)நடுத்தர மட்டத்திலான | இது தொடர்பாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | பீ.டீ.பீ.வீரசேகர<br>COM/PP/2025/110<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ ருவன் மாபலகம, பா.உ.<br>2025.06.19ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>MOI/AD/05/04/ෙ.පෙ. (01-2023)<br>திகதி:2024.04.02 | திணைக்களத்தில் திட்டமிடல் அலுவலர்களாக கடமையாற்றிய மனுதாரர் உள்ளிட்ட குழுவினருக்கு 1994.07.01 ஆந் திகதியிலிருந்து 1996.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பிற்கு பதவியுயர்வு கிடைக்கும்போது ஏற்பட்ட சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்திற்கு மேன்றையீடு செய்ததாகவும், அவ்வாறு சம்பள முரண்பாட்டிற்கு இலக்காகிய அலுவலர் ஒருவர் பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு தன்னுடைய பிரச்சனையை சமர்ப்பித்ததை தொடர்ந்து குழுவின் விதப்புரைகளின் பிரகாரம் சரி செய்யப்பட்டதாகவும், எவ்வாறாயினும் 2 ஆம் நிர்வாக பிரிவினால் தாபனப் பணிப்பாளர் | இணைந்த தொழில்நுட்ப சேவைக்கு பதிலாக இலங்கை தொழில்நுட்ப சேவையை உருவாக்கும் போது அன்றைய திகதியில் சேவையில் ஈடுபட்டிருந்த அலுவலர்களின் I வகுப்பிற்கும் விசேட வகுப்பிற்கும் உள்வாங்கப்பட்ட அலுவலர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் 30/99 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளதென்பது<br><br>(ஆ) மனுவுடன் தொடர்புடைய சிக்கல் தீவிரமாக தொழில்நுட்ப விடயங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகவும், மனுதாரர் உள்ளிட்ட குழுவினருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதென்பதும்<br><br>(இ) மனுவுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக விரிவான முறையில் ஆராய்ந்து தீர்மானமொன்றுக்கு வர வேண்டுமென்பது. | முழுமையாக ஆராய்ந்து நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்றை நியமித்து, அதனூடாக நியாயமான தீர்மானத்திற்கு வந்து அந்த தீர்மானம் அடங்கிய அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு தானப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டதோடு, ஏற்புடைய அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் தினத்தில் மீள விசாரிக்கப்பட்ட பின்னர் விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாயகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பள மாற்றம் மேற்கொள்ளப்பட்டாலும் சம்பளம் வழங்கப்படவிருந்த இறுதி சந்தர்ப்பத்தில் நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால், அந்த சம்பள முரண்பாடு தொடர்ந்தும் அவ்வாறே காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள மனுதாரர் உள்ளிட்ட குழுவினர் இதன் பிரகாரம் ஒரே முரண்பாட்டிற்கு இலக்காகிய தரப்பினரின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் அந்த முரண்பாடு நீக்கப்பட்டதனால் தான் உள்ளிட்ட குழுவினருக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதன் காரணமாக ஏற்புடைய சம்பள மாற்றத்தை அமுல்படுத்தி சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரி மனு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பித்துள்ளனர். | | |
| **பாதுகாப்பு அமைச்சு** | | | | |
| 59 | திரு.டப்ளியூ.ஆர்.பீ. திசாநாயக்க COM/PP/2025/229 சமர்ப்பித்தவர்; கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, பா.உ. 2025.07.09ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; MOD/PAC/05/PPC/2023/06 திகதி: 2023.09.18 | 1999 மார்ச்சு 30 ஆந் திகதியிலிருந்து இலங்கை கடற்படையின் (தொண்டர் படை) பிரிவில் பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும், 2002 ஆம் ஆண்டில் லெப்டினன்ட் பதவிக்கு பதவியுயர்வு பெற்றதாகவும் 2006 யூலை 14 ஆந் திகதி விடுமுறை பெற்று வீட்டுக்கு செல்லும் வழியில் நிகழ்ந்ததொரு சம்பவம் காரணமாக 2006 நவம்பர் 08 ஆந் திகதி அப்போதைய கடற்படைத் தளபதியின் தற்றுணிவின் பேரில் திகதி குறிக்கப்படாத சம்பளமின்றிய கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டதாகவும், 2010 ஆம் ஆண்டில் மாத்தறை மேல் நீதிமன்றில் | (அ) மனுதாரர் குற்றமுறையிலான மனித படுகொலை பற்றிய வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் குற்றமற்றவராக அறிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளாரென்பது<br><br>(ஆ) பின்னர் மனுதாரரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் பணியின் தேவை நிமித்தம் 2018.08.07 ஆந் திகதியிலிருந்து மீண்டும் தொண்டர் படை கடற்படை உப சேவையில் செயலூக்க சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றாரென்பது<br><br>(இ) பொதுவாக குற்றமுறையிலான மனித படுகொலை பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகின்ற கடற்படை நபரொருவரின் கடற்படைச் சேவை 1982 கடற்படை சம்பள நடவடிக்கைமுறைக் கோவையின் 22(4)(ஆ)(III) பிரிவின் பிரகாரம் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும், | இது தொடர்பாக சட்டமா அதிபரின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகளுடன் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி சட்டமா அதிபரினால் குழுவிற்கு அறிக்கையிடப்பட்ட பின்னர் சட்டமா அதிபரின் பங்கேற்புடன் மீள விசாரணையின் பின்னர் இறுதி விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும், இருப்பினும் 2017 மே 03 ஆந் திகதி முறைப்பாடு தள்ளுப்படி செய்யப்பட்டு குற்றமற்றவராக அறிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும், மீண்டும் தன்னால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் பிரகாரம் 2018 ஆகஸ்ட் 07 ஆந் திகதியிலிருந்து கடற்படையின் முனைப்பான சேவையில் அமர்ததப்பட்டாலும் 2020 மே 03 ஆந் திகதியிலிருந்து ஓய்வூதியமின்றி சம்பளமின்றிய விடுமுறையில் அனுப்பபப்பட்டதாகவும் தெரிவித்துள்ள மனுதாரர் மேற்படி குற்றவியல் வழக்கு காரணமாக தான் இழந்த லெப்டினன்ட் கமாண்டர் (தொண்டர் படை) பதவி 2010 மார்ச்சு 30 ஆந் திகதியிலிருந்து | மனுதாரர் தொண்டர் படை உத்தியோகத்தர்என்பதால், அவர் சம்பளமற்ற கட்டாய லீவில் அனுப்பபப்பட்டுள்ளாரென்பது<br><br>(இ) தொண்டர் படை உத்தியோகத்தர்கள் மற்றும் நிரந்தர கடற்படை பதவிகளுக்காக அமுலிலுள்ள சட்டங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் காரணமாக இந்த சந்தர்ப்பத்தில் மனுதாரருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பது. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அமுலுக்கு வரும் வகையிலும் கமாண்டர் (தொண்டர் படை) பதவி 2015 மார்ச்சு 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையிலும் மற்றும் கேப்டன் (தொண்டர் படை) பதவி 2019 மார்ச்சு 30 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையிலும் வழங்குவதோடு கடற்படை ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் 2006 நவம்பர் மாதத்திலிருந்து 2018 யூலை வரையிலான நிலுவைச் சம்பளத்தையும் வழங்குவதோடு ஓய்வூதிய உரித்தையும் வழங்குமாறும், கடற்படை உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வு பெறும்போது கடற்படையால் வழங்கப்படும் ஏனைய அனைத்து சலுகைகளையும் பெற்றுத்தருமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| **நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு** | | | | |
| 60 | திருமதி.கே.ஏ.எஸ். உதேஷானி COM/PP/2025/39 சமர்ப்பித்தவர்; கௌரவ நிஹால் கலப்பத்தி, பா.உ. 2025.08.21 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; MF1/11/03/04/NSB/ COPP திகதி: 2025.04.11 | 2009 ஆம் ஆண்டிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியில் வங்கி உதவியாளர் பதவியில் பணியாற்றியதாகவும், 2023 ஆம் ஆண்டில் ஹக்மன கிளையில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது பொய்யான குற்றச்சாட்டின் அடிப்படையில் குற்றப்பத்திரிகையொன்று வழங்கி அநீதியான முறையில் சேவையில் இருந்து விலக்கியதாக குறிப்பிடும் மனுதாரர் இழந்த தனது தொழிலை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | | இது தொடர்பாக தொழில் நியாயமன்றில் விசாரணையிலுள்ள முறைப்பாட்டின் இறுதித் தீரமானம் கிடைக்கும் வரையிலும் இந்த மனுவின் நடவடிக்கைகள் கிடப்பில் வைக்கப்படும். |
| **சுற்றாடல் அமைச்சு** | | | | |
| 61 | திரு.ஏ.ஏ.டி. நிஹால் கித்சிரி COM/PP/2025/251 சமர்ப்பித்தவர்; கௌரவ (டாக்டர்) தம்மிக்க | கலவான பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மனுதாரருக்குரிய 50 ஏக்கர் காணியில், நபரொருவர் | (அ) இந்த காணி 'அரசாங்கத்தினால் உரிமை கோரப்படாத காணி' என குறிக்கப்பட்டிருப்பதாகவும் | அறிக்கைகள் கோரப்பட்டிருப்பதோடு, அந்த அறிக்கைகள் கிடைத்த பின்னர் இந்த மனுவை |

| | | | | |
|---|---|---|---|---|
| | பட்டபெந்தி, பா.உ. 2025.07.22 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இலக்கம்; MWFRC/Dev/11/FR/LA/2022/10 திகதி: 2025.05.08 | சட்டவிரோதமாக பயிர்ச்செய்கை ஒன்றை மேற்கொண்டு வருவதோடு, கங்கலகமுவ வன வள உத்தியோகத்தர், கங்கலகமுவ கிராம அலுவலர் மற்றும் கலவான வன அடவி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து அந்த காணியை வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருப்பதாக குறிப்பிடும் மனுதாரர், அந்த கையகப்படுத்தலை இரத்துச் செய்து தருமாறும் காணிக்கு முன்மொழியப்பட்டுள்ள நுழைவுப் பாதையை வழங்குமாறும் கோரி இந்த மனு சமர்ப்பித்துள்ளார் | இருப்பினும் எவரும் சரியாக உரிமையை உறுதிப்படுத்தவில்லை என்றும், ஆகையால் கையகப்படுத்தும் பத்திர முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளதென்பது<br><br>(ஆ) இந்த காணிக்கு அருகாமையில காணப்படுகின்ற துண்ட இலக்கங்கள் 761 மற்றும் 762 எனும் காணிகளுக்காக மாற்று காணிகளை வழங்குமாறு உரிமையாளர்களால் கோரப்பட்டிருப்பதனால் கையகப்படுத்தும் பத்திர முன்மொழிவுகள் தயாரிக்கபடவில்லை என்பது.<br>(இ) இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு, 50 ஏக்கர் விஸ்தீரத்தையுடைய இந்த காணியின் சட்டரீதியான உரித்து மனுதாரரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், வனப்பாதுகாப்பு அறிக்கை, வனப்பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்தும், காணி பற்றிய சுற்றாடல் அறிக்கையும் சம்பந்தப்பட்ட காணியை அரசாங்கம் கையகப்படுத்திக் கொள்ள | குழுவில் மீள விசாரிக்கப்பட்டு பின்னர் இறுதி விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டுமா அல்லது இல்லையா என்பது பற்றிய தெளிவான விளக்கத்தை சுற்றாடல் அமைச்சிடமிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது | |
| **சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு** | | | | |
| 62 | திரு.அஜித் ஜயசேன<br>COM/PP/2025/135<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க, பா.உ.<br>2025.08.05 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>MH/AD/01/03/PP/05/2025<br>திகதி: 2025.06.05 | 2021 ஆம் ஆண்டிலிருந்து குருணாகலை போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய பிரிவில் விசேட சட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றுவதாகவும் 2025 ஆம் ஆண்டிற்கான இறுதி பணியிட நிலை பதவிக்கு விண்ணப்பித்தாலும் சுகாதார அமைச்சின் செயலாளரின் 02-161-2024 மற்றும் 2024.11.07 ஆந் திகதிய சுற்றுநிரூபத்தின் மூலம் அந்த பதவி வழங்கப்படவில்லை என்றும் அது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேன்முறையீடு செய்ததாகவும் பின்னர் சுகாதார அமைச்சின் பதில் கடமையாற்றும் செயலாளரின் 02-161-2024 இலக்கமுடையதும் | (அ) இறுதி பணியிட பதவிகளை உருவாக்குதல் சுகாதார அமைச்சின் நிபுணத்துவ குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படுவதாகவும், 2025 ஆம் ஆண்டிற்கான உத்தேச வெற்றிட ஆவணம் நியாயமான அறிக்கையாக இல்லாமல் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதனால், பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழு அதனை அங்கீகரிக்கவில்லை என்பது.<br><br>(ஆ) மேற்படி நிபுணத்துவ குழுவினால் 2025 ஆம் ஆண்டிற்காக புதிய பதவிகள் உருவாக்கப்படவில்லை என்றும், தற்போது காணப்படும் இடமாற்ற பதவிகளை இறுதி பணியிட நிலை பதவிகளாக நியமித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ள | அந்த அறிக்கைகள் கிடைத்த பின்னர் இந்த மனுவை குழுவில் மீள விசாரிக்கப்பட்ட பின்னர் இறுதி விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2024.11.03 ஆந் திகதிய சுற்றுநிரூபத்தின் மூலம் புதிய இறுதி பணியிட நிலை பதவிகள் அனைத்தும் இரத்துச் செய்து வெற்றிடமான பதவிகளுக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதாகவும், பகிரங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார உபகுழுவின் அறிவுறுத்தல்களின் பிரகாம் அவ்வாறு மாற்றப்பட்டதாக மேற்படி சுற்றுநிரூபத்தின் பிரகாரமான முகப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப் பதாகவும், சுகாதார அமைச்சின் செயலாளரின் 1617 இலக்கமுடையதும் 1994.02.02 ஆந் திகதிய சுற்றுநிரூபத்தின் பிரகாரம் போதனா வைத்தியசாலைகளி ல் கடமையாற்றும் சட்டவைத்திய நிபுணர்களை இறுதி பணியிடங்களையு டைய வைத்தியர்களாக கருதுவதாக கவனத்திற்கொண்டு இறுதி பணியிடங்களையு டைய பதவியொன்றை வழங்குமாறு கோரி மனுதாரரினால் | தாகவும், இறுதி பணியிட நிலை பதவிகள் உருவாக்கப்பட்ட பின்னர் இடமாற்றத்துடனான பதவிகளின் வெற்றிடங்களை கருத்திற்கொள்வது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல் ஆகையால், 2025 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த இடமாற்ற பட்டியலை தயாரிக்கும்போது ஏற்படும் தாமதத்தை தவிர்த்துக் கொள்வதற்காக புதிய பதவிகள் உருவாக்காது இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் அவ்வாறு இருப்பினும் எதிர்வரும் வருடங்களில் பணியின் தேவையின் நிமித்தம் புதிதாக போதனா வைத்தியசாலைகளாக மாற்றப்பட்ட வைத்தியசாலைகளிலும் இறுதி பணியிட நிலை பதவிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுமென்ப து<br><br>(இ) 2025 ஆம் ஆண்டிற்கான புதிய சேவை பதவிகளை உருவாக்காமையின் காரணமாக மனுதாரரின் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும் சமீபத்தில் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உருவாக்கப்பட்ட ஏனைய போதனா வைத்தியசாலகளிலும் குருணாகலை போதனா வைத்தியசாலையின் வேறு உப நிபுணத்துவ பிரிவுகள் இரண்டிற்காக இன்றளவிலும் இறுதி பணியிட நிலை பதவிகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் குருணாகலை போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய பிரிவிற்காக இறுதி பணியிட நிலை பதவியொன்று உருவாக்குவதற்காக மனுதாரரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அந்த வைத்தியசாலையின் பணிப்பாளரின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் மனுதாரர் இறுதி பணியிட நிலை பதவியை பெறுவதற்கு தகுதியுடையவர் என்பதும்<br><br>(ஈ) 2025 ஆம் ஆண்டிற்கான இறுதி பணியிட நிலை பதவிகளை உருவாக்குவது தொடர்பான சுகாதார அமைச்சின் நிபுணத்துவ குழு அறிக்கையுடன் குருணாகலை போதனா வைத்தியசாலை உட்பட ஏனைய போதனா வைத்தியசாலைகளில் உருவாக்க முடியுமென | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அடையாளங் காணப்பட்ட இறுதி சேவை நிலை பதவிகளின் வெற்றிடங்கள் அடங்கிய ஆவணமொன்றை குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பது | |
| **பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 63 | திரு.கே.எம்.அஜித தசநாயக்க<br>COM/PP/2025/64<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ நந்த பண்டார, பா.உ.<br>2025.08.05 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>02/03/23/48/2021<br>திகதி: 2022.02.18 | 1995.07.01 ஆந் திகதி இலங்கை பொலிசின் விசேட படையணியின் உப பொலிஸ் பரிசோதகராக சேவையில் இணைந்து கொண்டதாகவும், 2005 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதத்தில் கேகாலை பொலிஸ் பிரிவில் தலைமையக பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அக்காலப்பகுதியில் இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் சுற்றிவளைப்பு சம்பவமொன்றுடன் தொடர்புடையவாறு மனுதாரருக்கு எதிராக ஒரு குழுவொன்றினால் முறைப்பாடொன்று | (அ) மனுதாரர் கேகாலை ஊழல் ஒழிப்பு பிரிவில் பொறுப்பதிகாரியாக பணியாற்றியபோது இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கேகாலை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அனைத்து குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாகவும் அந்த சம்பவம் தொடர்பாக பொலிசார் ஆரம்பகட்ட விசாரணை மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணையை மேற்கொண்டு, மனுதாரர் உள்ளிட்டஅனைத்து பிரதிவாதி உத்தியோகத்தர்களையும் குற்றமற்றவர்களென விடுதலை | மனுதாரருக்கு எதிரான வேறு குற்றச்சாட்டுகள் அவரது சேவை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பின், ஏற்புடைய ஆவணங்கள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பதனால் ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் மனுதாரரை சேவையிலிருந்து நீக்கியிருந்தாலும் அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டு தற்போது கடமையில் ஈடுபட்டிருக்கும் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பிரகாரம் ஏதேனும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதன் பிரகாரம் மனுதாரர் உள்ளிட்ட ஐவருக்கு எதிராக கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முடிவில் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டு, கௌரவ நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனை வழங்கப்பட்டதாகவும், வழக்குடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது மனுதாரர் உள்ளிட்ட நபர்களை விடுவித்து விடுதலை செய்யுமாறு ஒழுக்காற்று அதிகாரியினால் முன்மொழியப்பட்டிருந்தாலும், பொலிஸ்மா அதிபர் அதனை கருத்திற் கொள்ளாது அவரது தற்றுணிவின் அடிப்படையில் சேவையில் இருந்து நீக்கியதாகவும் சேவையிலிருந்து நீக்கிய கட்டளையை இரத்துச் செய்து மீள பணியில் அமர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள் | செய்யப்பட்டுள்ளதென்பது.<br><br>(ஆ) 1449/12 எனும் இலக்க 2006.06.15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நீதிமன்றினால் எதிரிகளாக்கப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு அல்லது வேறு தண்டனைகளை வழங்க முடியுமென்பதால் 2011.05.11 ஆந் திகதியிலிருந்து பிரதி பொலிஸ்மா அதிபரினால் மனுதாரர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளாரென்பது.<br><br>(இ) 1999 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவியொன்றிற்கு தகுதியற்றவராதல் மற்றும் பதவி இழக்கப்படுவதற்கு அல்லது ஓய்வூதியம் அல்லது வேறு நன்மைகளை இழக்க | தண்டனைக்கு உட்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் அவரிடம் காணப்பட்டால் அதன் அறிக்கை ஒன்றை குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டதோடு, சம்பந்தப்பட்ட அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் தினத்தில் இந்த மனு குழுவில் மீள விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் இறுதி விதப்புரைகள் வழங்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ளது. | செய்தல் அல்லது இடைநிறுத்துவதற்காக ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையால் பாதிப்பு ஏற்படாது என்பதே மனுதாரரின் கூற்று | |
| **வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு** | | | | |
| 64 | திரு.ஜே.ஏ.யூ.ஏ. பெரேரா<br>COM/PP/2025/112<br>சமர்ப்பித்தவர்;<br>கௌரவ ருவன் மாபலகம, பா.உ.<br>2025.08.21 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.<br>அமைச்சின் தொடர்பு இலக்கம்;<br>FA/A13/Admin/<br>2024<br>திகதி: 2025.04.09 | 2013 ஆம் ஆண்டில் அபிவிருத்தி உத்தியோகத்தராக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவைக்கு இணைந்து உள்ளக இணைப்புகளின் பிரகாரம் அதன் வெவ்வேறு பிரிவுகளில் கடமையாற்றியதோடு, 2016.05.20 ஆந் திகதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெற்றிடமாக காணப்பட்ட நிறைவேற்று உதவியாளர் (ஒழுங்குமரபு) பதவிகள் நான்கிற்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கைமுறைக்கு அமைவாக அபிவருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து விண்ணப்பங்களை கோரி, திறந்த நேர்முகப்பரீட்சைக் | (அ) மனதாரர் பாராளுமன்ற பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு இந்த மனுவை சமர்ப்பித்த பின்னர் பிறிதொரு சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபைக்கு மேன்முறையீடு செய்துள்ள நிலையில் தற்பொழுது அதன் மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பது. | நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையில் விசாரிக்கப்படும் மேன்முறையீட்டை வாபஸ் பெறல் அல்லது பெறாமை மனுதாரரின் தற்றுணிவு சார்ந்த தீர்மானமென்பது சுட்டிக்காட்டப்பட்டதோடு,<br>அதுவரையில் இந்த மனு மீதான நடவடிக்கைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கு உட்படுத்தி மனுதாரர் உட்பட மேலும் மூவரை தெரிவு செய்ததாகவும், அதன்போது தாபனக் கோவையில் குறிப்பிடப்படாத வகையில் பதவிப் பெயரை மாத்திரம் வழங்கி நியமனக் கடிதங்களை வழங்கியதாகவும், பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உண்மையான பதவிக்கு உள்ளீர்க்குமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் எழுத்துமூலமாக கோரிக்கை விடுத்திருந்தாலும் அரசியல் தலையீட்டின் மூலம் வேறு இருவருக்கு மாத்திரம் திணைக்களத்திற்குரிய நிரந்தர நியமனங்கள் வழங்கியமையால், பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள மனுதாரர் இது தொடர்பாக நீதியான விசாரணையொன்றை மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ள நியமனத்தை திணைக்கள ரீதியான முறையான நியமனமாக வழங்குவதற்கு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவை சமர்ப்பித்துள்ளார். | | |
| **மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு** | | | | |
| 65 | திருமதி பீ. ஆர். பிரதீபிகா விதான COM/PP/2025/165 சமர்ப்பித்தவர்; கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா பா.உ. 2025.08.07 ஆந் திகதி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அமைச்சின் தொடர்பு இல: MWCA/02/01/24/03 திகதி : 2024.01.08 | ஊவா மாகாணத்தின் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற கதிர்காம “நெண சரண” சிறுவர் இல்லத்தை மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் “நெண சரண” சிறுவர் இல்லம் அமைந்துள்ள காணியின் அபிவிருத்திப் பணிகளை மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தி முன்னர் காணப்பட்ட கட்டிடத்தில் முன்னைய பணியாளர்களுடன் சிறுவர் இல்ல நடவடிக்கைகளை மீள ஆரம்பித்து மூன்று மாதங்களுக்கு நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பொதுமனுக்கள் பற்றிய குழு வழங்கிய விதப்புரையை உரிய அலுவலர்கள் நடைமுறைப்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ள மனுதார், உரிய அலுவலர்களை அழைத்து | (அ) கதிர்காம பிரதேசத்திலுள்ள தெருவோரச் சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சிறுவர் நிலையமானது , 2013ஆம் ஆண்டில் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு சிறந்த பௌதீக மற்றும் தரமான முன்னேற்றங்களை அடைந்துள்ள போதிலும், 2017 ஆம் ஆண்டின் பின்னர் “நெண சரண” சிறுவர் நிலையம் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தமையால் 2023 ஆம் ஆண்டில் மூடப்பட்டுள்ளது. (அ) உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களின் பற்றாக்குறை அரச சிறுவர் அபிவிருத்தி | அரசாங்கத்தின் புதிய கொள்கைகளுக்கு ஏற்றவகையிலும் நடைமுறையிலுள்ள சிறுவர் சட்டத் திருத்தங்களுக்கு அமைவாகவும் எழக்கூடிய புதிய சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு தற்போது மூடப்பட்டுள்ள “நெண சரண” சிறுவர் இல்லத்தை மீளத் தாபிப்பது தொடர்பாக மதீப்பீடொன்றை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையினை குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு விதந்துரைக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீண்டும் விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரி இந்த மனுவைச் சமர்ப்பித்துள்ளார். | நிலையத்தை நடாத்திச் செல்வதில் பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது. (இ) நன்நடத்தைக்கு உட்படுத்தும் சிறுவர்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், சிறுவர் சந்தேக நபர்கள் மற்றும் சிறுவர் குற்றவாளிகள் ஆகிய அனைவரையும் ஒரே சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கவைப்பதால் அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு வசதிகளை வழங்குகையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது. | |

இணைப்பு II

**மனுவொன்றின் மாதிரி படிவம்**

| | |
|---|---|
| "கௌரவ சபாநாயகர் அவர்களே,<br>இந்த மனுவை சமர்ப்பிக்கின்றேன்." | Comment 1:இந்த குறிப்பு தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரால் மனுவின் மேற்பகுதியில் குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும். (மனு உறுப்பினரின் முகப்பு கடிதத்தோடு சமர்ப்பித்தலானது போதுமானதல்ல) |
| சமர்ப்பிக்கும் உறுப்பினரின் கையொப்பம், திகதி மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை | Comment 2:உதா:- திசாநாயக்க முதியன்சேலாகே பத்ம பண்டார |
| மனுதாரரிள் முழுப் பெயர்:<br>வதியும் முகவரி:<br>(அலுவலக முகவரி அல்ல)<br>தேசிய அடையாள அட்டை இலக்கம்:<br>நிலையான தொலைபேசி இலக்கம்:<br>கையடக்கத் தொலைபேசி இலக்கம்:<br>ஏனைய:<br>திகதி: | Comment 3:உதா:- 65/5, பிலியந்தலை வீதி, மஹரகம |
| கௌரவ சபாநாயகர்,<br>இலங்கைப் பாராளுமன்றம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர<br>கோட்டே. | Comment 4:இந்த மனுவினால் கோரப்படும் நிவாரணங்களுடன் ஏற்புடையதாக, இதற்கு முன்னர் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் , அந்த மனுவின் இலக்கத்தை குறிப்பிடுதல் சாலச் சிறந்தது. |
| கௌரவ சபாநாயகர் அவர்களே,<br>(தலைப்பு) நேர்ந்துள்ள அநீதி, எதிர்பார்க்கும் தீர்வினை புரிந்து கொள்ளும் வகையில் தலைப்பு சுருக்கமாக இருத்தல் வேண்டும்,) | Comment 5:முறையாக லிவு பெற்றுக்கொண்டிருக்கும்போது, இழக்கச் செய்த எனது தொழிலை மீளப் பெற்றுக் கொள்ளுதல். |
| (நேர்ந்துள்ள அநீதி)<br>சம்பவத்துடன் தொடர்புடைய விடயங்களை தெளிவாக , திகதி காலப்பகுதியுடன், அந்த சம்பவம் மற்றும் பாதிப்புக்குள்ளாகிய நபர் பற்றி தொடர்புடைய நிறுவனத்திற்கு அல்லது அமைச்சிற்கு இலகுவாக | Comment 6:உதா:- திசாநாயக்க முதியன்சேலாகே பத்ம பண்டார ஆகிய நான் 2015.01.01 ஆந் திகதி பயிலுனர் உப பொலிஸ் கான்ஸ்டபிலாக (சொ.கோ 147) இலங்கை பொலிசில் இணைந்து மஹரகம |

| | |
|---|---|
| விடயங்களை தேடியறியக்கூடிய வகையில் அத்தியாவசியமான முக்கியமான விடயங்களை மாத்திரம் கண்ணியமான மொழியில் சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்படாத கூற்றுகள் அங்கு தவிர்க்கப்பட வேண்டும் என்பதோடு, அதற்கும் உறைகள் அல்லது கடிதங்கள் , ஆவணங்கள் மற்றும் அவற்றின் பிரதிகள் இணைத்தலாகாது. | பொலிசில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது 2019.05.30 ஆந் திகதி கடுமையாக நோய்வாயப்பட்டமையால், முறையாக 02 நாட்களுக்கு விடுமுறைக்கு விண்ணப்பித்து சேவை நிலையத்தில் இருந்து வெளியேறி இருந்தேன். இருப்பினும் நோய் நிலைமை தீவிரமடைந்ததால் களுபோவில போதனா வைத்தியசாலையில் 03 வார காலங்கள் தங்கியிருந்து சிகிச்சை பெற நேர்ந்தது. என்னை வைத்தியசாலையில் அனுமதித்திருப்பதாக தந்தி மூலம் 2019.06.02 ஆந் திகதி சேவை நிலையத்திற்கு அறிவித்திருந்தேன். இருப்பினும், 2019.06.15 ஆந் திகதிய கடிதத்தின் 2019.06.02 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் எனக்கு (அறிவிக்காது சேவைக்கு சமுகமளிக்கவில்லை என குறிப்பிடப்பட்டு) சேவை வெறிதாக்கல் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. தந்திச் செய்தியின் பற்றுச்சீட்டு, மருத்துவ அறிக்கைகளின் பிரதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தேவையான போது சமர்ப்பிக்க முடியும். |
| (எதிர்ப்பார்க்கும் நிவாரணம்)<br>எதிர்ப்பார்க்கும் நிவாரணம் யாதென்பது பற்றி சரியாகக் குறிப்பிட வேண்டும். | Comment 7: கௌரவ சபாநாயகர் அவர்களே, இது தொடர்பாக ஆராய்ந்து எனக்கு மீண்டும் தொழிலை பெற்றுத்தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் கோருகின்றேன். (இங்கு நியாயயத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அல்லது நிவாரணமொன்றை பெற்றுத் தருமாறு மாத்திரம் குறிப்பிடாது எதிர்ப்பார்க்கும் நிவாரணம், மேற்படி உதாரணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதியாக குறிப்பிடுதல் வேண்டும்) |
| (மனுதாரரின் கையொப்பம்)<br>மனுதாரரின் கையொப்பம்/பெருவிரல் அடையாளம் ( எழுதத் தெரியாத நபர் ஒருவர் சாட்சியாளர் முன்னிலையில் தனது பெருவிரல் அடையாளத்தை வைக்க வேண்டும்) | |

| | |
|---|---|